KALKI 24.11.96 ரூ. 3.00

கல்கி



போக்குவரத்துத்துறை அமைச்சருடன் ஓர் அதிரடி விஸிட்!

வருகிறது... ஒரு 'கார்' புரட்சி!



மாதுரி தீட்சித்தின் மற்றொரு ரசிகர்!

சனிக்கிழமை நடுராத்திரி பன்னிரெண்டு மணிக்கு எல்.ஐ.சி. வாசலில் பஸ் ஸ்டாண்டில் பேய் மாதிரி தண்டபாணி தனியாக உட்கார்ந்திருப்பதைப் பார்த்து அதிர்ச்சியடைந்தேன், ஸ்லோ மோஷனிலிருந்த 18 ஜெ பஸ்ஸிலிருந்து தாவி இறங்கி, கிட்டே போய், "என்ன தண்டபாணி? இந்த நேரத்துல, இங்க?"

"ஏன் கேக்கறே?, அவ்வை சண்முகி பிரீமியர் ஷோ- பாரடைஸ்ல. முடிச்சுட்டு, நண்பர்களோட அளவளாவிட்டு வர, லேட் ஆயிடுச்சி. பஸ்காரன் எவனும் நிறுத்தறதா தெரியலை. பேசாம ஒரு சுமோ வாங்கிடலாமான்னு யோசிச்சிட்டிருக்கேன்."

"நிதானமா யோசிச்சிக்கோ. எனக்கு ஏதாவது நியூஸ் உண்டா? உன்னைப் பார்த்ததும் ரெண்டு எண்பது டிக்கெட்டை வேஸ்ட் பண்ணிட்டு இறங்கியிருக்கேன்."

"விசேஷம் தான். கேளு. ஏதோ சாலை விபத்துல அடிபடறவங்களுக்கு ட்ரீட்மெண்ட் தர்ற நிறுவனத்துக்கு நிதி சேர்க்கறதுக்காக இந்த ஷோ ஏற்பாடு பண்ணியிருக்கார் கமல்."

"நல்ல விஷயம் தான்."

"எண்ணம், நல்ல எண்ணம்தான். ஆனா வந்திருந்த ரசிகக் குஞ்சுகள் நடந்துக்கிட்ட முறைதான் நாராசம்."

"என்ன பண்ணாங்க?"

"மவுண்ட் ரோடு களேபரமெல்லாம் போதாதுன்னு ஆயிரம்வாலா வெடியெல்லாம் வேற போட்டு, ஆரம்பமே படு கலாட்டா. உள்ள போனா -அரசியல் தொண்டர்கள் பிச்சை வாங்கணும்! அப்படியொரு கோஷ மழை! என்னங்கறே? 'வருங்கால ஜனாதிபதியே வருக!'ன்னு கத்தறாங்கப்பா!"

"யாரு? கமலைப் பார்த்தா? ஆச்சர்யமா இருக்கே?"

"இது ஒரு பக்கம்னா, படத்துக்கு வந்திருந்த ஜெமினி கணேசனைப் பார்த்து, 'சாம்பார், சாம்பார்'னு ஒரு கோஷ்டி உரக்கக் கிண்டல் பண்ண, மனுஷன் ரொம்ப அப்செட் ஆயிட்டாரு!"

"அடடா!"

"ஆறு மணிக்குன்னு சொன்ன படம்; ஏழு மணியாச்சு, தொடங்க! கமல் கிட்டப் போயி தொட்டுத் தொட்டுப் பார்க்கறதும் சீட் மேல ஏறி நின்னு விசில் அடிக்கறதும் காரே பூரேன்னு கத்தறதுமா படு ரகளை!"

"கமல் ரசிகர்கள் ரொம்பக் கட்டுப்பாடா இருப்பாங்கன்னு கேள்வி?"

"கட்டுப்பாடாவது? தட்டுப்பாடாவது? ஏண்டா வந்து மாட்டிக்கினோம்னு நிறையப் பேர் வெளிப்படையாவே புலம்பினாங்க."

"சே!"

"இத்தனை கலாட்டாவுக்கு நடுவுலயும் நான் உனக்காக ஒரு செய்தி சேகரிச்சுட்டேன்."

"உனக்கு நல்ல மனசு! சொல்லு தண்டபாணி!"

"படத்துக்கு சீமா பிஸ்வாஸ் வந்திருந்

தாங்க."

"யாரு?"

"அதாம்பா. பூலான் தேவி!"

"அட, அவங்க எங்க இங்க வந்தாங்க?"

"உன்னை மாதிரியே எல்லாருக்கும் இதே கேள்விதான். நான் ஒருத்தன் தான் கிட்டப்போயி விசாரிச்சேன்."

"உனக்கு ஹிந்தி வேற தெரியுமா?"

"அவங்களுக்கு இங்கிலீஷ் தெரியுமே?"

"உனக்கும் இங்கிலீஷ் தெரியுமா?"

"கிண்டலா? நியூஸ் வேணுமா, வேணாமா?"

"ஸாரி, சொல்லு!"

"அம்மணி கடந்த மூணு நாளா சென்னைல தான் முகாம். சொந்த காரியங்கள் சிலதோட, கமலோடவும் ஏதோ மீட்டிங் இருந்ததா தெரிய வருது."

"அதென்ன?"

• சீமாபிஸ்வாஸ்



"கேட்டேன். கமலோட அடுத்தப் படத்துல நடிக்கறீங்களா மேடம்னு. இல்லைன்னு சொல்லலை. ஆனா, பளிச்சுனு 'ஆமாம். நடிக்கறேன்'னும் ஒத்துக்கலை. பேச்சுவார்த்தை நடந்துட்டிருக்கறாப்பல தெரியுது?"

"பாண்டிட் குயின் போல புரட்சிகரமான படம் போல?"

"இதைக் கேட்டுத்தான் வம்புல மாட்டிக் கிட்டேன். மும்பாய்ல நிறையப்பேர் அவங் களை நடிக்க சொல்லிக் கேட்டு வராங்களாம். சொல்லி வெச்சாப்பல அத்தனை பேரும் 'கொஞ்சம் நிர்வாணமா நடிக்க வேண்டி இருக்கும்'ங்கறாங்களாம்!"

"நிர்வாணத்துல ஏதுய்யா கொஞ்சமும் நிறையவும்?"

"அதான்! 'ஸ்டிரிக்டா அத்தனை பேருக்கும் 'இல்லை'ன்னு சொல்லிடறதா சொன்னாங்க."

"நல்ல பாலிசி. போகட்டும். மானாவாரியா நிறைய படங்கள் வந்திருக்கே, எத்தனை தேறும்னு நினைக்கறே?"

"நான் நினைக்கறது இருக்கட்டும். விநியோகஸ்தர்கள் தரப்புல, படங்களைப் பார்த்துட்டு சொன்ன தகவல் என்ன தெரியுமா?"

"அவ்வை சண்முகி ஃபர்ஸ்ட். அதானே?"

"தப்பு. 'கொஞ்சம் லேட் பிக்கம் ஆகும்; ஆனாலும் நிச்சயமா லாபம் தரக்கூடிய படம் பாஞ்சாலங்குறிச்சிதான்னு விநியோகஸ்தர்கள் தரப்புல சொல்றாங்க."

"அட, பரவாயில்லையே? பிரபுவுக்கு ரொம்பநாள் கழிச்சி ஒரு பிரேக்கா?"

"எதுவும் இப்ப நாம முடிவா தீர்மானிக்க முடியாது, கிஷ்டா. வெதர் ரிப்போர்ட் மாதிரி தான்... இதுவும்! சரி உனக்கு ஃபிலிம் பெஸ்டிவல் அழைப்பு வந்துதா?"

"வந்திருக்கு..."

"இந்தமுறை இந்தியன் பனோரமா பிரிவுல இருபத்தொரு படங்கள் கண்டிப்பா இடம் பெறணும்னு அரசாங்கத் தீர்மானம்."

"சரி."

"ஆனா இந்த வருஷம் பதிமூணு படங்கள்தான் அந்த இடத்தைப் பிடிச்சிருக்கு. உபரித் தகவல்– இந்தப் பதிமூணுல ஒண்ணு கூட தமிழ்ப்படம் இல்லை."

"ஏன், படங்கள் தேர்வுக்கு வரலையாமா?"

"தேறலை! அதான் விஷயம். தேர்வுக் கமிட்டிகிட்ட அரசுத் தரப்புல கேட்டுப் பார்த்திருக்காங்க. நம்ம நாட்டுல நடக்கிற பட விழா... நம்ம படங்கள் நிறைய இருக்க வேணாமா அப்படீன்னு. ஆனா, இவங்க தீர்மானமா சொல்லிட்டாங்களாம். இருபத்தோரு படங்கள் நம்முது இருக்கணுங்கறது அரசாங்கத் தீர்மானம்னா லும் குப்பையையெல்லாம் நாங்க கிட்ட சேர்க்கறதா இல்லைன்னுட்டாங்களாம்."

"இந்தியன் வந்துரும்னு சிலர் எதிர் பார்த்துட்டிருந்தாங்க?"

"நீ வேற. இந்தியனை ஆஸ்காருக்கு அனுப்பினது பத்தி என்ன கமெண்ட் தெரியுமா? எண்பத்தொம்பதுல ஹாலிவுட்ல இதே கதையை, இதே மாதிரி–' எடுத்திருக்காங்களாம். அதை விடு. நான் சொல்ல வந்ததை மறந்துடப் போறேன்.

ஆஸ்காருக்கு அனுப்பற தரத்துல பெங்காலி டைரக்டர் ஷ்யாம் பெனகல் இந்த வருஷம் ஒரு படம் எடுத்திருக்கார். காந்தியடிகளோட தென்னாப்பிரிக்க அனுபவங்களை அடிப்படையாக வெச்சி எடுத்தப்படம். இதைத் தேர்வு செய்யாம 'இந்தியன்' எப்படிப் போச்சுன்னு வடக்குல சிண்டைப் பிச்சிக்கறாங்களாம்."

"இந்தியத் தந்தையா, இந்தியன் தாத்தாவான்னு குழம்பிட்டாங்க போல இருக்கு. விடு!"

"தாத்தான்னதும் ஞாபகம் வருது. நம்ப ஹுசேன் இருக்காரில்லை...?"

"யாரு? 'சரஸ்வதியின் செல்வர்' தானே?"

"அவரேதான். அவருக்கு சரியான போட்டியா இன்னொரு ஆள் கிளம்பியிருக்காரு."

"யாரு தண்டபாணி?"

"கபில் தேவ்! கிரிக்கெட் வீரர்! பம்பாய் வந்தா மாதுரியைப் பார்க்காம போறதில்லையாம். அவங்க படம் ஒண்ணு விடாம கேஸட் வாங்கி வெச்சிப் பார்த்துட்டு, வாயாரப் புகழ்ந்துட்டே இருக்காராம். 'இது மாதிரி ஒரு நடிகை நம்ம நாட்டுல பிறக்க நாம குடுத்து வெச்சிருக்கணும்'ங்கறாராம்! மும்பை புறநகர்ப் பகுதிகள்ல மாதுரியோட அடிக்கடி சுற்றுலா போறாராம் கபில்தேவ்!"

"அடப்பாவி! யார் சொன்னாங்க?"

"சொல்லணுமா? பம்பாய்லேர்ந்து வர்ற சினிமா பத்திரிகை எதை வேணா எடுத்துப்பாரு. இதான் இப்ப ஹாட் நியூஸ்!"

"கடவுள் காப்பாத்தட்டும்!"

"யாரை? கபில் தேவையா?"

"நீ வேற! நான் பொதுவா சொன்னேன்."

"என் பஸ் வர்றாப்பல தெரியுது. கடைசியா ஒரு செய்தி சொல்லிடறேன். எழுத்தாளர் பூமணி, 'கருவேலம்பூக்கள்'னு ஒரு படம் NFDC க்காக எடுத்திட்டிருக்கார், தெரியுமில்லை?"

'ஆமா?

"அந்தப்படம் ஷூட்டிங் முடிஞ்சுப் போச்சு. வடபழனி குமரன் காலனியில் ஒரு டப்பிங் தியேட்டர்ல வேலை நடந்துட்டிருக்கு. விஷயம் என்னன்னா, கரிசல் காட்டு ஜனங்களைப் பத்தின கதை அப்படீங்கறதால, வழக்கமா டப்பிங் பேசறவங்க பேசினா சரியா வராதுன்னுட்டு, அவங்க ஊர்லேருந்தே மக்க மனுஷாளைக் கூட்டிட்டு வந்து இயல்பா டப்பிங் பேச வெச்சிட்டிருக்காரு, பூமணி!"

"புதுசா இருக்கே?"

"சரி. வரட்டுமா? சீக்கிரம் வீடு போய் சேரணும். அப்புறம் என் சம்சாரம் நடு ரோட்டுல நிக்கவெச்சி, நாரடிச்சுடுவா!"

- கிச்சா

அருள்வாக்கு




மாதா-பிதா-குரு என்று மூன்றை வேதமே சொல்லியிருக்கிறதோ இல்லையோ? அதனால் மாதா, பிதாவைத் தானாக ஒரு புத்திரன் எதிர்த்துக் கொள்ளக் கூடாது என்றாலும், இப்போது நான்-குரு என்று பேர் வைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறவன் - சொல்வதால் வரதக்ஷிணை விஷயத்தில் மட்டும் மாதா பிதாவின் அபிப்பிராயம் சாஸ்திரப்படி இல்லாவிட்டால் பிள்ளைகள் அவர்களை எதிர்த்து வாதம், ஸத்யாக்ரஹம் பண்ண வேண்டும்.

இது நம் யுவர்கள், கான்ஸர் மாதிரி நம் சமூகத்தில் புரையோடி அரிக்கிற ஒரு கொடுமையை அகற்றி நம் சமுதாய மறுமலர்ச்சிக்குச் செய்கிற மகத்தான தொண்டாக இருக்கும். நம் மதத்தின் மேன்மையில் உள்ள நம்பிக்கைக்காக மட்டும் இன்றி, மனிதாபிமானக் கடமையாகவும் இதை நம் இளைஞர்கள் செய்ய முன்வர வேண்டும்.

நெடுங்காலப் பயிராகவும், எதிர்காலத்துக்கு உத்தரவாதமாயும், தார்மிகப் பாதுகாப்பாகவும் இருக்கிற விவாகம் என்ற விஷயத்தில் பெரியவர்கள் பார்த்துப் பெண்ணை நிச்சயம் செய்கிறபடி தான் பிள்ளைகள் செய்ய வேண்டும். ஆனால் அந்தப் பயிரையே பூச்சி அரிக்கிற மாதிரி வந்திருக்கிற வரதக்ஷிணைக் கொடுமைக்கு உடந்தையாக இருந்துவிடக் கூடாது. அப்பா, அம்மா சொற்படி கேட்பதோடு சமூகத்துக்குச் செய்ய வேண்டிய கடமையும் இருக்கிறதல்லவா? வரதக்ஷிணை கேட்டால் கல்யாணத்துக்குக் கண்டிப்பாக மறுத்துவிட வேண்டியது நம் பிள்ளையின் கடமை. இது குடும்பத்துக்கு, மதத்துக்கு, சமூகத்துக்கு, பெண் குலத்துக்கு எல்லாவற்றுக்கும் செய்கிற தொண்டு. இப்படியாக இளைஞர்கள் எல்லாம் சபதம் செய்து, அதை நிறைவேற்ற வேண்டும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.





வருகிறது... ஒரு கார் புரட்சி!

டில்லிக்கு அருகே குர்காவ் என்கிற இடத்தில் மாருதி கார் தொழிற்சாலை தொடங்குகிற வரை, இந்தியாவில் இருந்த கார் தயாரிப்பு நிறுவனங்கள் இரண்டே இரண்டுதான். காஞ்சியில் காமாட்சி, காசியில் விசாலாட்சி என்கிற மாதிரி பம்பாயில் ஃபியட், கல்கத்தாவில் அம்பாசடர். (சென்னையில் ஸ்டாண்டர்ட் எனச் சொல்லலாம் என்று பார்த்தால், இழுத்து மூடி ரொம்ப நாள் ஆச்சே!) 'அம்பாசடரில், ஹார்னைத் தவிர பாக்கி எல்லா பாகங்களும் சப்தம் போடும்' என்று கிண்டலடிக்காத ஆட்களே அப்போது இருந்ததில்லை! அயல்நாட்டு கார் வைத்திருந்தவர்கள் அபூர்வம். அதிலும் பென்ஸ் கார் வைத்திருந்தால் அந்தஸ்தே தனி.

'மக்கள் கார் வருகிறது. 45000 ரூபாய்தான் விலை' என்றார்கள். மாருதி வந்தது. இப்போது அதன் விலை சுமார் இரண்டு லட்சம் ரூபாய். இருந்தாலும், ஒரு லிட்டர் பெட்ரோலுக்கு 15 கிலோ மீட்டர் தரும் மாருதியை எல்லோருக்கும் பிடித்துப் போயிற்று. பிறகு மாருதி - 1000 வந்தது. தொடர்ந்து மாருதி எஸ்டீம் அறிமுகப்படுத்தப்பட்டது!

மன்மோகன் சிங்கின் காலத்திய 'லிபரலைசேஷன்' தூண்டிலில், அயல்நாட்டு கார் தயாரிப்பாளர்கள், இந்திய மார்க்கெட்டின் மீது கண் வைத்தார்கள். ஆகா என்று எழுந்தது பாருங்கள் 'கார் புரட்சி'!

நான் முந்தி நீ முந்தி என்று ஒவ்வொரு மாநிலமும் போட்டி போட்டுக் கொண்டு இந்த அயல்நாட்டு கார் தயாரிப்பாளர்களை வரவேற்றன. குறைந்தபட்சம்,





• பிரபாகரன்

நேரடியாக ஆயிரம் தொழிலாளர்களுக்கு வேலையும், மறைமுகமாகச் சுமார் பத்தாயிரம் பேருக்குப் பயன்களும் கிடைக்கிறபோது, மாநிலங்களுக்கிடையே இந்த அந்நிய முதலீட்டாளர்களை வசமாக்கிக் கொள்ளுவதில் போட்டா போட்டி கூட எழுந்தது!

மகாராஷ்டிரம், உலகப் புகழ்பெற்ற ஃபோர்டு நிறுவனத்தின் தொழிற்சாலையை நாசிக்கில் அமைக்க உதவியது.

இன்னொரு புகழ்பெற்ற நிறுவனமான ஜெனரல் மோட்டார்சை, குஜராத் இழுத்துக் கொண்டது. பிர்லாவின் கூட்டு முயற்சியில், ஹலோல் நகரில் ஜி.எம்.மின் 'ஓபல் ஆஸ்ட்ரா' உருவாகி, இந்தியச் சாலைகளை வலம் வரத் தொடங்கி விட்டது.

"உலகம் முழுக்க இரண்டு கோடிப் பேர் ஃபோர்டு கார் உபயோகிக்கிறார்கள். "பதினெட்டு வருடங்களாக பிரிட்டனில் ஃபோர்டுதான் ஃபேவரிட்" என்கிறார், சென்னை எம்.பி.எல். ஃபோர்டு மேலதிகாரி பிரபாகரன். (அட்டைப்பட ஷூட்டிங் எடுக்கும்போதே இரண்டு கார்கள் புக் ஆகிவிட்டன!)

"இந்தியச் சாலைகளின் கரடு முரடுக்கு இவை தாக்குப் பிடிக்குமா?" என்று 'ஓபல் ஆஸ்ட்ரா' அதிகாரி ராமானந்தைக் கேட்டோம் :

"இந்தியச் சாலைகளை மனத்தில் வைத்துக் கொண்டுதான் இங்கே இந்த கார்கள் தயாரிக்கப்படுகின்றன. ஹை கிரவுண்டு கிளியரன்ஸ், ஷாக் அப்சார்பர், சஸ்பென்ஷன் எல்லாமே நம்முடைய சாலைகளுக்கு ஏற்ற மாதிரி அமைக்கப்பட்டவை!" என்றார் ராமானந்த்.

"இத்தனை பிராண்ட் கார்கள் இந்தியா தாங்குமா? ஏற்றுமதி உண்டா?"

"இவை முழுக்க முழுக்க இந்திய மார்க்கெட்டுக்குத்தான். உற்பத்தி அதிகமாகிற பட்சத்தில் ஏற்றுமதியைப் பற்றி யோசிப்பார்கள்."

இந்த இரண்டு மாதங்களிலேயே, இருநூறு கார்களுக்கு மேல் இங்கே விற்றுப் போய்விட்டதாக ராமானந்த் தெரிவித்தார். "நல்ல ரெஸ்பான்ஸ்!" என்றார் ராமானந்த்.

கம்பெனிகள் தவிர, தனியாரும் இவற்றைச் சொந்தமாக்கிக் கொள்ளுவதில் முனைந்திருக்கின்றனர்.

விலை?

சுமார் ஏழரை லட்சம் ரூபாய்!

"1600 சிசியில், அதிகச் சக்தி வாய்ந்த இஞ்சின். எனவே கஸ்டமர்கள் விலையைப் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளுவதில்லை!" என்கிறார் ராமானந்த்.



டி.சி.எம்.மின் கூட்டுத் தயாரிப்பில் ('தாவூ'வுடன் இணைந்து) 'சீலோ'



• ஆஸ்ட்ரா'

கார்கள், ஃபோர்டு, ஆஸ்ட்ரா இவை இரண்டுக்கும் முன்னதாகவே இந்திய சாலைகளைக் கொஞ்சம் ருசி பார்த்திருக்கின்றன. அந்நிய கார்கள் மீது ஆர்வம் உண்டாக்கின.

ஃபோர்டையும், ஜி.எம்.மையும் இழந்து விட்டதில் கர்நாடக மாநிலத்துக்கு இருந்த வருத்தம், க்ரைஸ்லர் நிறுவனம், தும்கூர் அருகே தொழிற்சாலை தொடங்க ஒப்பந்தம் செய்துகொண்டவுடன், மறைந்து விட்டது!

இரண்டாயிரம் கோடி ரூபாய் முதலீட்டில், 1000சிசி கார்கள் தயாரிக்க, சமீபத்தில் ஒப்பந்தம் கையெழுத்தாகி விட்டது. மற்றவர்கள் எல்லாம் இந்தியத் தயாரிப்பாளர்களுடன் கூட்டு என்றால் க்ரைஸ்லர் முழுக்க முழுக்க, நூறு சதவிகிதம் சொந்த முயற்சி. ஏற்றுமதியிலும் இவர்கள் பங்கு உண்டு.

சென்னையில் கொரிய கார் தயாரிப்பு இனி விரைவில் தொடங்கவிருக்கிறது. ஹிந்துஸ்தான் மோட்டார்ஸின் உதவியோடு ஃபோர்டும் இங்கே 350 கோடி ரூபாய் முதலீட்டில் தொழிற்சாலை தொடங்கி விட்டது. 'கலைஞர் ஆட்சியில் சாதனை பாரீர்' என்று பட்டியல் போடுபவர்கள், இந்த இரண்டையும் மறக்காமல் சேர்த்துக் கொள்ளுவார்கள்!

ஏற்கெனவே பம்பாயில் இயங்கிவரும் ஃபியட், ப்யூகாட்- 309 உற்பத்தியைத் தொடங்கி, 'எங்கள் கார் ஆறு லட்சம், ஏழு லட்சம் எல்லாம் ஆகாது. ரொம்பக் குறைச்சல்தான்' என்று சொல்லுகிறது. (என்றாலும் மூன்று லட்சத்துக்குக் குறைவில்லை!) "சுசூகியிலும், தாவூவிலும் கிடைக்காத டீசல் வண்டிகள் ப்யூகாட்டில் கிடைக்கும். ஜனவரி 97-ல் 1800 கார்கள் விற்பனைக்கு வந்துவிடும்" என்கிறார்கள் பி.ஏ.எல். - ப்யூகாட் அதிகாரிகள்.

'பெட்ரோலும் வேண்டாம், டீசலும் வேண்டாம். எலக்ட்ரிக் கார்கள் தயாரிக்கிறோம்' என்று, இந்தியாவுக்கு வந்திருக்கிறது 'மைனி அமெரிகான் கார் கம்பெனி'. பெயர் 'ரீவா'. இதனை இயக்குவது பேட்டரிகள்தாம். இரண்டே சீட்கள் முன்னால். இரண்டே கதவுகள். பொல்யூஷன் பிரச்னையே கிடையாது. இதுவும் கர்நாடகத்திலுள்ள மாலூருக்குப் போய்விட்டது! நவீன விமான வடிவமைப்பு மட்டுமல்ல, பாதுகாப்புத் தொழில்நுட்பமும் இதில் இணைந்திருக்குமாம்.

இதெல்லாம் போதாது என்று, லக்சரி வேன் என்ற விளக்கத்தோடு 'யூரோ-கேப்', 'க்வான்ட்டம்' என்ற பெயரில் ஸ்போர்ட்ஸ் கார் தயாரிக்க, பாட்டியாலாவிலுள்ள ராஜ்புராவில், சி.எஸ். சவுத்ரி லண்டனிலுள்ள கான்செப்ட் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறார். சுமார் 700 கோடி ரூபாய் முதலீடு. மூன்றே ஆண்டுகளில் இனி 'க்வான்ட'த்தையும் 'யூரோ கேபை'யும் இந்தியாவில் பார்க்கலாம்!

எல்லாவற்றையும் நிதானமாகப் பார்த்துக் கொண்டிருந்த ரோல்ஸ் ராய்ஸ், இந்தியாவில் ஒரு டீலரை இப்போது நியமித்து விட்டது!

- சாருகேசி

அட்டை வண்ணப்படம் : **யோகா**

மாடல் : **ஃபோர்டு காரும் சாருலதாவும்**



விளக்கும் மனுஷ்.

11 வயது டைரக்டர்!

மனுஷ் நந்தனுக்குப் பதினொரு வயது. பள்ளிக்குப் போகிற வேலை தவிர கூடவே சின்னத் திரைக்கு சினிமாவும் டைரக்ட் செய்கிறான் என்றால் நம்ப முடிகிறதா? பத்து நிமிடம் ஓடும் இரு குறும் படங்களும் அசோக மித்திரனின் இரு 'அப்பா'க் கதைகளைக் கருவாகக் கொண்டவை.

முதல் படத்தில் அப்பா அம்மாவுக்கு நடுவில் படுத்து, ராத்திரியில் படுக்கையை நனைக்கிற குட்டிப் பொண்ணு. அப்பா தூக்கம் போச்சு என்று கோபப்படுகிறார். அம்மா சமாதானப்படுத்தி, டாக்டரிடம் கூட்டிப் போக வைக்கிறாள். என்ன மருந்து கொடுத்தாலும், மந்திரித்துக் கயறு கட்டினாலும், காலையில் ஜமுக்காளத்தைத் துவைத்துக் காயப்போடும் வேலை என்னமோ நிற்கவில்லை. அம்மாவும் குழந்தையும் வெளியூர்ப் பயணம். அப்பா குஷியாகத் தனிப் படுக்கை. விடிந்ததும் குழந்தை இல்லாமலேயே படுக்கை நனைந்து இருக்கிறது. சங்கடமாகச் சிரிக்கும் அப்பாவின் சிரிப்பு நம்மையும் தொற்றிக் கொள்கிறது.

அடுத்த படத்தில் சதா ஆபீஸ் டூர் போகிற, தனியார் கம்பெனியில் வேலை பார்க்கும் அப்பா, பத்தாம் வகுப்பு பாஸ் செய்கிற மகனோடு மார்க் லிஸ்ட் வாங்கப் போகிறார். மொத்தம் இருநூற்று ஐம்பத்தைந்து மார்க். "இந்த மார்க்குக்கு எந்த ஸ்கூல்லே ப்ளஸ் டு சேர முடியும்? மத்தவங்க எப்படி அதிகம் வாங்கினாங்க?" அப்பா கேட்கிறார். "சில பேர் பிட் அடிச்சாங்க." மகன் மெதுவான குரலில் சொல்கிறான். "அப்ப நீயும் அடிக்கறதுக்கென்ன?"

"கதை இந்த இடத்திலே முடிஞ்சுடும்... இது நடக்கறதுதான் அப்படீன்னாலும் மனசு கேட்கலை... பிட் எல்லாம் வேண்டாம்ப்பா... நான் இனிமே நல்லா படிக்கறேன்னு பையன் நம்பிக்கையாகச் சொல்ல, அப்பா அவனை அணைச்சுக்கற மாதிரி படத்தை முடிக்கலாமான்னு அசோகமித்திரன் சாரைக் கேட்டேன்... ஒகேன்னுட்டார்" மனுஷ் சந்தோஷமாகச் சொல்லும்போது குழந்தையாகத்தான் தெரிகிறான்.

சின்னச் சின்ன ஷாட்களில் அனுபவசாலி போல கதையை நகர்த்திப் போவது... டெல்லி கணேஷ் போன்ற பெரிய நடிகர்களை வெகு இயல்பாக நடிக்க வைத்தது... சின்னத் திரைக்கு இதமான கேமிரா கோணங்கள்.. மனுஷ் பெரிய மனுஷன்தான்.

"இவன் கொஞ்சம் பிடிவாதக்கார டைரக்டர்... தன்னோட ஒரு நண்பன்தான் மார்க் லிஸ்ட் கதையில நடிக்கச் சரியானவன்னு முடிவு எடுத்தான். கோயமுத்தூர்லே இருந்து அந்தப் பையன் கௌதம் வரணும். ஷூட்டிங் அன்னைக்கு மூணு மணி நேரம் ரயில் லேட்டா வந்து, சேர்ற வரைக்கும் டென்ஷன்... ஆனா பிடிச்ச பிடியை விடலியே..." மனுஷின் அம்மா பத்மா சொன்னார்.

"படிக்கற பழக்கம் குறைந்து கொண்டே வரும் இந்தக் காலத்தில், தனக்கு இரண்டு தலைமுறை மூத்த அசோகமித்திரனின் கதையைப் படமாக்க வேண்டும் என்பது மனுஷ்க்கு எப்படித் தோன்றியது?" என்று அவன் அப்பாவைக் கேட்டோம்.

"எங்கப்பா என் கையிலே புத்தகத்தைக் கொடுத்தார்... நான் என் பிள்ளை கையிலே புத்தகத்தையும் வீடியோ காமிராவையும் கொடுத்தேன்... எதிர்காலத்துலே அவன் தன் பொண்ணு கையிலே புத்தகத்தையும் காமிராவையும், கூடவே காலத்துக்குப் பொருத்தமா வேறே எதையாவது கொடுக்கட்டும்... தலைமுறை இடைவெளி நிச்சயமாக் குறையும்..."

மனுஷின் அப்பா பத்திரிகையாளரும், நாடகாசிரியரும், சின்னத்திரை தயாரிப்பாளருமான ஞாநி.

பின்குறிப்பு : சென்னை வெங்கடேஸ்வரா மெட்ரிகுலேஷன் பள்ளியில் ஏழாம் வகுப்பு படிக்கும் மனுஷின் இரண்டு திரைப்படங்களும் குழந்தைகள் தினத்தன்று மாலை சென்னைத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பு செய்யப்பட்டன.

— அஸ்வின்

வி.ஐ.பி. குடும்பங்கள்



கூட்டுக்

"ஒரு மனிதனுக்கு குடும்பங்கிறது எந்த அளவுக்கு முக்கியம்னா கேட்கறீங்க? குடும்பத்தைத் தவிர வேறு எதுவுமே முக்கியமில்லேன்னு நான் சொல்லுவேன். நல்ல குடும்பங்கிறது கடவுளின் மிகப் பெரிய ஆசீர்வாதம்.

எல்லோருக்கும்தான் பத்து விரல்கள் இருக்கு. ஆனால் பீத்தோவனின் விரல்கள் இசைக் காவியங்களை உருவாக்கினது. ஏ.ஆர்.ரஹமானின் விரல்களில் விளையும் டியூன்கள் திரை ரசிகர்களை சொக்க வைக்குது. டெண்டுல்காரின் விரல்கள் ஏற்படுத்தும் விளாசல்கள் இந்திய கிரிக்கெட் அணிக்கே ஒரு தனி மதிப்பைக் கொடுக்கிறது என்பதை மறுக்க முடியுமா?

"கிரியேடிவிடின்றது, கடவுள் கொடுக்கும் வரம்னு சொல்வதுண்டு. என்னைப் பொருத்தவரை இந்த கிரியேடிவிடியை செயல்வடிவமாக்க ஒரு நல்ல குடும்பச் சூழல் அமைய வேண்டியது அவசியம். இதனால்தான் 'தனி மரம் தோப்பாகாது'ன்றாங்க. ஒரு தனி மரம் காய்களைக் கொடுக்கலாம். ஆனால் தோப்பின் அழகே அலாதிதான் இல்லையா?"

பொழிந்து தள்ளிவிட்டார் கிரேஸி மோகன்.

"குறிப்பாக உங்கள் குடும்பத்தைப் பற்றி" என்றோம்.

"எங்களுடையது குடும்பங்கிறதைவிட, குடும்பமோ குடும்பம்ன்னுதான் சொல்லணும். கொழுத்த கூட்டுக் குடும்பம். என் கதை வசனங்களுக்கு வீட்டிலேயே ஒரு இருபது இருபத்தஞ்சு ஆடியன்ஸ் உண்டு!

மற்ற சிலருக்கு ஹோட்டலில் தனி ரூம், பூங்காவில் குறிப்பிட்ட அமைதியான மூலை இப்படியெல்லாம் இருந்தால்தான் எழுத வரும். எனக்கு கலகலன்னு அரட்டையும் சப்தமுமாய் இருக்கிற இந்த வீட்டின் நடுக் கூடத்திலே உட்கார்ந்து கொண்டுகூட தடங்கல் இல்லாமல் எழுத முடியும். அந்த அளவுக்கு என் குடும்பத்தின் சூழ்நிலை என்னில் ஒரு பகுதியாயிடுத்து. வீட்டுப் பொறுப்பை மத்தவங்க பார்த்துக்கிறதாலே என்னாலே நிம்மதியா கதை, வசனம் எழுதுவதில் முழு கவனம் செலுத்த முடியறது."

அதாவது குடும்பப் பொறுப்பில்லாமல் ஜாலியாக தனக்கு விருப்பமானதை மட்டுமே செய்ய ஏற்றதாக இருப்பதால் கூட்டுக் குடும்பத்துக்கு வோட்டுப் போடுகிறாரா?

"அதெல்லாம் இல்லை. ஓர் அரசாங்கத்திலே நிதி அமைச்சர், தொழில் அமைச்சர்னு பொறுப்பைப் பலருக்கும் பகிர்ந்து கொடுத்தால், அது பொறுப்பில்லாத்தனம் என்றா அர்த்தம்? கமல ஹாசன் சொல்வதுண்டு: "நீங்கள் வசனம் எழுதறதிலே மட்டும் கவனம் செலுத்துங்க. இதுக்கேத்த செட்டிங் சரியாக ரெடியாகுமா? லொகேஷன் பிக்ஸ் ஆகுமா- இந்தக் கவலையெல்லாம் பட வேண்டாம். அப்போதான் வசனம் நல்லா வரும்" என்று. பி.டி.உஷாவைப் பார்த்து "நீ சமைக்க வேண்டாம். ஓடிக்கிட்டே இரு" என்று அவரது குடும்பத்தினரும், அவர்

குடும்பத்துக்கு ஜே!

ஓடினால் போதும் வேலையே செய்ய வேண்டாம் என்று அவர் பணிபுரியும் நிறுவனத்தின் நிர்வாகிகளும் சொன்னால், அது பொறுப்பில்லாத்தனமா? சொல்லப்போனால் எல்லா அதிகாரத்தையும் ஒருத்தரே வச்சிக்கிறதுதான் ஆபத்தில் முடியும்- ஹிட்லரின் சர்வாதிகாரம் போல."

கூட்டுக்குடும்பம் பற்றிய மோகனின் கருத்துக்களை "ரொம்ப கிரேஸி" என்று அவர் மனைவி நளினி சொல்லக் காணோம். பெங்களூரில் வளர்ந்தவர். டெல்லி பல்கலைக் கழகத்தில் பி.ஏ பொருளாதாரம் முடித்தவர்.

"என் பிறந்த வீட்டிலே ரொம்ப சின்ன சைஸ் குடும்பம்தான். அதில் உள்ள சிறப்புகளும் எனக்கு தெரியும்னாலும், கூட்டுக் குடும்பம்தான் பெஸ்ட்ன்றது என் கருத்து. இவர் தரப்பு உறவினர்களை என் சொந்தமாகவே நினைப்பதால் பல சந்தோஷங்கள். தவிர கூட்டுக் குடும்பத்திலே இருந்து பார்த்தால்தான் அதன் மகிமை தெரியும்'' என்கிறார் பதினெட்டு வருட கூட்டுக் குடும்பவாசியான இவர்.

எந்த இரண்டு பேருக்கும் எல்லா விஷயங் களிலும் ஒரே மாதிரி கருத்து இருக் காதே? தம்பதியர் கொஞ்சம் வேறுபட்டு சிந்திக்கும் விஷயம் குழந்தைகள் வளர்ப்பு தொடர்பானது.

"கொஞ்சமாவது கண்டிப்பா இருந்தால்தான் பிள்ளைகள் உருப்படியாக வளருவாங்கன்றது என் கருத்து. ஆனா இவர்...'' என்று நளினி தொடங்க, வேகமாக மறுத்தார் கிரேஸிமோகன்.

"எனக்குத் தெரிந்த ஒருவர் எம்.பி.ஏ படிச்சுட்டு, நல்ல வேலையில் இருக்கும் மகன், தம்மை கவனிப்பதே இல்லை என்று குறைபட்டுக் கொண்டார். நல்ல ஆரோக்கியம், சிறந்த படிப்பு இவை மகனுக்குக் கிடைக்கணும்ங்கறத்துக்காக தொடர்ந்து ஓவரான கண்டிப்பைக் காட்டியிருக்கிறார் அவர். அதனால் மகனுக்கு அவரிடம் விரோதம்தான் வளர்ந்திருக்கு. என்னைப் பொறுத்தவரை குழந்தைகளிடம் கண்டிப்பே கூடாது. இவ்வளவு செல்லம் கொடுத்தால் குட்டிச் சுவராயிடுவான் என்று சொல்கிறார்களே, அந்த லிமிட்டையும் தாண்டி குழந்தைகளை இதமாவும் செல்லமாவும் வளர்க்கணும்னு சொல்வேன். அப்படி வளர்த்தா அவங்க ஒண்ணும் குட்டிச்சுவரா ஆயிடமாட்டாங்க. நல்லா வருவாங்க. பிற் காலத்திலே நம்மிடம் பாசமாவும் இருப்பாங்க!"

தங்களுக்குச் சாதகமான, தந்தையின் இந்தக் கருத்துக்களை ரசித்துக் கேட்டுக் கொண்டிருந்தார்கள் பத்மநாபனும், செண்பகராமனும். பெரியவன் செண்பகராமன், வேணுகோபால் வித்யாலயாவில் ப்ளஸ் டூ படிக்கிறான். அடுத்தவன் பத்மநாபன் படிப்பது பி.எஸ்.சீனியர் செகண்டரி பள்ளியில் ஏழாம் வகுப்பு.

"என் மனைவி வேலைக்குப் போகாதது எனக்கு மிகவும் சௌகரியமான ஒரு விஷயம். என் தொழிலில் முழு கவனம் செலுத்த முடிகிறது. இப்படிச் சொல்வதால் என்னை ஏதோ ஆணாதிக்கக் காரன் என்று சிலர் கருதலாம். ஆனால் என் மனைவிக்கு ஒரு தனி திறமை யிருந்து, அதற்கு இப்படி ஒரு அங்கீகாரம் கிடைத்தால், நான் என் வேலையை விட்டுட்டு, குடும்பச் சுமையை ஏற்றுக்கொண்டு அவள் துறையில் பெரும் புகழ் பெற உதவியிருப் பேன்!"

வேலையை விடுவது என்ற பேச்சு வந்ததும், மீண்டும் பழைய நினைவுகளை மலர விட்டார். "எம்.டெக் படிச்சுட்டு மாசம் பத்தாயிரம் ரூபாய் சம்பளம் கிடைச்சுகிட்டிருந்த சுந்தரம் க்ளேட்டன் வேலையை விட்டு நான் நாடகத்தில் கவனம் செலுத்தத் தீர்மானித்த போது, எனது கூட்டுக்குடும்பம்தான் பெரிய பக்கபலமாக இருந்தது. தனிக்குடித்தனமாக இருந்திருந்தால் இந்த ரிஸ்கை நான் எடுத்திருப்பேனாங்கறது சந்தேகம். இந்தப் பரவலான அங்கீ காரம் நிச்சயம் எனக்குக் கிடைத்திருக்காது. அதுவும் தாத்தா வெங்கடகிருஷ்ண அய்யங்கார் எனக்கு தனி பலம். 'மரம் வச்சவன் தண்ணி ஊத்துவான்னு' உற்சாகம் கொடுத்தார். இந்தக் காலத்திலும் கூட்டுக் குடும்பத்துக்கு அடிப்படை ஆதரவு இல்லாமல் போகவில்லை. பெரிய திருப்பம், சண்டைக் காட்சிகள் எதுவுமில்லாத "ஹம் ஆப்கே ஹெய்ன் கோன்?'' பெரிய வெற்றி பெற்றது அதிலுள்ள கூட்டுக் குடும்ப இழையின் இனிமையில்தானே!"

— அருண் சரண்யா

படங்கள் : யோகா

— கிரேஸி மோகன்

23.10.96 முதல் திருத்தப்பட்டுள்ள வட்டி விதங்களில் டெபாசிட்டுகளை ஏற்கிறது.

குமுலேட்டிவ் டெபாசிட்

காலம் (மாதங்களில்)	முதிர்வு தொகை (ரூ. 1000த்திற்கு)	ஆண்டு வருவாய் %
12 மாதங்கள் + 1 நாள்	1,161	16.06 %
18 மாதங்கள்	1,269	17.93 %
25 மாதங்கள்	1,407	19.54 %
30 மாதங்கள்	1,525	21.00 %
36 மாதங்கள்	1,684	22.80 %

ஃபிக்செட் டெபாசிட்

காலம் (மாதங்களில்)	வட்டி வீதம்
12 மாதங்கள் + 1 நாள்	15.00 %
18 மாதங்கள்	16.00 %
25 மாதங்கள்	16.50 %
30 மாதங்கள்	17.00 %
36 மாதங்கள்	17.50 %

(இந்திய ரிசர்வ் வங்கியின் விதிமுறைப்படி) டெபாசிட்டுகளின் மீது புரோக்கரேஜ் அளிக்கப்படும்.
12 மாதங்கள் + 1 நாள் / 18 மாத டெபாசிட்டுகளுக்கு - டெபாசிட் தொகையில் 1.5% ஊக்கத்தொகை.
25/30/36 மாத டெபாசிட்டுகளுக்கு - டெபாசிட் தொகையில் 2.0% ஊக்கத்தொகை.

சக்தி ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம் : 475, டாக்டர் நஞ்சப்பா சாலை, கோயம்புத்தூர் - 641 018.

சக்தி ஃபைனான்ஸ். வங்கிகளுக்கு இணையான பாதுகாப்பு.

மேலும் விபரங்களுக்கு தி ஹிந்து மற்றும் தினமலரில் 23.10.1996 அன்று வெளியான சட்டபூர்வமான விளம்பரத்தைப் பார்க்கவும்.

AKSHAR



• பாடிபில்டிங் யூனிட்டில்...

சென்னை நகர மக்களுக்குப் பல்லவன் பஸ்கள் எந்த அளவுக்குச் சேவை செய்கின்றன? போக்குவரத்துத் துறை அமைச்சர் பொன்முடியோடு சில இடங்களுக்குத் திடீர் விசிட் செய்து பார்த்தபோது...

போக்குவரத்து!

அடையாறிலுள்ள பல்லவன் போக்குவரத்துக் கழக டெப்போவுக்கு முதலில் சென்றோம். அந்த டெப்போவிலுள்ள பஸ்கள் எப்படியெல்லாம் பராமரிக்கப்படுகின்றன? டெப்போ முழுவதையும் முழுமையாக ஒரு ரவுண்ட் அடித்தார் அமைச்சர். கூடவே பல்லவன் போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர் ரங்கநாதன் மற்றும் நாம்.

"முன்பு உதிரிபாகங்கள் கிடைக்காத ஒரு



• திருவான்மியூர் பஸ்நிலையத்தில் பஸ்களின் கால ...ணையைப் பரிசோதிக்கிறார் அமைச்சர்...



• "இந்த பஸ்ஸின் புறப்படும் நேரம் என்ன?" - 1D பஸ்டிரைவரிடம் அமைச்சர் கேட்கிறார்...

அமைச்சருடன் ஓர் அதிரடி விசிட்!

நிலை. இப்போது அப்படியில்லை. எல்லா பாகங்களும் கிடைக்கச் செய்திருக்கிறோம்..." என்று நம்மிடம் சொன்ன அமைச்சரிடம், "சில பஸ்கள் மழையில் ஒழுக ஆரம்பித்து விடு கின்றனவே..." என்றோம்.

"டெப்போவில் பஸ்களை கழுவிச் சுத்தம் செய்கிறபோது, ஒழுகுகிறதா என்று கவனித்து அதையும் சரிசெய்கிறார்கள்..." என்ற அமைச்சர், டெப்போவிலிருந்த ஒரு பஸ்ஸைக் கொண்டு வரச் சொல்லி கழுவுகிற இயந்திரத்தில் கழுவிச் சுத்தம் செய்யச் சொன்னார்.

ஏதோ ஒரு பஸ்ஸைக் கொண்டு வந்த ஊழியர்கள், "இந்த பஸ் சமீபத்தில் கழுவிச் சுத்தம் செய்யப்பட்டதுதான்!" என்றார்கள்.

பஸ்ஸை இயந்திரம் சுத்தம் செய்ய ஆரம்பித்தபோது, பஸ்ஸின் பின்பகுதியிலுள்ள டேஞ்சர் லைட் பகுதியை ஓர் ஊழியர் தண்ணீரைப் பீய்ச்சியடித்துச் சுத்தம் செய்தார். அதிலிருந்து ஏகப்பட்ட மண் சேறாக வெளியேறியது.

"சமீபத்தில் சுத்தம் செய்யப்பட்ட பஸ்ஸிலா இத்தனை சேறாக வெளிவருகிறது? இது சுத்தம் செய்யப்பட்டு மாதக் கணக்கில் இருக்கும் போலிருக்கிறதே!" என்றார் அமைச்சர்.

"புழுதி எக்கச்சக்கமாகக் காற்றில் இருப்பதால்தான் சார் இப்படிப் படிந்து விடுகிறது..." என்று சமாளித்தார்கள் டெப்போ ஊழியர்கள்.

"முந்தைய ஆட்சியில் பழைய டயர்களையே புதுப்பித்துப் புதுப்பித்து ஓட்டிக் கொண்டிருந்தார்கள். அது தவறில்லை. ஆனால் அப்படிப் புதுப்பிக்கப்பட்ட டயர்களைக் கூட புது டயர்கள் என்று கணக்குக் காட்டியதுதான் கொடுமை. இப்போது அதை மாற்றி, நிஜமாகவே புதிய டயர்களை வாங்கியிருக்கிறோம், வந்து பாருங்கள்..." என்று அழைத்துச் சென்று, நம்மிடம் புதிய டயர்களைக் காண்பித்தார் அமைச்சர்.

"அடுத்து திருவான்மியூர் பஸ் நிலையத்துக்குச் செல்லலாமா?" என்று நாம் கேட்க, "சரி" என்று புறப்பட்டார் அமைச்சர்.

போகிற வழியில் 23-E பஸ் ஒன்று சாலையோரத்தில் நின்று பயணிகளை ஏற்றியிறக்காமல் சாலையை அடைத்தபடியே நின்று கொண்டிருந்தது!

காரை நிறுத்தச் சொன்ன அமைச்சர், "இப்படியெல்லாம் நிறுத்தினால் போக்குவரத்து என்னய்யா ஆவது? ஓரத்தில் நிறுத்துவதற்கு என்ன?" என்று அந்த டிரைவரை ஒரு பிடி பிடித்தார்.

"இல்லீங்க. ஓரத்தில் நிறுத்த முடியாத படிக்கு ஜனங்க நின்னுக்கிட்டிருந்தாங்க. அதனாலதான் இப்படி நிறுத்திட்டேன்..." என்று சமாளித்தார் டிரைவர்.

"ஜனங்க அப்படி நின்னா இன்னும்



• பஸ்ஸுக்குள் ஏறிப் பார்த்தபோது புகார் கூறும் கதா...

கொஞ்சம் முன்னாடி போய் ஓரத்தில் நிறுத்த வேண்டியதுதானே... இதெல்லாம் ஒரு காரணமா?" என்று விடாமல் கேட்ட அமைச்சருக்கு, "இனிமேல் அப்படியே செய்யறேன் சார்!" என்று சமாதானம் கூறினார் அந்த டிரைவர்.

திருவான்மியூர் பஸ் நிலையத்துக்குள் நாங்கள் நுழைந்தபோது, 1D பஸ் எண்ணூருக்குக் கிளம்பத் தயாராயிருந்தது.

"இந்த பஸ் எத்தனை மணிக்குப் புறப்பட வேண்டும்?" – அந்த பஸ்ஸின் டிரைவரிடம் கேட்டார் அமைச்சர்.

டிரைவருக்குச் சரியாகப் பதில் சொல்லத் தெரியவில்லை. இன்னொரு பஸ்ஸின் டிரைவரோ, "டீ சாப்பிட்டு வந்ததும் புறப்பட வேண்டியது தான் சார்!" என்றார். "ஒரு டிரைவருக்கே புறப்படுகிற நேரம் சரியாகத் தெரியவில்லை என்றால் எப்படி? எங்கே டைம் கீப்பர்?" என்றபடி டைம் கீப்பர் அறைக்குள் நுழைந்து, அட்டவணையைப் பார்த்தார். அமைச்சரைத் திருப்திப்படுத்துகிற மாதிரி அட்டவணையில் சரியான நேரங்கள் குறிக்கப்பட்டிருக்கவில்லை!

"இனி ஒவ்வொரு பஸ்ஸிலும் புறப்படுகிற நேரங்களையும் கடைசி இடங்களை போய்ச் சேர வேண்டிய நேரங்களையும் சரியானபடி எழுதி வைக்க ஏற்பாடு செய்யுங்கள்!" என்று உடன் வந்த பல்லவன் மானேஜிங் டைரக்டரிடம் கூறினார் அமைச்சர்.

"ஸ்பேர் பஸ்களை விடுகிற போது பிரச்னை



• கே.கே.நகர் டெப்போவில்...

வருங்களே சார்..." என்றார் எம்.டி.

"அதிலென்ன பிரச்னை? அந்த ஸ்பேர் பஸ் எந்த டைமுக்கான பஸ்ஸுக்காகப் புறப்படுகிறதோ, அந்த பஸ்ஸின் அட்டவணையை வைத்துவிட வேண்டியதுதானே?" என்ற அமைச்சர், பஸ் நிலையத்தைச் சுற்றிப் பார்த்தபடியே புறப்படத் தயாராயிருந்த ஒரு பஸ்ஸுக்குள் ஏறினார்.

அந்த பஸ் புறப்படப் போகிறது என்பதை மைக்கில் அறிவிப்பதைக் கேட்ட அமைச்சர், "இதே மாதிரி ஒவ்வொரு நாளும் மைக்கில்

அறிவிப்புச் செய்கிறார்களா, அல்லது நான் வந்திருப்பதால் இப்படி அறிவிப்புச் செய்கிறார்களா?" என்று பஸ்ஸுக்குள் அமர்ந்திருந்த பயணிகளிடம் அமைச்சர் கேட்டபோது, "தினசரி இப்படி அறிவிக்கிறார்கள்!" என்றனர் பயணிகள்.

புறப்படப் போகும் அந்த பஸ்ஸில் அப்போதுதான் கண்டக்டர் டிக்கெட் கொடுக்க ஆரம்பித்ததைக் கவனித்த அமைச்சர், "பஸ் புறப்பட்ட பிறகுதான் டிக்கெட் கொடுக்க வேண்டுமா? புறப்படுவதற்கு முன்பே டிக்கெட் கொடுக்க வேண்டியதுதானே? பஸ் நிலையத்தை விட்டு வெளியே போய், டிக்கெட் கொடுப்பதற்காக ஐந்து பத்து நிமிஷம் பஸ்ஸை நிறுத்துவீர்கள். அதனால் போய்ச் சேர வேண்டிய இடத்துக்கு லேட்டாகப் போய்ச் சேருவீர்கள். அப்புறம் எப்படி நம்மை மக்கள் பாராட்டுவார்கள்? நேரத்துக்குப் போய்ச் சேருவது முக்கியமில்லையா?" என்று கண்டக்டரிடம் கேட்க, அசடுவழிந்தார் கண்டக்டர்.



இந்தச் சமயத்தில் சுதா என்ற பெண்மணி, "T51, 51H பஸ் ரூட்டில் உள்ள எங்கள் பள்ளிக்கரணையில் பஸ்கள் நிற்பதேயில்லைங்க...!" என்று புகார் கூற, எம்.டி.யிடம் ஆவன செய்யச் சொன்னார் அமைச்சர்.

ராஜு என்ற இன்னொரு பயணி, "நான் புத்தம் புது பேண்ட் போட்டுக் கொண்டு வந்தேன் சார். நேற்று ஒரு பஸ்ஸில் உட்கார்ந்து பயணம் செய்தபோது, சீட்டிலுள்ள ஒரு ஸ்குரு ஒன்று பேண்ட்டைக் கிழித்து விட்டது!" என்றார்.

உடனே அந்த பஸ்ஸிலுள்ள சீட்களையெல்லாம் பார்வையிட்டபோது, எல்லாம் சரியாகவே இருந்ததில் அமைச்சருக்கு திருப்தி!

அந்த பஸ்ஸிலிருந்து இறங்கி வந்தபோது, 47D பஸ் ஒன்று நிறுத்தப்பட்டிருந்தது. ஆனால் அந்த பஸ்ஸின் எஞ்ஜின் இயங்கியபடியே இருந்தது. இதை நாம் அமைச்சரிடம் சுட்டிக் காட்டியபோது, அதன் டிரைவரை அழைத்து வரச் செய்தார் அமைச்சர்.

"ஏன் இப்படி? இது புறப்படுவதற்கு இன்னும் எவ்வளவு நேரம் இருக்கிறது?"

"பதினைந்து நிமிடங்களுக்கு மேல் இருக்கிறது சார்!"

"அவ்வளவு நேரமும் எஞ்ஜின் இயங்கிக் கொண்டிருந்தால் எவ்வளவு டீசல் வீணாகும்?"

"எஞ்ஜினை ஆஃப் செய்து விட்டால் மறுபடி ஸ்டார்ட் செய்ய முடியாது சார்!" என்று டிரைவர் சொன்னதும் அமைச்சர் எம்.டி.யைப் பார்த்தார்.

"சார், இது பல்லவன் பஸ் அல்ல. டாக்டர் அம்பேத்கர் கழக பஸ். அவர்களைத்தான் விசாரிக்க வேண்டும்!" என்றார் பல்லவன் எம்.டி.

"இது எந்த டெப்போ பஸ்?"

"அம்பத்தூர் டெப்போ சார்!" என்றார் டிரைவர்.

"சரி, முதலில் நீங்கள் எஞ்ஜினை ஆஃப் செய்யுங்கள்!" என்ற அமைச்சர், "உடனே உங்கள் காரிலுள்ள ஒயர்லெஸ் மூலம் அம்பத்தூர் டெப்போ பி.எம்.மை (பிராஞ்ச் மானேஜர்) அழைத்து, எதற்காக செல்ஃப் எடுக்காத பஸ்ஸை அனுப்பியுள்ளார்கள் என்று விவரம் கேளுங்கள். கூடவே அம்பேத்கர் கழக எம்.டி.யை குரோம்பேட்டையிலுள்ள நமது பஸ் பாடி பில்டிங் யூனிட்டுக்கு வரச் சொல்லுங்கள்!" என்றார்.

குரோம்பேட்டைக்குப் போகிற வழியில், "பக்கத்திலுள்ள கிண்டி தொழிற்பேட்டை பஸ் நிலையத்துக்குள் ஒரு விசிட் செய்யலாமா?" என்று நாம் கேட்டபோது, "தாராளமாக!" என்று காரைத் திருப்பச் சொன்னார் அமைச்சர்.

உள்ளே சென்று டைம் கீப்பரிடம் பஸ்களின் கால அட்டவணையைக் கேட்ட அமைச்சர், "இதோ இங்கே நிற்கிற C 70 பஸ் எத்தனை மணிக்குப் புறப்பட வேண்டும்?" என்றார்.

"இது அம்பேத்கர் பஸ் சார். அவர்கள் எல்லா பஸ்களின் கால அட்டவணையையும் எங்களிடம் கொடுப்பதில்லை. சில பஸ்களின் கால அட்டவணையை மட்டும்தான் தருகிறார்கள்!" என்றார் டைம்கீப்பர்.

"இதை அம்பேத்கர் எம்.டி.யிடம் கேட்க வேண்டும். ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்..." என்று பல்லவன் எம்.டி.யிடம் சொன்ன அமைச்சர், கிண்டி தொழிற்பேட்டை பஸ் நிலையத்தைச் சுற்றிப் பார்த்தார்.

"மழை வந்தால் இங்கே நிற்கும் பயணிகள் ஒதுங்குவதற்குக் கூட வசதியில்லையே! என்ன செய்வார்கள் மக்கள்? ஏதாவது செய்ய வேண்டும்!" என்று பல்லவன் எம்.டி.யிடம் கூறினார் அமைச்சர்.

குரோம்பேட்டையிலுள்ள பஸ் பாடி பில்டிங் யூனிட் அமைந்துள்ள இடம் மிகப் பெரிய இடம். உள்ளே கார் போகும்போது

சாலை குண்டும் குழியுமாக இருப்பதை உணர முடிந்தது.

"புதிய பஸ்களுக்கு பாடி கட்டி முடித்து வெளியே வருவதற்குள்ளாகவே ரிப்பேருக்கு அனுப்ப வேண்டும் போலிருக்கிறதே! மண் கொட்டியாவது சாலையைச் சரிப்படுத்தக் கூடாதா?" - எம்.டியிடம் அமைச்சர் சொன்ன போது, "சரிசெய்து விடுகிறோம் சார்!" என்றார் எம்.டி.

யூனிட்டுக்குள் சென்று இறங்கிய போது, அங்கே டாக்டர் அம்பேத்கர் போக்குவரத்துக் கழகத்தின் எம்.டி. ஈசாக் தயாராகக் காத்திருந் தார். அவரிடம் திருவான்மியூர் பஸ் நிலையத் தில் 47D டிரைவர் சொன்ன விஷயம் மற்றும் கிண்டி தொழிற்பேட்டை பஸ் நிலைய டைம் கீப்பர் சொன்ன விஷயம் ஆகியவற் றைப் பல்லவன் எம்.டி எடுத்துச் சொன்னார்.

"செல்ஃப் எடுக்காத பஸ்ஸை எப்படி அனுப்பி னார்கள் என்கிற விஷ யத்தை இன்று இரவுக்குள் எனக்கு விளக்க வேண்டும்!" என்ற அமைச்சர், நம்மிடம் பேசினார்.

"இந்த யூனிட்டில் முன்பு எழுநூறு எண்ணூறு பேர் வேலை பார்த்தார்கள். இப் போது வெறும் 130 பேர் தான் இருக்கிறார்கள். இங்கே பாடி கட்டினால் கமிஷன் பெற முடியாது என்பதால் இங்குள்ள ஆட் களைக் குறைத்து, வெளியே தனியாரிடம் பாடி கட்டிக் கொண்டிருந்தார்கள். அதை மாற்ற இப்போது இங்கே உடனடியாக முந்நூறு புதிய ஆட்களை நியமிக்க ஏற் பாடுகள் செய்து கொண்டி ருக்கிறோம்!" என்ற அமைச்சர் அந்த யூனிட் டின் ஜெனரல் மானேஜர் பக்தவத்சலத்திடம், "இண்டர்வியூவெல்லாம் நடந்து கொண்டி ருக்கிறதல்லவா?" என்றார்.

"இன்று கூட நடந்தது சார். நல்ல நல்ல கேண்டிடேட்டெல்லாம் வந்திருந்தார்கள்!"

"நல்ல கேண்டிடேட்கள் என்றால் உடன டியாக அவர்களை வேலைக்குச் சேர்த்துக் கொண்டு விடுங்கள். இல்லையென்றால் வேலைக்குச் சேர யாரையாவது 'பிடிக்க' வேண்டுமோ என்கிற சந்தேகம் அந்த கேண்டி டேட்களுக்கு வந்துவிடும். அப்படிப்பட்ட சந் தேகம் கூட அவர்களுக்கு வந்து விடக் கூடாது!" என்றார் அமைச்சர்.

இந்தச் சமயத்தில் அங்கே வேலை பார்க்கும் ஒரு தொழிலாளி, "எங்களைப் போல் இங்கே வேலை பார்ப்பவர்களின் வாரிசுகளுக்கு வேலை தர வேண்டும்!" என்று கோரிக்கை விடுத்தார்.

"தாராளமாக! ஆனால் இங்கே வேலை பார்ப்பதற்கு என்னென்ன தொழிற்கல்விகள் தேவையோ அதை உங்கள் வாரிசுகள் பெற்றி ருக்க வேண்டும்" என்றபடி நம்மிடம் பேசினார்.

"முன்பு, பல்லவன் பஸ்கள் ஏர்போர்ட் டுக்குச் சென்று கொண்டிருந்ததல்லவா? சென்ற ஆட்சியில் அவற்றை அப்படியே நிறுத்தி விட்டார்கள். மீண்டும் அவற்றை இயங்கச் செய்யப் போகிறோம். அதற்காகத்தான் இந்த ஐந்து பஸ்கள் தயாராகின்றன!" என்று நம் மிடம் காட்டினார்.

• "சீட்டுகள் சரியாக உள்ளனவா?" நாகர்கோயில் பஸ்ஸில் சோதனை...



"மாதம் ஒன்றுக்கு இங்கே ஐம்பது புதிய பஸ்களுக்கு பாடி கட்டுவதற்கான ஏற்பாடு களைச் செய்து கொண்டிருக்கிறோம்!" என்று யூனிட்டின் பல்வேறு வேலைப் பகுதிகளையும் சுற்றிக் காண்பித்த அமைச்சர், "தீபாவளிக்கு முதல் நாள்தான் தாம்பரம் பஸ் நிலையத்துக்குச் சென்றிருந்தேன். அதனால் இப்போது அவர் கள் என்னை எதிர்பார்க்கவே மாட்டார்கள். வாருங்கள் இப்போது அங்கே போகலாம்!" என்று புறப்பட்டார்.

தாம்பரம் பஸ் நிலையத்தில் இறங்கிய போது, நாகர்கோயில் செல்லும் பஸ் ஒன்று

நின்று கொண்டிருந்தது. அதில் ஏறி சீட்கள் எல்லாம் எப்படியிருக்கிறது என்று பரிசோதித்து விட்டு, டைம் ஆபீஸுக்குள் நுழைந்தார். கால அட்டவணையைப் பார்த்தார்.

"4.45க்கு வர வேண்டிய திருவள்ளுவர், 5.45க்கு மேலாகியுமா வரவில்லை?" டைம் கீப்பரிடம் அமைச்சர் கேட்டார்.

"ஆமாம் சார்."

"ஏன் வரவில்லை?"

"தெரியவில்லை சார்!"

"இதைச் சொல்வதற்கா நீங்கள் இருக்கிறீர்கள்? உங்களிடம்தான் ஒயர்லெஸ் இருக்கிறதே! விசாரித்தீர்களா?"

"இல்லை சார்!"

"அப்புறம் எதற்கு ஒயர்லெஸ் வசதிகள்? அந்த பஸ் வருமா, வராதா என்கிற விஷயத்தை விசாரித்து இங்குள்ள பயணிகளுக்கு அறிவிப்புச் செய்தால்தானே வசதியாக இருக்கும்!"

"இனி செய்கிறேன் சார்!"

"சரி, அடுத்து எங்கே போகலாம்?"- நம்மிடம் கேட்டார் அமைச்சர்.

"கே. கே. நகர் டெப்போவுக்குப் போகலாம்!" என்றோம்.

புறப்பட்ட பிறகு, "தாம்பரத்தில் ஓவர் பிரிட்ஜ் ஒன்றை ஜப்பான் அரசு நமக்கு இலவசமாகவே கட்டித் தருவதாகச் சொல்லியிருக்கிறது!" என்றார்.

"தி.மு.க. பதவிக்கு வந்து ஆறு மாதங்களுக்கு மேலாகி விட்டதால், இனியும் சென்ற ஆட்சியில் நடந்த முறைகேடுகளை மட்டுமே கூறி மக்களைச் சமாதானப்படுத்த முடியாது, இல்லையா?" என்றோம் நாம்.

"ஆமாம். இருந்தாலும் ஓர் உதாரணத்தை உங்களுக்குச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்துக்கு பயணச் சீட்டு அச்சடிக்கிற விஷயத்தில் சென்ற ஆட்சியில் நடந்ததைக் கூறுகிறேன். நூறு டிக்கெட்டுகள் அடங்கிய ஒரு கட்டை ஒரு புத்தகம் என்று சொல்லுவோம். இப்படி ஆயிரம் புத்தகங்கள் அச்சடிப்பதற்குச் சென்ற ஆட்சியில் செலவு செய்யப்பட்ட தொகை 9,600 ரூபாய். இப்போது அதே ஆயிரம் புத்தகங்களை நாங்கள் 5,400 ரூபாய்க்கு அச்சடிக்கிறோம். 4,200 ரூபாய் எங்கே போனது? மொத்தமுள்ள இருபது போக்குவரத்துக் கழகங்களில் இப்படி எத்தனை ஆயிரம் புத்தகங்கள்!

"இருந்தாலும் இதையெல்லாம் சொல்லி மாத்திரம் மக்களை திருப்திப்படுத்தி விட முடியாது. எங்களிடம் மக்கள் நிறையவே எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதுதான் எங்களின் கடமை என்பதை முழுமையாக உணர்ந்து கொண்டுதான் செயல்படுகிறோம். தமிழகம் முழுவதற்கும் 2500 புதிய பஸ்களுக்கு ஆர்டர் கொடுத்திருக்கிறோம். நிர்வாகத்தைச் சீராக்குவதன் மூலம் மக்களுக்கான சேவையை அதிகரிக்க முடியும் என்பதோடு, நஷ்டத்தையும் குறைக்க முடியும் என்பதால் அதற்கான நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறோம். பல்லவனில் மட்டும் ஒரு நாளைக்கு ஆறு லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது, தெரியுமா?"

"சென்ற வாரம் நாங்கள் மகாபலிபுரத்திற்குச் சென்றிருந்தோம். எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழக பஸ்கள் அத்தனை மோசமாக இருப்பதை அனுபவபூர்வமாக உணர்ந்தோம்."

"நான் மறுக்கவில்லை. முந்தைய ஆட்சியில் மிக மோசமாகச் சீர்கெட்டு விட்ட நிர்வாகத்தை ஒரே நாளில் சீர்செய்து விட முடியாது. படிப்படியாகத்தான் செய்ய முடியும் என்பதைப் பொதுமக்களும் புரிந்து கொண்டு எங்களுக்கு ஒத்துழைப்புத்தர வேண்டும்!"

இதற்குள் கே.கே. நகர் டெப்போவுக்கு வந்து சேர்ந்து விட்டோம். டெப்போவுக்குள் ஏகப்பட்ட பஸ்கள் நிற்பதைப் பார்த்த அமைச்சர், "ஏன் இத்தனை பஸ்கள் நிற்கின்றன?" என்று பிரான்ச் மானேஜரிடம் கேட்டார்.

"ஒரு டிரைவர் இறந்து போய் விட்டார். அதற்காகச் சென்றிருக்கிறார்கள். அதனால் இன்று ஓட வேண்டிய பஸ்களில் (12.11.96) பதினொரு பஸ்கள் ஓடாமல் நிற்கின்றன!"

"பதினொரு பஸ்களா? அதுவும் நெரிசலான இந்த நேரத்தில் (மாலை 7 மணி) பதினொரு பஸ்கள் ஓடவில்லையென்றால் பொதுமக்கள் எப்படியெல்லாம் தவித்துக் கொண்டிருப்பார்கள்!"

"என்ன சார் செய்வது? இழவுக்குப் போய்த் தானே ஆக வேண்டும்!" என்றார் ஓர் ஊழியர்.


"போக வேண்டியதுதான். போய்விட்டு வந்து உடனடியாக பஸ்களை எடுக்க வேண்டியதுதானே! உங்களுக்கு இந்த அரசு, போனஸில் கூட குறை வைக்காமல் செய்ததே! அதற்கு நீங்கள் செய்யும் பிரதியுபகாரம் இதுதானா?"

"டிரைவர்கள் பற்றாக்குறையும் இருக்கிறது. மெக்கானிக்குகள் பற்றாக்குறையும் இருக்கிறது. மழைக்காலத்தில் டெப்போ முழுவதும் தண்ணீர் தேங்கி விடுகிறது..."

"நீங்கள் முதலில் ஒழுங்காக வேலை செய்யுங்கள். பொதுமக்களிடம் நல்ல பெயர் எடுக்கப் பாடுபடுங்கள். உங்களின் எல்லாக் குறைகளையும் தீர்த்து வைக்கிறோம்!" என்றார் அமைச்சர்.

- இளங்கோவன், ஸ்ரீநிவாசன்

படங்கள் : பேஜர் கே. மூர்த்தி



1996 நவம்பர் 24
தாது கார்த்திகை 9
மலர் : 55
இதழ் : 17

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



கண்ணீர் வெள்ளமும் விண்ணில் சோகமும்!

"நடுவானில் மின்னல்போல் திடீரென்று ஓர் ஒளிக்கீற்று.... அதுவே அடுத்த கணத்தில் இரு பெரிய நெருப்புப் பந்துகளாக மாறி கீழ்நோக்கிச் செல்வதைப் பார்த்தோம்..."


- சவூதி அரேபிய விமானமும் கஜகிஸ்தான் விமானமும் மோதிய காட்சியை, வானில் பறந்தபடி பார்த்த அமெரிக்க விமான ஓட்டுனர்கள் அளித்த வர்ணனை இது.

விபத்து என்னவோ கண்ணிமைக்கும் நேரத்தில் நிகழ்ந்துவிட்டது. ஆனால் அதில் உயிரிழந்த 351 பேரின் குடும்பங்கள் படப்போகும் வேதனை ஒரு தலைமுறை காலத்துக்குக் கூட தொடரும்!

புதுடெல்லி விமான நிலையத்தின் போக்குவரத்துக் கட்டுப்பாட்டுப் பிரிவினர், விபத்துக்குத் தாங்கள் காரணமில்லை என்பதை வலியுறுத்துகின்றனர். விபத்து நிகழ்வதற்குப் பதினைந்து வினாடிகள் முன்பு, கட்டுப்பாட்டுப் பிரிவுக்கும், சம்பந்தப்பட்ட இரு விமானங்களுக்குமிடையே நடந்த தகவல் பரிமாற்றம் அப்படியே வெளியிடப்பட்டிருக்கிறது.

எனினும் இப்படியொரு கோர விபத்து நிகழ்ந்துள்ளதென்றால் அதற்கு என்ன காரணம்...? விசாரணைக்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், இந்திய வர்த்தக விமானிகள் சங்கம் (Indian Commercial Pilots Association - ICPA) அளித்துள்ள அறிக்கை நம் கவனத்துக் குரியதாகிறது.

"இப்போது நிகழ்ந்துள்ளதைப் போன்ற கொடூர விபத்துகள் இதற்கு முன்பு மூன்று முறை நிகழப் பார்த்தன. அவற்றிலிருந்து எப்படியோ மயிரிழையில் தப்பியுள்ளோம். அப்போதே நாங்கள்



அரசாங்கத்திடம் மனு செய்தோம்; எச்சரித்தோம். ஆனால் யாரும் எங்கள் வேண்டுகோளுக்குச் செவி சாய்க்கவில்லை; நடவடிக்கை எடுக்கவில்லை. நாங்கள் முன்வைத்த கோரிக்கைகள் இவைதான் :

● அதிகரித்து வரும் விமானப் போக்குவரத்தைச் சமாளிக்கக்கூடிய அளவுக்கு நமது விமான நிலையங்களில் கட்டுப்பாட்டுப் பிரிவுகளை மேம்படுத்தியாக வேண்டும்.

● விமானங்கள் தயாரிப்பில் நாளுக்கு நாள் நவீன மாற்றங்கள் புகுத்தப்படுவதால், நமது விமான நிலைய கட்டுப்பாட்டுக் கருவிகளும், அவற்றையெல்லாம் எதிர்கொள்ளக்கூடிய வகையில் இருக்க வேண்டும்.


● முக்கிய விமான நிலையங்களில் டிரான்ஸ்பாண்டர்கள் நிறுவ வேண்டும்.

● ஏற்கெனவே இவ்விஷயத்தை ஆராய்ந்து அளிக்கப்பட்டிருக்கும் சிவராமன் கமிஷன் அறிக்கையின் சிபாரிசுகள் முற்றிலுமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

விண்ணில் நடந்த விபத்துக்குக் காரணங்கள் கண்டுபிடித்துக் கூறப்படலாம். ஆனால் ஐ.சி.பி.ஏ. அறிக்கையைப் பார்க்கும்போது, நமது விமான நிலையக் கட்டுப்பாட்டுப் பிரிவுகள் குறைகளுக்கு அப்பாற்பட்டவையல்ல என்பது தெளிவாகிறது. மனித உயிர்களின் மேன்மை கருதி அக்கட்டுப்பாட்டுப் பிரிவுகள் உடனடியாய் அதிநவீனமயமாக்கப்பட வேண்டும்.

இதை அவசியம் செய்தாக வேண்டியதற்கு இன்னொரு காரணமும் இருக்கிறது. அன்னியச் செலாவணி அள்ளித் தரும் டூரிஸ்டுகள், இப்படிப்பட்ட விபத்துகள் நடக்கும்போது நமது விமான நிலையங்களில் குறைகள் உள்ளதை அறிய வருகிறார்கள். அப்புறம் அவர்கள் இந்தியா பக்கமே வரமாட்டார்கள். உயிருக்கு பயந்து ஒதுங்கி விடுவார்கள்.

இதை உத்தேசித்தேனும் அரசாங்கம் உடனடியாக விமான நிலையக் கட்டுப்பாட்டுப் பிரிவுகளை நவீனப்படுத்த வேண்டும். அப்படிச் செய்வதற்குத் தேவைப்படும் பணத்தைச் செலவாகக் கருதாமல் முதலீடாகக் கருதிச் செயல்பட வேண்டும்.



ஆந்திரப் புயலில் காணாமல் போன மீனவர்களின் எண்ணிக்கை மட்டும் 985! இதைத் தவிர தரையிலும் கடலிலும் உயிரிழந்தவர்கள் ஏராளம். பட்ட காலிலே படும் என்பது போல விசாகப்பட்டினத்தையொட்டிய கடற்கரைப் பகுதியிலேயே அடுத்தடுத்து இருமுறை வீசியிருக்கிறது கடும்புயல்.

இருபத்தோராம் நூற்றாண்டை எட்டும் தூரத்தில் இருக்கும் நிலையிலும், சாட்டிலைட் இணைப்புக்கும் வாடகைக்கும் வரிப் பணத்தை வாரி வாரி விடும் சூழ்நிலையிலும் இவ்வளவு துயரமான சம்பவங்கள் ஏன் நிகழ்கின்றன?

ஒவ்வொரு புயலுக்குப் பின்னரும் இக்கேள்வி கோபத்துடன் எழுப்பப்படுகிறது. அரசு தரப்பிலிருந்து பதில் கிடைப்பதற்குள் கவனம் வேறு புதிய பிரச்னைகள் நோக்கித் திரும்பி விடுகிறது.

புயல் அறிகுறிகளையோ சின்னத்தையோ அடையாளம் கண்டவுடன் நடுக்கடலில் உள்ள மீனவர்கள் எச்சரிக்கப்பட வேண்டும். கரையில் இருப்பவர்கள் கடலுக்குள் செல்லாமல் தடுக்கப்பட வேண்டும். இந்தப் பணியைப் புயல் சின்னம் கண்டறியும் சாட்டிலைட்கள் செய்யாது! சம்பந்தப்பட்ட அரசு நிர்வாகம்தான் கடலோரக் காவல்படை உதவியுடன் இதைச் செய்தாக வேண்டும். இதற்கேற்ப நிர்வாகம் முடுக்கிவிடப்பட வேண்டும்.

புயலினால் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஆந்திர முதல்வர் ஐயாயிரம் ரூபாய் உடனடி உதவி அறிவித்திருக்கிறார். ஐம்பதாயிரம் ரூபாய் நஷ்டஈடு கொடுத்தாலும் மறைந்த ஓர் உயிருக்கு அது ஈடாக முடியாதுதான்.

ஆனால், இவ்வாறு ஒவ்வொரு புயலின்போதும் அரசு தாமதமாய் ஞானோதயம் பெற்றுச் செலவழித்துள்ள தொகையினை, தகவல் தொடர்பு முன்னேற்றத்துக்கும் நிர்வாகச் சீரமைப்புக்கும் பயன்படுத்தியிருந்தால், இவ்வளவு பெரிய சோகங்கள் நிகழாமல் தடுத்திருக்கலாம்!

வட்டமேஜை

✉ மத்திய புலனாய்வுத் துறையின் எதிர்கால நலனை மனத்தில் கொண்டு எழுதப்பட்டுள்ளது இவ்வார காட்டமான தலையங்கம். வழக்கில் தன் எதிர்வாதியாய் நிற்பவரிடமே, நியமனம் பெற்ற நாளன்று 'ஆசி' பெறுகின்ற தலைவரை உடைய இத்துறை எங்கிருந்து உருப்படும்? அரசியல்வாதிகள் இத்துறையில் மூக்கை நுழைப்பது உண்மைதான். ஆனால், அந்த அரசியல்வாதிகளை வெற்றிலை பாக்குடன் உள்ளே வரவேற்கிறார்கள் அதிகாரிகள் என்பது பேருண்மை!

சென்னை-43, வி.பி. பிரசன்னகிருஷ்ணன்.

✉ கோடிக்கணக்கில் மதிப்பு வாய்ந்த காந்திஜியின் கடிதங்கள் யாருக்குச் சொந்தம்? பேட்டி படித்தேன். காணக் கிடைக்காத அக்கடிதங்கள் இந்திய நாட்டுக்குச் சொந்தம்; இந்த உலகு முழுமைக்கும் பந்தம். அவற்றை ஏலம் விடுவது என்பதை எவராலும் ஏற்றுக் கொள்ள இயலாது! நல்லகாலமாக ஏலம் நின்று போனது!

பொறையாறு, கானா. கணேசன்.

✉ ரம்பா என்றால் சும்மாவா? ரசிகர்களை மட்டுமே பயமுறுத்தி வந்த ரம்பா, கோடம்பாக்கத்தையும் பயமுறுத்தி வருவது, அவரின் அபரிமிதமான(!) வளர்ச்சியைத்தான் காட்டுகிறது.

மேலப்பாதி, என். ராஜி.

✉ வெறும் விஸிட் அடிப்பதோடு நிறுத்தி விடாமல், 'பிரச்னைகள் தீர்ந்ததா? பணிகள் நிறைவேற்றப்பட்டதா?' என்பதைக் காண ரீ-விஸிட்டும் அடிக்கிற உம்மைப் பாராட்டாமல் இருக்க முடியாது!

காப்பரத்தாம்பட்டி, கே. ராஜாதிருவேங்கடம்.

ரம்பா என்றால் சும்மாவா?

✉ காற்றுக்கு உயிர் போகிறது....

கவிதையை நிறுத்தி, நிறுத்திப் படித்து, பின்பு மீண்டும், மீண்டும் படித்து மௌனமாகிப் போன போது- எங்கோ இயற்கையின் அவலக் குரல் கேட்டது. நெஞ்சுக்குள் உயிர்க்காற்று சிறிது நேரம் நின்று திரும்பினாற்போலிருந்தது. அருமையான கவிதை.

கே.ஜி.எப், எம்.எஸ். வின்சென்ட்.

✉ சுற்றுப்புறச் சூழல் சற்று சிக்கலான தலைப்பு. அதைக் கவிதைக்குட்படுத்துவது அரிது என்றெண்ணியிருந்தேன்; 'இல்லை... எளிது... மிக எளிது...' என நிரூபித்திருக்கிறார் முதல் பரிசு பெற்ற இரா.பச்சியப்பன். அருமையான தேர்வு... கவிதைக்கும் கவிதை படைத்த கரங்களுக்கும் மனமார்ந்த பாராட்டுகள்.

விராலிமலை, ச. நாகராஜன்.


✉ ரங்கநாதனைப் போல் ஒவ்வொருவரும் விடாமுயற்சியுடன், கொண்ட கொள்கைக்காக உழைத்தால் ஆயிரம் மாருதிகள் , உருவாகலாம் என் பதில் சிறிதும் ஐயம் இல்லை.

ஜெயங்கொண்டம், இராம. சேதுராமன்.

✉ கல்கி (10.11.96) இதழில் நங்கநல்லூர் குளம் தொடர்பான பிரச்னையில் நகராட்சி நிர்வாகம் வழக்குத் தொடர்ந்து இருப்பதாக நகராட்சி ஆணையர் சொல்லியிருக்கும் தகவல் உண்மைக்குப் புறம்பானது. அந்தக் குளத்தையும் குளம் சார்ந்த பகுதியையும் தனியார் சிலர் தங்களுக்குச் சொந்தமானது என அறிவிப்பு செய்தனர். அரசு புறம்போக்கு நிலம் அரசு உபயோகத்திற்காகவும், பொதுமக்களின் நலனுக்காகவும் மட்டுமே உபயோகிக்கப்பட வேண்டுமென உயர்நீதி மன்றத்தில் நான்தான் பொது நல வழக்கு ஒன்றைத் தொடர்ந்து உள்ளேன்.

சென்னை-27, என். கிருஷ்ணமூர்த்தி.

TVமர்சனம்



●● உப்பில்லாத சமுத்திரம்; பவளமில்லாத கடற்கரை... எங்கே...? ஜப்பானில், டோக்கியோவிலிருந்து கூப்பிடு தூரத்தில்! செயற்கை பீச் உருவாக்கி லாபம் சம்பாதிக்கிறது ஜப்பானிய மூளை. ஒரு ஹவாய் அல்லது கோவாவின் இதமான வெயில் கணப்பு கூட செயற்கையாய் தவழ விடப்பட்டு ஜப்பான் பெண்மணிகள் பிகினியணிந்து 'சன்' பாத் எடுக்கிறார்கள்! குழந்தைகள் 'அலை'களில் விளையாடி மகிழ்கிறார்கள். அத்தனையும் மின்சக்தி கொண்டு கட்டுப்பாட்டில் வைக்கப்படுகிறது. காசு கொடுத்து கடற்கரை மகிழ்ச்சியை வாங்குவது போல் பனிப் பிரதேசக் களிப்பையும் விலைக்கு வாங்கலாம்! உலகிலேயே மிகப் பெரிய செயற்கை பனிக் கூடத்தில், நாற்பது டாலர் கட்டிவிட்டு இரண்டு மணி நேரம் பனிச் சறுக்கலாம்...

இந்த அதிசயங்களைக் கண்முன் நிறுத்தியது டிஸ்கவரி சானலின் ஓர் அதிகாலை நிகழ்ச்சி.

●● இன்னொரு அதிகாலை டிடி-1 இல் சுதா ராஜா, ஊத்துக்காடு கீர்த்தனைகளைப் பாடினார். சிம்மேந்திர மத்யமம் ராக ஆலாபனை நிச்சயம் 'மத்திமம்' ரகம் இல்லை; அமைதியான உயர்வு தெரிந்தது. ஆனால் கீர்த்தனை பாடும்போது எலக்ட்ரானிக் சுருதிப் பெட்டிக்குப் பின்னால் காகிதத்தில் வார்த்தைகளை எழுதி வைத்துக் கொண்டு 'பிட்' அடிக்கும் மாணவன் போல் அவஸ்தை... அவசியமா? வார்த்தைகளை மனசில் ஊறுகாய் போடாவிட்டால் கர்நாடக சங்கீதத்துக்கு அத்தியாவசியமான பாவம் கணிசமாய்க் குறைந்து போகும். அனேகம் பாடகர்கள் இதை நினைவு வைத்துக் கொள்வதில்லை!

●● உலக அழகிப் போட்டி பற்றிய வெள்ளோட்ட நிகழ்ச்சி விவகாரமாய் இருக்கும் என்று பார்த்தால்... தூர்தர்ஷனும் ஏபிசிஎல்லும் இணைந்து தயாரித்த வெண்டைக்காய்க் கனி! ராகேஷ்வரி என்று ஒரு தொகுப்பாளர் – தாங்க முடியாத செயற்கை! செஷல்ஸுக்குக் கூட்டிப் போய் போட்டியாளர்களை 'தரிசனம்' செய்து வைத்தார்கள்... சில கணங்கள் தோன்றிய செஷல்ஸ் கடற்கரைக் காட்சிகள் அழகாக இருந்தன!

●● ராஜ் டீவியை எப்போது கூப்பிட்டாலும் சோ தான் பேசிக் கொண்டிருக்கிறார்! கூடுதலாக இந்த வாரத்திலிருந்து இன்னொரு சோ நிகழ்ச்சி – 'சோ தர்பார்'.

துக்ளக்கில் வருகிற அவரது தலையங்கங்களின் அடிப்படையில் விவாதம் நடக்கிற இந்த நிகழ்ச்சியில் முதல் வாரமே ஏக காரசாரம்; கோப தாபம்! (சமாசாரம் '356' என்பதாலோ?) உ.பி.யில் ஆட்சியமைக்க பா.ஜ.கவைக் கூப்பிடாதது தப்பு என்று சோ வாதிக்க, எதிர்த்துப் பேசியவர் வலம்புரிஜான். பா.ஜ.கவின் மதவாதப் போக்கைச் சுட்டிக்காட்டி ஜான் முன்வைத்த கருத்துக்களுக்கு சோ அத்தனை சரியாக மறுப்பு அல்லது எதிர்வாதம் வைக்காததாகவே தோன்றியது. 'காஷ்மீர் முஸ்லிம்கள் பாகிஸ்தானுக்குப் போகட்டும்' என்று வாஜ்பாய் ஒருதரம் பேசியதை சுட்டிக்காட்டி, அவரைக் கூட மிதவாதி என்று ஏற்பது சிரமம் என்று ஜான் முன்வைத்த கருத்து சிந்தனைக்குரியது.

நிகழ்ச்சி சுவாரஸ்யமாக இருக்கிறது. தொலைக்காட்சி விரும்பிகள் கவனிக்க.


●● எல்.கே.ஜி., யு.கே.ஜி. என்று படிக்கிற சிறு குழந்தைகள் நிஜமாகவே கல்வி பெறுகிறார்களா? இல்லை! சிறு குழந்தைகளுக்கு ஏகப்பட்ட எழுத்து வேலைகளைக் கொடுக்கவே கூடாது. ஏனெனில் அந்த வயதில் பென்சிலையோ பேனாவையோ பிடித்து எழுதுகிற அளவுக்கு அவர்களின் விரல் எலும்புகள் வளர்ச்சி பெற்றிருப்பதில்லை. ஒன்று, இரண்டு என்று வெறும் எண்களைச் சொல்லிக் கொடுத்து மனப்பாடம் செய்து எழுதச் சொல்லுகிறபோது, அந்தக் குழந்தைகள் காலத்தையே மறந்து விடுகின்றன என்பதற்கு ஆதாரமாகச் சில குழந்தைகளிடம் "காலையில் எத்தனை மணிக்கு எழுந்திருப்பே?" என்று கேட்டபோது, "மூணு மணிக்கு!" என்றன. "ஸ்கூலுக்கு எத்தனை மணிக்குப் போவே?" என்றபோது "அஞ்சு மணிக்கு!" என்றன!

சிறு சிறு குழந்தைகளுக்குத் தாயின் அரவணைப்பு மிக அதிகம் என்கிற நிலையில், பள்ளிகளுக்கு அனுப்புகிற போது, அங்குள்ள ஆசிரியைகள் இன்னொரு தாயாக நடந்து கொள்ள வேண்டும். ஆனால் ஒரு வகுப்பில் நாற்பது குழந்தைகளுக்கு மேல் இருக்கிற நிலையில் இது சாத்தியமில்லை என்பதால் பல குழந்தைகள் மதிய உணவைச் சாப்பிடாமலேயே வீட்டுக்கு எடுத்து வந்து விடுகின்றன! இதையெல்லாம் 'இந்த பாரம் தேவையா?' என்கிற ஒரு நிகழ்ச்சியில் புட்டுப் புட்டு வைத்தது விஜய் டீவி! பெற்றோர்கள் கவனிக்க வேண்டிய மிக முக்கியமான விஷயம் இது.

— 'டிவீ'

எங்கே காணோம்?

தி.மு.க.காரராக இருந்தவர். எம்.பி.யாக இருந்தவர். டாக்டராக இருந்தவர். அடிக்கடி செய்திகளில் அடிபட்டவர். டாக்டர் அ. கலாநிதி இப்போது எங்கே?



• கலாநிதி

ஜுரம், தலைவலி, வயிற்றுப் போக்கு என்று உடல் நிலை சரியில்லாதவர்கள் மட்டும் தான் என்று இல்லை. அடிக்கடி பவர்கட், லோ வோல்டேஜ் பிரச்னை, சாக்கடை அடைப்பு, குடி தண்ணீர் பிரச்னை என்றாலும்கூட, கலாநிதி வசிக்கிற புரசைவாக்கம் பகுதி மக்கள், அவரிடம்தான் வருகிறார்கள். அவரும் சம்பந்தப்பட்டவர்களுடன் பேசி, நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ பிரச்னைகளைத் தீர்க்க உதவி வருகிறார்.

"இப்போதும் எம்.பி.தான்!"

கூட்டம் நெரியும் அவரது புரசைவாக்கம் கிளினிக்கில் அவரைச் சந்தித்தபோது, உற்சாகமாகப் பேசினார்.

"90ம் வருடத்தில் தி.மு.க.விலிருந்து விலகிய பின், நான்கு வருடங்கள் நான் அரசியலில் ஈடுபடவில்லை. இரண்டு வருடங்களுக்கு முன் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தேன். கடந்த தேர்தலுக்கு முன்பு, தமிழகத்தில் காங்.கட்சி பிளவுபட்டபோது, நான் தமிழ் மாநில காங்கிரஸில் இணைந்தேன்.

"என் பகுதி மக்கள் இன்னமும் எந்த பிரச்னையென்றாலும் என்னை அணுகுகிறார்கள் என்பதால் நான் இன்னமும் எம்.பி. தான்! அதாவது மக்களின் பிரதிநிதி. பாராளுமன்றம் போகாத எம்.பி." — சிரிக்கிறார்.

"தேர்தலில் ஏன் த.மா.கா. சார்பில் போட்டியிடவில்லை?"

"நான் மத்திய சென்னை தொகுதியில் நிற்க விருப்பம் தெரிவித்தேன். ஆனாலும், தி.மு.க.–த.மா.கா. தொகுதி உடன்பாட்டில் சென்னை மாநகரின் மூன்று தொகுதிகளும், தி.மு.க வுக்கு என்று முடிவானதால், வேறு தொகுதி எதிலாவது போட்டியிடச் சொன்னார்கள். அதில் எனக்கு விருப்பமில்லை என்பதால், போட்டியிடவில்லை."

டாக்டர் கலாநிதியின் 'Pet project' சென்னை மாநகரின் துரித ரயில் திட்டம். அது குறித்த அனுபவம் ஒன்றை நினைவு கூர்ந்தார்:



• எப்போதும் பிஸி....

● திரைப்பட இயக்குனர் கே. பாலசந்தர் ஒரு நாடகத்தில் 'அரசியல் அரசியல்வாதிகளின் கைகளில் இருக்கக் கூடாது' என்று எழுதியிருந்த வசனத்தைக் குறிப்பிட்டு கலைஞர் மு.க. பேசிய போது:

''மலர்கள் செடி, கொடிகளின் மேலே இருக்கக் கூடாது. அது மங்கையின் கூந்தலுக்கு வர வேண்டும். வாள் அதை உருவாக்கிய கொல்லன் கையில் இருக்கக் கூடாது. அது போர்க் களத்தில் இருக்கும் வீரனின் கைக்கு வர வேண்டும். அதைப்போல அரசியலும் அரசியல்வாதிகளின் கையில் இருக்கக் கூடாது; அது பொது மக்களின் கையில் இருக்க வேண்டும்.''

(பிரமுகர்கள் உதிர்த்த முத்துக்கள்'' என்ற நூலிலிருந்து)

– ஆர்.ஆர். பூபதி.



''டேய் மணி! எழுந்திருடா.. நீ ரிப்பேர் செஞ்ச காரை பார்ட்டி வந்து எப்பவோ எடுத்துட்டு போயாச்சு..''

"ரகசிய விசாரிப்பின் மூலமாக, அந்த வருடம், ரயில்வே பட்ஜெட்டில் சென்னை மெட்ரோ ரயில் திட்டத்துக்கு, நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்று அறிந்து கொண்டேன். காங்கிரஸ் எம்.பி. கே.டி. கோசல்ராம், தி.மு.க. எம்.பி. மோகன், நான் மூவரும் கூடிப் பேசி ஒரு திட்டம் தீட்டினோம். பட்ஜெட் உரையின்போது, ரயில்வே அமைச்சரின் பல்வேறு திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு பற்றிப் பேசியதும், தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டதைச் சுட்டிக்காட்டி, மேற்கொண்டு ரயில்வே பட்ஜெட் சமர்ப்பிப்பதை எதிர்த்துக் குரல் எழுப்பி பட்ஜெட் உரையினை இடையே நிறுத்தினோம். திகைப்புற்ற பிரதமர் இந்திராகாந்தி விஷயம் என்னவென்று கேட்டார். நாங்கள் விவரித்தோம். அதன் பயனாக சென்னை விரைவு ரயில் திட்டத்துக்கு நிதி ஒதுக்கப்பட்டது.

"இந்திராகாந்திக்கு என் மீது ஒருவித அபிமானம் உண்டு. ஒருமுறை நான் என் குடும்பத்துடன் அவர் இல்லத்துக்குப் போயிருந்தபோது என் அன்னையாரைக் கட்டித் தழுவி, என் பாராளுமன்றப் பணிகளைப் பற்றி பாராட்டுக்களைத் தெரிவித்தார்!

"ராஜீவ்காந்தி பிரதமராக இருந்தபோது சிங்கப்பூர் சென்றிருந்தேன். அங்கே, சிங்கப்பூர் பிரதமர் கலந்து கொண்ட கூட்டம் ஒன்றில் பேச அழைக்கப்பட்டிருந்தேன். விழாவில் பேசிய தமிழகப் பிரமுகர் ஒருவர், சிங்கப்பூர் பிரதமரை பாராட்டிவிட்டு, எங்கள் ஊரிலும் இருக்கிறாரே ஒரு பிரதமர்! என்று தொடங்கி, ராஜீவ்காந்தியைப் பற்றி இழிவாகப் பேசினார்.


"அடுத்து நான் பேசியபோது, பல்லாண்டு அரசியல் அனுபவம் பெற்ற சிங்கப்பூர் பிரதமருடன் இளைஞரான ராஜீவ்காந்தியை ஒப்பிடுவதே தவறு. இந்தியாவில், நமக்குள்ளே பலவித கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், அந்நிய மண்ணில், நாம், நம்முடைய பிரதமரை இழிவாய்ப் பேசக்கூடாது" என்று என் மனத்தில் பட்டதை வெளிப் படையாய்ப் பேசினேன்.

"இந்தியா திரும்பியவுடன், விஷயம் கேள்விப்பட்டு, பல காங்கிரஸ்காரர்களேகூட, என்னைப் பாராட்டினார்கள்!"

காலை எட்டுமணிக்கு ஆரம்பித்தால், இரவு பதினோரு மணி வரை டாக்டர் கலாநிதி பிஸிதான். அக்கறையோடு நோயாளிகளை கவனிப்பதும், பத்து ரூபாய், ஐந்து ரூபாய் என்று குறைந்த கட்டணம் வாங்குவதும்தான் காரணம்.

சந்திப்பு: **எஸ்.சந்திரமௌலி**

படம்: **யோகா**



''ஹலோ! டாக்டரா? எங்கப்பாவுக்கு ரொம்ப உடம்பு சரியில்லை.''

''அடுத்த திங்கள் கிழமை பத்து மணிக்கு அப்பாயிண்மெண்ட். அழைச்சுட்டு வாங்க.''

''அதுக்கு முன்னாலே ஏதாவது ஆகிடுத்துன்னால் என்ன செய்யறது டாக்டர்?''

''பரவாயில்லை. அப்பாயிண்ட்மெண்டை கேன்ஸல் பண்ணிடலாம்.''

– ஏழ்வரைக்கடியான்

பணத்திற்கு பாசமும், நேசமும் இல்லை. ஆனால் அதுவே உங்களை கவனிக்கச் செய்ய எங்களால் முடியும்.

நீங்கள் கடுமையாக உழைத்து சம்பாதித்த ஒவ்வொரு காசையும் உங்களுக்காக, உங்களது வளமான எதிர் காலத்திற்காக உழைக்க வைப்பதையே தனது குறிக்கோளாகக் கொண்டது 'ஷாஸன் ஃபைனான்ஸ்'. 20 வருட அனுபவமும், ரூ.100 கோடிக்கு மேல் வியாபாரமும் உடைய 'ஷாஸன் குரூப்'பின் ஒரு அங்கமான 'ஷாஸன் ஃபைனான்ஸ்'ஸில் முதலீடு செய்வதன் மூலம் உங்கள் பணம் நம்பகமான, பாதுகாப்பான கைகளைச் சென்றடைகிறது. ஏனெனில் அனுபவச் செறிவும், இளமையின் துறுதுறுப்பும் உடைய எங்களால் பணத்தைப் பெருக்குவதற்கான வாய்ப்புகளையும், பாதுகாப்பையும் அளிக்க முடியும். இதனை உறுதி செய்யும் வகையில், அசலைத் திருப்பிக் கொடுப்பதிலும், உரிய நேரத்தில் வட்டி வழங்குவதிலும் போதிய பாதுகாப்பிற்கு CARE நிறுவனத்தாரின் மதிப்பீடு BBB பெற்றுள்ளது 'ஷாஸன் ஃபைனான்ஸ்'. சேவையிலாகட்டும், உத்திரவாதத்தை உறுதி செய்வதிலாகட்டும் தனது வாடிக்கையாளர்கள் எப்போதும் சிறந்தவற்றையே பெறுதல் வேண்டும் என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டது 'ஷாஸன் ஃபைனான்ஸ்'.



ஷாஸன் ஃபைனான்ஸ் லிமிடெட்

Member Shasun Group

நிர்வாக அலுவலகம் : 21, கோபால கிருஷ்ணா ரோடு, தி.நகர், சென்னை - 600 017.
போன் : 8281138, 8250503

டெபாசிட் மையம் : 2, துரைசாமி ரோடு, தி.நகர், சென்னை - 600 017. போன் : 4347128, 4348930, 4348931. **கோயம்புத்தூர் :** சேரன் டவர்ஸ், 80/27, முதல் மாடி, அரசு கலைக் கல்லூரி ரோடு, கோயம்புத்தூர் - 641 018. போன் : 201256. **பாண்டிச்சேரி :** 2வது மாடி, 80, காமராஜ் சாலை, பாண்டிச்சேரி - 605 011 போன்: 46347 **திருச்சி :** 5வது மாடி, கணேஷ் காம்ப்ளெக்ஸ், நெ.6-A, வாசன்ஸ் ரோடு, கண்டோன்மென்ட், திருச்சி - 620 001. போன்: 465168. **மதுரை :** ஜூபிலி டவர், 67 மேற்கு டவர் தெரு, மதுரை - 625 001. **சேலம் :** 5/271B, ஜங்ஷன் மெயின் ரோடு, முதல் மாடி, ஜந்து ரோடு, சேலம் - 636 004. போன்: 443012 **கொச்சி :** பிஸினஸ் கம்யூனிகேஷன் சென்டர், சிராமல் சேம்பர்ஸ், குரிஷீப்பள்ளி ரோடு, ரவிபுரம், கொச்சி - 682 015. போன் : 365492, 369627. **பெங்களூர் :** பிரனெஸ் காம்ப்ளெக்ஸ், நெ.3, 5வது கிராஸ், மல்லேஸ்வரம், பெங்களூர் - 560 003.

வாடிக்கையாளரின் திருப்தியே எமது முயற்சியின் குறிக்கோள்

"ஏண்டா சொல்லலை ஸ்ரீராமா...? முதல்லயே தெரிஞ்சிருந்தா இப்படி ஆகாம தடுத்திருக்கலாமோல்லியோ...?"

ஸ்ரீராமிடம் பதில் இல்லை. சரஸ்வதி அவனைச் சாப்பிட விடாமல் துளைத்தெடுத்துக் கொண்டிருந்தாள். சுகன்யாவுக்கு அவனைப் பார்க்கப் பாவமாக இருந்தது.

"அவரைக் கோவிச்சுக்காதீங்கம்மா.... நான்தான் இப்போதைக்குச் சொல்ல வேண்டாம்னுட்டேன்... ஏதோவொரு வேகத்துல, வருத்தத்துல சொல்லிட்டேன்.... தப்புதான். ஆனா விஷயம் முன்கூட்டியே தெரிஞ்சிருந்தா மட்டும் இந்த இழப்பைத் தடுத்திருக்க முடியுமா என்ன.... இப்படி நடக்கணும்னு இருந்தா நடந்துதானே தீரும்..."

ஸ்ரீராம் கையை உதறிவிட்டு எழுந்தான்.

"முழுக்க சாப்பிடாம.... ஸ்ரீராமா! வா உட்காரு..."

"வேண்டாம்மா. கொஞ்ச நேரம் பொறுத்து வேணா சாப்பிடறேன்..."

படுக்கையறைக்குள் போய் கதவைச் சாத்திக் கொண்டான். அவனைத் தொடர்ந்து போக வேண்டும் என்று எழுந்த அவசர உணர்வை அடக்கினாள் சுகன்யா. மாமியாரைச் சமாதானம் செய்தாள். "விடுங்கம்மா. இரண்டு நாள்ல, தானே சரியாயிடுவார்."

சரஸ்வதி சாப்பாட்டு மேஜை மேலிருந்த டிபன் காரியர் பாத்திரங்களை அடுக்கி மூடினாள். சுமங்கலி பிரார்த்தனைக்கென்று செய்த வகை வகையான கறிகளும் பட்சணங்களும் அப்படியப்படியே இருந்தன.

"ஏதோ பெரியத்தை சொன்னதைத் தட்ட முடியாமதான் இன்னிக்குப் பூஜை பண்ணி முடிச்சேன்.... என்க்கு மனசே இதுல இல்லை, சுகன்யா.... ஒத்தி வைக்கலாம்னாலும் நாளில்லை...."

சுகன்யா மௌனமாய் இருந்தாள். இந்தப் பூஜையின் போது 'ஆஸ்பத்திரி தீட்டு'டன் போய் இறங்க பயந்துதான் மாமனார் அவளை ஐவஹர்புரத்துக்குக் கூட்டி வந்திருந்தார். வீட்டுக்குள் நுழைந்த அரைமணி நேரத்துக்குள் ஸ்ரீராம் டாக்ஸியில் வந்து இறங்கினான்.

17

"சுகி....!" என்று ஆதுரத்துடன் அழைத்தபடி வந்தவன் அப்பாவைப் பார்த்ததும் தயங்கி நின்றான். அவர் குறிப்பறிந்து வெளியேறுவதற்குள் சரஸ்வதியும் டிபன் காரியருடன் வந்து சேர்ந்தாள். உடன் குமார்.

முட்டி மோதிய உணர்வுகளை மறைத்துக் கொண்டாள் சுகன்யா. ஸ்ரீராம் அவள் கண்களை நேராகச் சந்திப்பதைத் தவிர்ப்பது புரிந்தது.

"நீ போய் கொஞ்ச நேரம் படுத்துக்கோ சுகன்யா ஸ்ரீராமுக்குச் சாப்பாட்டை எடுத்து வைச்சுட்டு உனக்கு கொண்டு வந்து தரேன்..."


"இல்லைம்மா! இங்கேயே இருக்கேன்" என்று ஸ்ரீராமுக்கு எதிர்ப்புறம் உட்கார்ந்து, மாமியார் தனியாகத் தயாரித்து வந்திருந்த ரசம் சாதத்தைச் சாப்பிட ஆரம்பித்தாள். அவன் எழுந்து போன பிறகும் தொடர்ந்து சாப்பிட்டு முடித்தாள். பசி அடங்கியதுமே உலகத்தை எதிர்கொண்டு ஜெயிக்கும் பழைய உற்சாகத்தில் பாதியளவு திரும்பி விட்டது போலிருந்தது.

"சாப்பாடு ரொம்ப ருசியாயிருந்ததும்மா..."

"அங்க வந்துடு சுகன்யா... தினமும் கொஞ்சம் கவனமா சமைச்சுத் தரேன்... ஒரு வாரத்துல பழைய சுகன்யாவா ஆயிடுவே பாரு... அப்படியே வசந்தி கல்யாணம் முடியற வரைக்கும் இருந்துட்டு அப்புறமா இங்க வர்றதைப் பத்தி யோசிக்கலாம்..."

'மீண்டும் கூட்டுக் குடும்பமாக வந்து இருக்க விடுக்கப்படும் அழைப்பா இது..?' சுகி சற்று சந்தேகத்துடன் மாமியாரை ஏறிட்டாள். அவர் பார்வையிலிருந்து விசேஷமாக எதையும் உணர முடியவில்லை.

"அதான் உங்க பிள்ளை ஊரிலிருந்து வந்துட்டாரே அதுனால இனிமே இங்க இருக்கறது பிரச்னை எதுவும்



...ல்லை... அவசியமானா பாத்துக்கலாம்..."

"அவசியம்தான் சுகன்யா. இன்னைக்கில்லைன்னாலும் நாளைக்காவது நீயும் ஸ்ரீராமும் அங்க வந்துருங்கோ. பகல் பொழுது முழுக்க நீ இங்க தனியா இருந்தியானா அனாவசியமா மனசு உளைச்சலா இருக்கும். அங்க கல்யாண வீடு.. உட்கார்ந்த வண்ணத்துல ஏதாவது காரியம் செஞ்சு மனசைத் தேத்திக்கலாம். ஸ்ரீராமும் அங்கேயே இருக்கட்டும்."

"கேட்டுப் பார்க்கறேன் அம்மா, அவர்கிட்டே."

இரு கைகளையும் தலைக்குப் பின்னால் கட்டிக் கொண்டு தலையணையில் சாய்ந்திருந்தான். கண்கள் மூடிக் கிடந்தாலும் நெற்றிச் சுருக்கம் நிம்மதியின்மையை அறிவித்தது.

"ராம்" – மெதுவாக அழைத்தபடி அவனருகில் அவள் உட்கார்ந்தபோது கண்களைத் திறக்காமலே கைகளைப் பிடித்துக் கொண்டான்.

"ஐம்' ஸோ சாரி.. ஸோ சாரி சுகி..." சொல்வதற்குள் கண்ணீர் வந்துவிட்டது அவனுக்கு.

"ச்சு! நோ... வேண்டாம் ஸ்ரீராம். எதுக்கு இப்படி எமோஷனல் ஆகறே...?"

"உன்னை தனியா விட்டுட்டு நான் போயிருக்கவே கூடாது..."

"அப்படியெல்லாம் நினைக்காதே... உலகத்துல எத்தனை பெண்கள் தனியாவே சுமந்து, பிரசவிச்சு, குழந்தை வளர்த்து... எல்லாத்தையும் பண்ணலையா...?"

"அப்படி ஆகியிருந்தாதான் பரவாயில்லையே? 'விபரீதமான்னா விஷயம் நடந்திருக்கு..."

"நோ ஸ்ரீராம்! டாக்டர் ஷியாமளா சொன்னாங்க, பெரும்பாலும் இந்த மாதிரி மிஸ்காரேஜ் ஆகறது நன்மைக்குத்தானாம். இதனால நம்ம எதிர்கால

ஆர்னிகா நாசர் ?

வாய்ப்புகள்லாம் குறைஞ்சுட்டதா நினைக்கவே வேண்டாம்னு சொல்லியிருக்காங்க. ஆனா, இன்னும் இரண்டு மாசம் எச்சரிக்கையா இருக்கணும். திரும்பவும் உண்டாயிடக் கூடாது."

"இரண்டு வருஷம் வேணாலும் நான் காத்திருக்கேன் சுகி. நீ நல்லபடியா ஆரோக்கியமாயிருக்கணும்."

"பயப்படாதே ஸ்ரீராம். எனக்கு ஒண்ணும் இல்லை. ஒரு வாரத்துல பழையபடி பம்பரமா சுத்திக்கிட்டிருப்பேன் பாரேன்."

அவன் எழுந்து உட்கார்ந்து விட்டான்.

"சரி, இப்போ நீ படுத்துக்கோ கொஞ்ச நேரம்..." அவளைத் தலையணையில் சாய வைத்து. நெற்றியில் வருடிய கைகளைப் பிடித்து நெஞ்சில் வைத்துக் கொண்டாள். மனம் நிச்சலனமாகி பாதுகாப்பு உணர்வு போர்வையாக வந்து கவிந்து கொண்டது.

"திருஷ்டி பட்டுடுமோன்னு பயமாயிருக்கு சச்சு..." கூடத்தில் உட்கார்ந்து நீள நீள பட்டியல்களைச் சரிபார்த்துக் கொண்டிருந்த மகனையும் மருமகளையும் பார்த்தபடி சொன்னார் ராமநாதன்.

"ஒண்ணும் படாது! உங்க கண்ணேவா பட்டுடும்?" சரஸ்வதி சிரித்தபடி சொன்னாள்.

அவன் இப்படிச் சிரித்துப் பார்த்தே ரொம்ப காலமாகி விட்டதாகத் தோன்றியது ராமநாதனுக்கு.

"அப்பா! இங்க வாங்கோ..." - ஸ்ரீராம் கூப்பிட்டதும் போய் நின்றார்.

"இங்க பாருங்க... இந்த ஐம்பது பேருக்கு இரண்டு முறை பத்திரிகை அனுப்பிட்டிருக்கிங்க. இரண்டு லிஸ்டுல இந்த ஐம்பது பேரு அச்சா அப்படியேயிருக்கு... அதனால சமையல் காண்ட்ராக்டர்கிட்டே ஐம்பது சாப்பாடு குறைக்கச் சொல்லணும்..." சுகன்யா கூட்டிக் காட்டியபோது ஸ்ரீராம் மறுத்தான்.

"இப்ப போய் குறைச்சி, கூட்டி குழப்பமெல்லாம் வேண்டாம். ஐம்பது எக்ஸ்ட்ரா சாப்பாடு இருந்தா இருந்துட்டுப் போகட்டும். குறைஞ்சு போகறதை விட கூடுதலா இருந்தா நல்லது."

"இல்லை ஸ்ரீ..." என்று ஆரம்பித்தவள், அவன் பெயரை முழுக்க உச்சரிக்காமல் விழுங்கிக் கொண்டு தொடர்ந்தபோது மாமனார் அதைக் கவனித்துச் சிரித்துக் கொண்டார்.

"ஏற்கெனவே ஐம்பது இலை அதிகமாகத்தான் கணக்குப் போட்டிருக்கோம். அதோட இந்த ஐம்பதும் சேர்ந்தா நூறுன்னா எக்ஸ்ட்ராவாகும்... அது ரொம்ப அதிகம்..." சுகன்யா ஆதரவுக்காக மாமனார் பக்கம் திரும்பினாள்.

அவர் காகிதப் பட்டியல்களை வாங்கிப் பார்த்துவிட்டு, "இது குமார் பண்ணின வேலை.. குழப்பறதுல மன்னன் அவன். அவனையே போய் சமையல்காரனைப் பார்த்து ஐம்பது இலை குறைக்கச் சொல்றேன்."

"பாவம்பா! திட்டாம சொல்லுங்க. இத்தனை நாளா அவன்தானே எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டுக்கிட்டுப் பண்ணிட்டிருக்கான்? இப்போதான் இரண்டு நாளாதானே நாங்க வந்து சேர்ந்திருக்கோம்."

சுகன்யா சொல்லிக் கொண்டிருந்தபோது டெலிபோன் அடித்தது.

எடுத்துப் பேசிய ராமநாதன் "சொல்லுங்கோ மாப்பிள்ளை" என்றபோது குரலில் சூரிய ஒளியின் பிரகாசம்!

"ஓ இருக்காளே... கூப்பிடறேன். இதோ கூப்பிடறேன்."

அப்பாவுடைய குரலின் உற்சாகமே டெலிபோனின் மறுமுனையில் இருப்பது யார் என்பதை உணர்த்திவிட, உள் அறையில் இஸ்திரி போட்டுக் கொண்டிருந்த வசந்தி வேகமாக எழுந்து வந்தாள்.

"சுகன்யா! மாப்பிள்ளை உங்கிட்டே பேசணுமாம்! கூப்பிடறார்..."

காகிதக் கற்றைகளை ஸ்ரீராமிடம் கொடுத்து விட்டு முகம் நிறையச் சிரிப்புடன் எழுந்து போனருகே வந்தாள் சுகன்யா.

உள்ளறை வாசல் கதவருகே நின்ற வசந்தியின் முகம் ஏமாற்றத்தில் உறைந்துபோனது.

"ஹலோ சேகர்! நான் நல்லாயிருக்கேன். ஆமாம். நாங்க இரண்டு நாளா இங்கதானிருக்கோம். ஹெல்த் இஸ் ஆல்ரைட். இப்ப ஒண்ணுமில்லை..."

"......................"

"நோ! நோ! கவலைப்படாதே! நீ எப்படி இருக்கே.... கவுண்ட் டவுன் ஆரம்பிச்சுடுத்து

தங்க நகை பரிசு!

இந்த இருபத்தாறு வாரத் தொடர், ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு கதாசிரியர் பெயரில் வெளியாகி வருகிறது. ஆனால் அவர்களுள் ஒரே ஒரு நபர்தான் இதை எழுதி வருகிறார். தொடரை எழுதியவர் யார் என்பதைக் கண்டுபிடிப்பது உங்கள் சாமர்த்தியம். கடைசி வாரம் வரை காத்திருந்து, அந்த இதழில் வெளியாகும் கூப்பனில் விடை எழுதி அனுப்புங்கள். சரியான விடைக்கு, தங்க நகை பரிசு! பலர் சரியாக எழுதினால் குலுக்கலில் ஒருவரே பரிசு பெறுவார். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

இல்லையா...?"

மறுமுனையில் அவன் என்ன சொன்னானோ, சுகன்யா பெரிதாக விழுந்து விழுந்து சிரித்தாள்.

உரையாடல் தொடரத் தொடர, பார்த்துக் கொண்டேயிருந்த வசந்தியின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன.

"வா! வசந்தி... சேகர்தான் போன்ல..." ரிசிவரின் வாய்ப் பகுதியை மூடியபடி சுகன்யா வசந்தியை அழைக்க, இரண்டு நிமிடங்களாயிற்று.

"இதோ, வசந்தி உங்கிட்டே பேசணும்னு காத்திருக்கா."

ரிசிவரை சுகன்யாவின் கையிலிருந்து பிடுங்காத குறையாக வாங்கிக் கொண்டவள், "ஹலோ" என்றபோது அந்தக் குரலில் இருந்த கடுமையும் சலிப்பும் அனைவரையும் அதிரச் செய்தது.

ராமநாதன் வாசல் பக்கமாக நகர்ந்தார். "ஒரு கப் காப்பி கிடைக்குமா" என்றபடி ஸ்ரீராம் சமையலறை நோக்கிப் போனான்.

சற்று திகைத்து செய்வதறியாது நின்ற சுகன்யா, ஏதோ கருகும் வாடை வருவதை உணர்ந்து உள் அறை நோக்கி விரைந்தாள். அங்கே வசந்தியின் புத்தம் புது சந்தன கலர் டிஷ்யூ ரவிக்கை மேல் வைக்கப்பட்ட இஸ்திரி பெட்டி...

சட்டென்று பிளக் செருகியிருந்த ஸ்விட்சை அணைத்தாள் சுகன்யா. பெட்டியை நிமிர்த்தி எடுத்தபோது கறுப்பாகக் கையகலத்துக்கு ரவிக்கை தீய்ந்து ஒட்டையாகியிருந்தது! துணித் துகள்கள் இஸ்திரி பெட்டியில் ஒட்டிக் கொண்டிருந்தன.

வசந்தியுடைய ரிசப்ஷன் புடைவைக் கென்று அலைந்து தேடி பொருத்தம் பார்த்து வாங்கிய ரவிக்கை. திரும்பவும் வாங்கித் தைக்க... நல்ல வேளையாக இன்னும் அவகாசம் இருக்கிறது... சுகன்யா மனசுக்குள் கணக்குப் போடுவதற்குள் வசந்தி வந்து விட்டாள்.

"போச்சு! தீய்ச்சுட்டேளா என் பிளவுஸை... நாசம்! நாசம்!" - படபடவென்று தலையிலடித்துக் கொண்டவளைக் கண்டு ஒவ்வொருத்தராக வந்து சூழ்ந்து நின்றனர்.

"மறந்து போய் வைச்சுட்டு போன் பேச வந்துட்டே வசந்தி... போனால் போறது.. வேற வாங்கி தைக்கக் கொடுத்துடலாம்..." சுகன்யா சமாதானமாகச் சொன்னாள்.

"நான் எங்க பேசினேன் போன்ல? அதான் நீங்களே ஆசை தீர முதல்ல பேசி முடிச்சுட்டீங்களே. அப்புறம் நான் பேசிட்டு வர்றதுக்குள்ள இப்படித் தீஞ்சு போய் அமர்க்களம்..."

வசந்தி தேம்பித் தேம்பி அழுதது ரவிக்கை பாழாய்ப் போனதற்கு மட்டுமல்ல என்பது சுகன்யாவுக்குப் பளிச்சென்று புரிந்தது.

(தொடரும்)



"இவர் இதுக்கு முன்னால பிளைட்ல போயிருக்க மாட்டாரு போல இருக்குது"

"எப்படிச் சொல்றே?"

"பணிப்பெண் வந்து மிட்டாய் கொடுத்த உடன் உங்களுக்கு 'பர்த்டே'வான்னு கேட்கிறார்!"

— ராஜாதிருவேங்கடம்



"அந்த டைரக்டர் 'லோ-பட்ஜெட்'டில் படம் எடுப்பதில் கில்லாடி!"

"எப்படி?"

"சோகக் காட்சிகளில் கூட கிளிசரின் வாங்காமல், இரண்டு வெங்காயத்தைக் கொடுத்து உரிக்கச் சொல்லி விடுவார்."

— என். பாஸ்கர்



"இருந்தாலும் உங்க பையனுக்கு இந்த அளவுக்கு சினிமா மோகம் இருக்கக் கூடாது."

"அப்படியா....? என்னாச்சு?"

"பின்ன, 'ஆத்திசூடி' யார் எழுதினதுன்னு கேட்டா, 'அவ்வைசண்முகி'னுல்ல பதில் சொல்றான்."

- சொக்கம்பட்டி தேவதாசன்.

ஒரு விடியலின் வெளிச்சம்

ராமலிங்கம் தவிப்பாய் இருந்தார். வேலையே ஓடவில்லை. கையில் வாட்சையும் டேபிளில் டெலிபோனையும் மாற்றி மாற்றி பார்த்துக்கொண்டேயிருந்தார். மனம் ராஜேஷையும் அவன் போயிருக்கும் இண்டர்வியூவையுமே நினைத்துக் கொண்டிருந்தது.

"ராஜேஷ்! இது நல்ல இடம், உனக்கேத்த வேலை. கிடைச்சா உனக்கு அதிர்ஷ்டம்! சர்டிபிகேட்ஸ், இண்டர்வியூ கார்ட் எல்லாம் எடுத்துக்கிட்டியா?"

"ம். ஆச்சுப்பா! படிப்பு, டைப்ரைட்டிங், ஸ்போர்ட்ஸ் எல்லா சான்றிதழும் இருக்கு!"

"ஜாதி சர்டிபிகேட் எடுத்து வைச்சிருக்கியா? முதல்ல அதை அங்கே காட்டு!" என்ற அப்பாவை அசுவாரஸ்யமாய் நிமிர்ந்து பார்த்த ராஜேஷ்,

"அதுவும் இருக்குப்பா" என்றதும் "வெரி குட்! இண்டர்வியூ நல்லா பண்ணு! ஆல் தி பெஸ்ட்" என்றார்.

தன் பையன் ராஜேஷிடம் நடத்திய உரையாடலை மனத்திற்குள் அசைபோட்டார்.

"என்ன ராமலிங்கம்! என்னப்பா காலைலேர்ந்து எதையோ எதிர்பார்த்துக்கிட்டு இருக்கிற மாதிரி பரபரப்பா இருக்கே?" என்ன விஷயம்?"

ராமலிங்கம் நிமிர்ந்தார். பக்கத்து செக்ஷன் சூபர்வைஸர் செல்வகணபதி. அவரைப் பார்த்துப் புன்னகைத்து, "உட்காருயா! நம்ம பையன் ராஜேஷில்ல, அவன் ஒரு இண்டர்வியூக்கு போயிருக்கான். நல்ல வேலை. பையனோட தகுதிக்கு நிச்சயம் கிடைக்கணும். அதுவுமில்லாம அந்த போஸ்டுக்கு பிற்பட்ட பிரிவைச் சேர்ந்த ஒருத்தரைத்தான் தேர்ந்தெடுக்கறதுன்னு முடிவாயிருக்கு."

"சந்தோஷம். அப்ப உன் பையனுக்கு இந்த வேலை கிடைச்சுடும்... வாய்யா அந்த சந்தோஷத்தைக் கொண்டாடணும்" செல்வகணபதி கேண்டீனுக்கு இழுத்துப் போனார். ராமலிங்கம் கவலையாகவே இருந்தார்.

"என்னய்யா ராமலிங்கம்? நல்ல சேதி வரும். எதுக்காக ஒரேயடியா இப்படிக் கவலைப்பட்டுக்கிட்டு இருக்கே?"

"அதுக்கில்லப்பா! நானும் அடுத்த வருஷம் ரிடையர் ஆகப் போறேன்! பையன் அதுக்குள்ள செட்டில் ஆகணும்னு ஆசைப்படறது தப்பா?"

"ஆசைப்படறது தப்பில்ல! ஆனா அதுக்காக கவலைப்படாதேன்னுதான் சொல்றேன்! உன் பையனுக்கு திறமை இருக்கு! அரசாங்க சலுகையும் இருக்கு! ஏன் வீணா அலட்டிக்கிறே! இந்தா ஸ்வீட்டை சாப்பிடு" என்று பிளேட்டை அவர் பக்கம் நகர்த்தினார்.

செல்வகணபதி அப்படி உறுதியாகச் சொன்னதும், ராஜேஷுக்கு வேலை கிடைத்துவிட்டது என்ற சேதியே வந்த மாதிரி உற்சாகமானார் ராமலிங்கம்.

இருவரும் சீட்டிற்குத் திரும்ப வந்தனர். நேரம் நொண்டியது. மதிய உணவு வேளை நெருங்கும் சமயத்தில் டெலிபோன் மணி சிணுங்கியது.

ஓடிச் சென்று ரிஸீவரை அள்ளினார் ராமலிங்கம்.

"ஹலோ யார் வேணும்?"

"சார், அங்க ராமலிங்கம் இருக்கிறாரா?" எதிர்முனை குரல் ஒலித்தது.

"நான்தான் ராமலிங்கம் பேசறேன். யாரு கோதண்டமா?" – பரபரப்பானார் ராமலிங்கம்.

"ஆமா ராமு! இண்டர்வியூ இப்பத்தான் முடிஞ்சுது. பதினாலு பேர் வந்தாங்க!"

"அது கிடக்கட்டும் கோதண்டம்! முடிவு என்னாச்சு! அதச் சொல்லு முதல்ல" டென்ஷன் ஆனார்.

"அது வந்து..." இழுத்தார் கோதண்டம்.

"இதுல என்னய்யா சஸ்பென்ஸ்? நம்ம பையன் கேஸ் என்னாச்சு?"

"அதுதாங்க பிரச்னை ஆயிடுச்சு!

இண்டர்வியூ முடிஞ்ச உடனே நான் உள்ளே போனேன். நம்ம பையன் கேள்விக்கெல்லாம் சரியா பதில் சொல்லித்தான் இருக்கான். ஆனா..."

"இழுக்காதேய்யா... விஷயத்தை போட்டு உடை."

"வேற ஒரு பையன் செலக்ட் ஆயிட்டான். பேரு ரகு. விசாரிச்சப்போ, நம்ம ராஜேஷ் சாதி சர்டிபிகேட்டை காட்டவேயில்லைன்னு தெரியுது. இல்லாட்டா ராஜேஷுக்குத்தான் கிடைச்சிருக்கும்."

ராமலிங்கம் திடுக்கிட்டார். அவர் முகம் கலவரமானது. எதுவும் பேசவில்லை.

"என்ன ராமு? லயன்லே இருக்கியா?"

"ம்... ம்..." என்றார் ராமலிங்கம் சுரத்தில்லாமல்.

"சரி விடு. இந்த இடம் இல்லாட்டா வேற ஒண்ணு" என்றார் கோதண்டம்.



"இல்ல கோதண்டம்! வேற ஒருத்தன் அந்த வேலையில் சேர்ந்ததில் எனக்கு வருத்தம் இல்லை! ஆனா இவன் ஏன் இப்படி பண்ணணும்? சரி... நான் சாயங்காலம் உன்னை வீட்டில் வந்து பார்க்கிறேன்" என்று சொல்லி ரிசீவரை சாத்தினார்.

மனசு எதிலும் லயிக்கவில்லை. மேனேஜரிடம் அரை நாள் விடுப்பு கொடுத்துவிட்டு வீடு திரும்பினார்.

"ராஜேஷ்! ராஜேஷ்!" வாசலில் செருப்பைக் கழற்றும் முன்பே குரல் கொடுத்தார்.

"வாங்க! என்ன ஆபிஸிலிருந்து இப்பவே வந்திட்டீங்க? உடம்புக்கு ஏதும் முடியல்லையா?" பதட்டமாய்க் கேட்ட மனைவியை ஏறிட்டார்.

"உடம்புக்கு ஒண்ணுமில்லை. ராஜேஷ் எங்கே?"

"இப்பத்தான் வந்தான். இன்னும் சாப்பிடக் கூட இல்லை. ஏன்? என்ன விஷயம்?"

கேட்ட மனைவிக்கு பதில் ஏதும் கூறாமல் உள்ளே சென்றார் ராமலிங்கம்.

படுத்திருந்த ராஜேஷ் எழுந்து உட்கார்ந்த பின், "வாங்கப்பா! என்ன இந்த நேரத்திலேயே வந்துட்டீங்க?"

அவன் கேள்விக்கு பதில் சொல்லாமல், "நீ போயிட்டு வந்த இண்டர்வியூ என்ன ஆச்சு?" என்றார்.

"அதெப்படிப்பா அதுக்குள்ள தெரியும்? ரிசல்ட் தபாலில்தானே வரும்?" என்றான் அவர் கேள்வி புரியாதவனாய்.

"வரும் வரும்! எதிர்பார்த்திட்டே இரு! பொருமிய அவர், "எனக்கு எல்லாம் தெரியுண்டா! அந்த போஸ்டுக்கு ரகுன்னு ஒரு பையன் செலக்ட் ஆயிட்டான் தெரியுமா?" என்றார்.

பொன்மலை ஆர். பிரகாஷ்

அதைக் கேட்ட ராஜேஷ் முகம் மலர்ந்தது. "அப்படியா?" என்றான் சந்தோஷமான குரலில்.

அவன் குரலில் இருந்த சந்தோஷம் ராம லிங்கத்தை மேலும் வெறுப்பேற்றியது.

"உனக்குக் கிடைக்க வேண்டிய வேலையை வேறொருத்தன் கொத்திக்கிட்டு போய்ட்டான். அதைக் கேட்டு வருத்தப்படாம... உனக்கு பொறுப்பே கிடையாதா?"

"இருக்குப்பா! பொறுப்பு இருக்கிறதால வந்த சந்தோஷம் இது! விட்டுக் கொடுக்கறதாலே கிடைச்ச சுகம் இது! சமூகப் பிரக்ஞையோட நான் நடந்துக்கிட்டேன்ற பெருமை சேர்க்கிற விஷயம் இது!"

"நிறுத்துடா! என் ப்ரண்ட் கோதண்டம் போன் பண்ணினான். நீ கடைசி வரை ஜாதி சர்டிபிகேட்டைக் காட்டவேயில்லையாமே! அதனாலதான் உனக்கு இந்த வேலை கிடைக் கலைன்னும் சொன்னான்!"

"உண்மைதான்! ஆனா...."

"என்னடா ஆனா? உன்னை வளர்க்க, படிக்க வைக்க எவ்வளவு கஷ்டப்பட்டிருப் பேன்? ஏன் நீயும் கஷ்டப்பட்டு உழைச்சுதான் இந்த டிகிரி வாங்கின? அதை மறந்திட்டு..."

"மறக்கலைப்பா! அதனால்தான் நான் இப்படி செஞ்சேன்!"

"எதை மறக்கலை? நீ டிகிரி முடிச்சு இரண்டு வருஷம் ஆச்சுங்கறதையா? அடுத்த வருஷம் நான் ரிடையர் ஆகப் போறேங் கறதையா? எதை மறக்கலை?"

ராஜேஷ் தீர்க்கமாக அவரைப் பார்த்தான். "அப்பா உங்க தாத்தா என்னவாயிருந்தார்?"

"அது எதுக்குடா இப்ப! அதுக்கும் நீ நடந்து கிட்டதுக்கும் என்ன சம்பந்தம்?"

"இருக்குப்பா! சொல்லுங்க!"

"நம்ம கிராமத்துல பண்ணையார்கிட்ட கூலியாளா இருந்தாரு! அதுக்கென்ன?"

"சரிப்பா! என் தாத்தா, அதான் உங்க அப்பா என்ன படிச்சாரு?"

ஏன் பியூசி. வரைக்கும் படிச்சாரு. அப் புறம் முனிஸிபாலிட்டி ஆபீஸ்ல கிளார்க்கா வேலையில் சேர்ந்தாரு!"

"உங்க தாத்தாவோ கூலியாளு. அப்ப நம்ம கிராமத்துலேயோ ஆரம்பப் பள்ளி கூட கிடை யாது. அப்படி இருக்கறச்சே உங்க அப்பா எப்படி படிச்சாரு!"

"இதென்ன கேள்வி! பண்ணையாருதான் வேண்டப்பட்டவங்கள பார்த்து, நம்ம சாதிக்கு அரசாங்கம் தந்த சலுகையைத் தெரிஞ்சுகிட்டு என் அப்பாவை சல்லிக்காசு செலவு இல்லாம பக்கத்து டவுன்ல ஹாஸ்டல்ல தங்க வச்சு இலவசமா படிக்க வச்சாரு!"

"சரி! நீங்க எப்படி எம்.ஏ. வரை படிச்சீங்க?"

"இதென்ன கேள்வி? உன் தாத்தாதான் நல்ல வேலைல இருந்தாருல்ல? அரசாங்க சம்பளம்! அது தவிர கிராமத்தில் வேற கொஞ்சம் நிலம் வாங்க முடிஞ்சது. இரண்டும் இருக்கறச்ச நான் படிக்க என்ன கஷ்டம்? அதான் எம்.ஏ. வரை

ஒரு கை பார்ப்போமா?

யாருடைய கரம் தாழ்ந்து மேஜையைத் தொடும்? தோல்வியைத் தழுவும்? இந்த கை-ஸுமோ யுத்தத்தை சில திரைப்படங்களில் பார்த்திருக்கலாம். படத்தில் வலதுபுறம் இருக்கும் யமமோடோ கை-ஸுமோ யுத்தத்தில் ஜப்பானில் நெ.1. வயது என்ன தெரியுமோ? 96! "கை-ஸுமோ என்பது கை மட்டும் சார்ந்த வீர விளையாட்டு அல்ல; உச்சந்தலையிலிருந்து உள்ளங் கால் வரை உடல் தசைகள் அனைத்துக்கும் இதில் வேலை உண்டு" என்கிறார்.

நன்றி : பஸிஃபிக் ஃப்ரெண்ட்



படிச்சேன். இதோ கைநிறைய சம்பாதிச்சுக்கிட்டும் இருக்கேன்!"

"நீங்க படிச்சது... வேலைல சேர்ந்தது எல்லாம் உங்க சுய முயற்சியாலேதான்னு நினைக்கறீங்களா?"

"முழுசா அதான் உண்மைன்னு சொல்ல முடியாது. ஏன்னா, சொந்த முயற்சியும், அரசாங்க சலுகையும் சேர்ந்துதான் என்னை பெரியவனா ஆக்கினது!" என்றார்.

"கரெக்ட்! அதைத்தான் நான் சொல்ல வரேம்பா! நாம பரம்பரை பரம்பரையா பண்ணையார்கிட்டே கூலி வேலை செஞ்சே பிழைச்சிருக்க வேண்டியவங்க! இப்ப எல்லாருக்கும் சமமா படிச்சு உயர்ந்த வேலை பார்த்து, கைநிறைய காசு பார்க்கிறோம்னா அதுக்கு பின்னால இருக்கற அரசாங்கத்தையும் நினைக்கணும். நம்மைப் போன்றவர்களுக்கு அது அளிக்கிற சலுகையைப் புரிஞ்சு பயன்படுத்தணும்!"

"யாரு இல்லேன்னா? அரசாங்கத்தோட சலுகையையோ, அதை நம்மளுக்கு வாங்கித் தந்த பெரியவங்களையோ நாம மறக்கலையே!"

"நான் அதைச் சொல்லலைப்பா! அரசாங்க சலுகைகள் சேர வேண்டியவங்களுக்கு சேர்ந்தால் அது எதிர்பார்த்த பலனைக் கொடுக்கும். உங்க தாத்தா இருந்த நிலைமையில் உங்களுக்கு அரசாங்க சலுகை தேவைப்பட்டு இருந்தது. பின்னாடி உங்க அப்பா தலையெடுத்து, நாம சொந்தக் கால்ல நிக்க ஆரம்பிச்ச பிறகும் சலுகை ஊன்றுகோலை தேடக் கூடாதுப்பா! குழந்தை நடைபயிலற வரைக்கும்தான் நடை வண்டி தேவைப்படணும். பின்னாடியும் அது கைல வலுக்கட்டாயமா திணிக்கக் கூடாது. நடக்க, ஓட அது படிப்படியா தெரிஞ்சிக்கணும்."

"நீ என்ன சொல்ல வரே? எல்லாரும் முன்னேறியாச்சு. அரசாங்க சலுகை தேவையே இல்லைங்கறயா?"

"இல்லப்பா! சலுகை தேவைதான். ஆனா அது நம் குடும்பத்துக்கு தேவை இல்லைங்கறேன். நாம குறுக்க நிக்காம விலகி வழி விடணும்னு சொல்றேன். அப்பத்தான் அது நெசமாகவே தேவைப்படற ஒரு நபருக்குப் போய்ச் சேரும். சுதந்தரம் வாங்கி இத்தனை வருஷமாகியும் நம்ம இன மக்கள் முன்னேறலைன்னு சொன்னா அதுக்கு என்ன காரணம்? எங்கேயோ ஓட்டை இருக்கு! அதை சரி பண்ணணும். சலுகையை அனுபவிச்சு பலன் அடைஞ்சவங்க, தாங்களாகவே முன் வந்து இனி சலுகை தேவையில்லைன்னு சொல்லணும். சொல்ல வைக்கணும்."

"அதுக்கு?"

"அதுக்காகத்தாம்பா நான் சாதி சர்டிபிகேட்டை காட்டல. இந்த போஸ்டுக்கு செலக்ட் ஆனானே ரகு, அவன் எம்.காம் படிச்சிருக்கான். அவன் அப்பா ஒரு செருப்பு தைக்கற தொழிலாளிப்பா! குடும்பத்திலே அவன்தான் முதல் பட்டதாரி. இப்ப அவன் தன் வாழ்க்கையில செட்டிலாயிட்டா தன் பிள்ளையை அவன் படிக்க வச்சிப்பான். சலுகை அடுத்தவனுக்குப் போகும்!"

"அதுக்கென்ன உத்திரவாதம்?" இடக்காக கேட்டார் ராமலிங்கம்.

"நம்பிக்கைதாம்பா! சலுகையைத் தவறா பயன்படுத்த மாட்டோம்கற நம்பிக்கை. சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க! மூணு தலைமுறைக்கு அப்புறமும் நாம சலுகை நிழலைத் தேடறது சரியா? எனக்குத் தப்புன்னு தோணுதுப்பா! என் குழந்தைங்ககிட்ட நான் முன்னேறி பெரியாளா இருக்கறது என் சொந்த முயற்சியாலேன்னு சொல்லி பெருமைப் படணும்னு ஆசையா இருக்குப்பா!"

ராமலிங்கத்துக்கு ஏதோ கதவு திறந்தாற் போல இருந்தது. மகனைப் பெருமை பொங்கப் பார்த்தார். அவர் கண்கள் லேசாக நனைந்திருந்தன.




"பொதுமக்களிடம் கை தட்டல் வாங்கறதுக்காக தலைவர் இப்படியெல்லாமா பேசறது?"

"என்ன பேசினார்?"

"ஊழல் பண்றதுக்கு தமிழ்நாட்ல- ஏன் இந்தியாவுல, அட விடுப்பா உலகத்துலே என்னை அடிச்சுக்க ஒரு பயல் உண்டா?'னு பேசியிருக்கிறாரே..."

—எஸ்.எஸ்.பூங்கதிர்



"ஏழேழு ஜென்மத்து ஞாபகங்களும் தொடர்ச்சியா வருது டாக்டர்! பயமா இருக்கு!"

"சரியாப் போச்சு! செஸ் ஆனந்த் சொன்னார்னு மெமரி பிளஸ் அளவுக்கு அதிகமா சாப்பிட்டீங்க போல!"

—அ.சு.கிருஷ்ணன்

புதிய வட்டி விகிதங்கள் (14.10.96 முதல்)

ஃபிக்ஸட் டெபாஸிட்

மாதங்கள்	மாதாந்திர		காலாண்டு		அரையாண்டு		ஆண்டு	
	வட்டி	வருவாய்	வட்டி	வருவாய்	வட்டி	வருவாய்	வட்டி	வருவாய்
12 மாதம் &1 நாள்	16.00%	16.00%	16.00%	16.21%	16.00%	16.54%	17.00%	18.39%
18	18.00%	18.00%	18.00%	18.27%	18.00%	18.69%	18.00%	19.27%
24	18.50%	18.50%	18.50%	18.79%	18.50%	19.23%	18.50%	20.15%
36	18.50%	18.50%	18.50%	18.79%	18.50%	19.2[illegible]	18.50%	20.15%
48	18.50%	18.50%	18.50%	18.79%	18.50%	19.23%	18.50%	20.15%
60	18.50%	18.50%	18.50%	18.79%	18.50%	19.23%	18.50%	20.15%

வட்டி மாதாந்திர இடைவெளிகளில் கணக்கிடப்படுகிறது

குமுலேடிவ் டெபாஸிட்

மாதங்கள்	வட்டி விகிதம்	முதிர்வுத்தொகை ரூ.3,000க்கு	ஆண்டு வருவாய்
12 மாதம் &1 நாள்	17.00%	3551.68	18.39%
18	19.00%	3980.39	21.79%
24	20.00%	4460.74	24.35%
36	20.00%	5439.39	27.10%
48	20.00%	6632.75	30.27%
60	20.00%	8087.91	33.92%

வட்டி மாதாந்திர இடைவெளிகளில் கணக்கிடப்படுகிறது

மேற்கூறிய வட்டி விகிதங்கள் NRI டெபாஸிட்டுகளுக்கும் பொருந்தும்

போதிய பாதுகாப்பிற்கான CARE நிறுவனத்தாரின் BBB + பெற்றுள்ளது

RBI-இன் நற்சான்றிதழ் பெற்றது

Ram Kaashyap Investment Ltd

பதிவு அலுவலகம் : 53, பிஷப் கார்டன் (கிரீன்வேஸ் ரோடு அருகில்), சென்னை 600 028. போன் : 4936931, 4936932.
நிர்வாக அலுவலகம் : 11, வெங்கட்ராமன் தெரு, ஸ்ரீனிவாசா அவென்யூ, R.A.புரம், சென்னை 600 028. போன் : 4951544, 4951546, 4952390
கிளைகள் : சென்னை : • தி.நகர், போன் 4341513 • அடையாறு, போன் 418081 • அண்ணா நகர், போன் 610979 • மேற்கு மாம்பலம், போன் 4896638 • ஆழ்வார்பேட்டை, போன் 4998325, 4970204/05 • மைலாப்பூர், போன் 4951650, 4950920 • **கோயம்புத்தூர்**, போன் : 231886 • **திருச்சி**, போன் : 704752 • **தஞ்சாவூர்**, போன் : 25871 • **மதுரை**, போன் : 741802 • **கும்பகோணம்**, போன் : 24221 • **ஈரோடு**, போன் : 79822 • **வேலூர்**, போன் : 26336 • **பாண்டிச்சேரி**, போன் : 46154 • **சேலம்**, போன் : 418171 • **திண்டுக்கல்**, 24, புது அக்ரஹாரம், திண்டுக்கல் – 624 007 • **காரைக்குடி** : ஸ்ரீ ஜெயவிலாஸ் காம்ப்ளெக்ஸ், 108, நூறடி ரோடு, புது டவுன், காரைக்குடி – 636 001 • **திருநெல்வேலி** : கடை நெ.5, எவரெட் காம்ப்ளெக்ஸ், நெ.182/E, 24, S.N. ஹை ரோடு, திருநெல்வேலி – 627 001.
மற்றைய கிளைகள் : • ஆந்திர பிரதேசம் • கொச்சி • பெங்களூர் • மும்பாய் • புனே • புது டெல்லி.

* இந்நிறுவனம் இந்திய ரிசர்வ் வங்கியில் (RBI) பதிவு செய்யப்பட்டு டெபாஸிட் பெற்றுக் கொள்வதில் சில சலுகைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இருப்பினும் அவ்விதம் பதிவு செய்யப்படுவதாலும் அல்லது சலுகைகள் அனுமதிக்கப்படுவதாலும் இந்நிறுவனத்தின் நிதி நிலை சுகாதாரத்திற்கோ நிறுவனத்தின் எந்த ஒரு கூற்று/வேண்டுகோள்/கருத்தின் சரியான தன்மைக்கோ டெபாஸிட்டைத் திரும்பத் தருவதற்கோ நிறுவனத்தின் கடன்களை அடைப்பதற்கோ இந்திய ரிசர்வ் வங்கி எவ்விதப் பொறுப்பும் ஏற்காது என்பது இதன்மூலம் தெளிவுபடுத்தப்படுகிறது.

மேலும் விவரங்களுக்கு 7.6.96 தேதியிட்ட 'டிரினிட்டி மிரர்' மற்றும் 10.6.96 தேதியிட்ட 'மக்கள் குரல்' நாளிதழ்களில் வெளியிடப்பட்டுள்ள சட்டபூர்வமான ஃபிக்ஸட் டெபாஸிட் விளம்பரங்களைப் பார்க்கவும்.

உலகக் கண்ணோட்டம்; தனி மனித மேம்பாடு

இன்டர்நெட்டில் பிடித்தவை

அழகிப் போட்டிக்கு என்ன வயசு?

'எங்கே பார்த்தாலும் பெங்களூர்க் காரர்கள்தான்...''

நான் மூடி வைத்த பத்திரிகைப் பக்கத்தில் ரோட்லை பெவிலியனுக்குப் பார்சல் பண்ணிவிட்டு, மும்பை கிரிக்கெட் மேட்சில் கும்ப்ளே வானத்துக்கும் பூமிக்குமாகக் குதிக்கிற காட்சி.

''பெங்களூர்க்காரங்க காட்டிலே மழையோ என்னமோ.. அவங்க ஊர்லே அடாத மழை அடிச்சாலும் விடாமே அழகிப் போட்டி நடத்தியே தீருவேன்னு அமிதாப் தீர்மானமா இறங்கி இருக்கார். எதிர்ப்பு மழையைச் சொல்றேன்..''

அச்வின் பேசியபடி கம்ப்யூட்டரில் http://www missworld 96.com என்று விலாசம் கொடுக்க, இன்டர்நெட்டில் அழகிப் போட்டிக்கான தகவல் வீட்டில் போய் நின்றோம்.

பழுப்பும் சிவப்பும் கலந்த பின்னணியில் கஜுராஹோ சிற்பங்கள் அணிவகுக்க, விரிந்த தகவல் பக்கம். லேசாகக் கண்ணை உறுத்தும் கலர்.

''அழகிப் போட்டிக்கு வயசாயிடுச்சு.''

அச்வின் திரையைப் படித்தான்.

''நாற்பத்து ஐந்து வயது. பெண்ணழகு என்ற அற்புதமான விஷயத்தை சமுதாய நலனுக்காகப் பயன்படுத்துவது... இந்த சீரிய நோக்கத்துக்காகவே எரிக் மார்லே என்ற ரசிக மகா திலகம் ஆரம்பிச்சு வச்சாராம். ஆறு வருசம் முன்பு வரை உலக அழகிகளை இங்கிலாந்துக்கு வரவழைத்து ரசித்து சமூக சேவை செய்துட்டு, அப்புறம் ஹாங்காங், அமெரிக்காவிலே அட்லாண்டா, தென் ஆப்பிரிக்காவிலே சன்சிட்டின்னு ஊர் ஊரா மேடை போட்டாங்களாம்... இப்ப இங்கே..''

நவம்பர் பதினொண்ணு முடிய செஷல்ஸிலேயும் அப்புறம் பெங்களூரிலும் நடக்கப் போகும் போட்டி விவரங்கள் தகவல் பக்கத்தில் கிரமமாகத் தென்படுகின்றன. போட்டி நீதிபதிகள், பங்கேற்கும் அழகிகள் பற்றிய புள்ளி விவரங்கள், நடத்துகிறவர்களின் கம்பெனி வரலாறு என்று உபதலைப்புக்கள்....

நான் நினைத்தபடியே அச்வின் 'அழகிகளின் புள்ளி விவரங்களை'த் தேர்ந்தெடுக்க, 'இன்னும் வந்து சேரலே... அப்புறமாத் தரோம்' என்று தகவலர்கள் அசடு வழிந்தார்கள். 'A' மாற்றம்.

''என்னப்பா ஹோம்பேஜ்... அழகிப் போட்டிக்காக பிரத்தியேகமா இளையராஜா போட்ட மியூசிக்கிலே ஒரு நறுக்கு... ஃபைனல்ஸுக்கு நடுவரா வர ஜெயசூரியா இனீன் போல்ட் ஆவாரான்னு அலசல்... ரெண்டாயிரம் டிக்கட் வாங்கி படை பட்டாளத்தோட பார்க்க கிளம்பிவர புருனை

நெட் ஜோக்!

அது ஒரு சிறிய விமானம். விமானியும் சகவிமானியுமாக இரண்டே பேர்தான். பறந்து கொண்டிருந்தபோது திடீரென்று வழிதவறிப் போய்விட்டது. ''ஜான்.பெட்ரோல் தீர்ந்துட்டு இருக்கு... நாம எங்கே இருக்கோம்னு தெரியலியே...''

சீனியர் சொன்னபடி விமானத்தைத் தாழப் பறக்கவிட, வரிசையாகக் கட்டடங்கள். ஜான் ஒரு அட்டையில் 'நான் எங்கே



• அமிதாப்: எதிர்ப்பு மழை

சுல்தான் ஜாதகம்... இப்படிப் போட்டு வைக்காம... பி.டபிள்யூ.டி. டெண்டர் விளம்பரம் கூட இதைவிட சுவாரசியமா இருக்கும்...''

அலுத்துக் கொண்டு அச்வின் கொடுத்த அடுத்த விலாசம் http:/www.tamil.net

''கடல்கடந்த தமிழர்கள்... முக்கியமா சிங்கப்பூர், மலேசியா வாசிகள் பங்கு பெறும் தகவல் பக்கங்கள் இதெல்லாம்...''

திரையில் 'முரசு' என்ற மின்பத்திரிகை. கட்டுரை, மொழிபெயர்ப்புக் கவிதை, விளையாட்டுப் பக்கம், நகைச்சுவை என்று அமர்க்களப்படுகிறது. கண்ணுக்கு சிரமம் கொடுக்காத புஷ்டியான தமிழ் எழுத்துக்கள்.

'இது முரசு என்ற தமிழ் எழுத்து வடிவம்... இவங்க உருவாக்கி இலவசமாகவே கொடுக்கறாங்க... நீ இந்த வேர்ட்பிராசசரைப் பார்க்கலியே...''

அச்வின் முரசு அஞ்சல் என்ற வேர்ட்பிராசசரை இயக்கிக் காட்டினான்.

தமிழ் டைப்ரைட்டிங் தெரியலியேன்னு கவலையே வேண்டாம். கீ போர்டுலே இங்கிலீஷ்லே டைப் அடிச்சுக்கிட்டே வந்தா உடனுக்குடன் அது திரையிலே தமிழா மாறிவரும்... கோப்பிலேயும் சேமிச்சு அழகா அச்சடிச்சுக்கலாம்! அது மட்டுமில்லே... தமிழ் ஈமெயில்... அதான்ப்பா மின் அஞ்சல் கூட கம்ப்யூட்டர் வழியா அனுப்பலாம்.''

சொல்லிக் கொண்டே அச்வின் கீபோர்டில் KALKI என்று எழுத்தெழுத்தாகத் தட்ட, கம்ப்யூட்டர் திரையில் தமிழில் கல்கி!

"தமிழ்நெட்டுலே சாவகாசமா மேயலாம்.... இதைப்பாரு.. படு சுவாரசியமா இருக்கு... மீன் சத்தம் கேக்குதாம்...''

நான் http://www.phthonline.com என்ற தகவல் வீட்டில் Sound of Fish என்ற தகவலைக் காட்டினேன்.

ஆழ்கடலில் ஏதாவது அபூர்வ மீனைப் பின் தொடர்ந்து போய் விசேஷமான ஒலிப்பதிவுக் கருவிகள் கொண்டு சப்தத்தை ரிக்கார்ட் செய்திருப்பார்கள். அறிவியல் தான் எப்படி எல்லாம் முன்னேறிக் கொண்டிருக்கிறது!

சடசடவென்று சம்பந்தப்பட்ட ஃபைலை நம் கம்ப்யூட்டரில் இறக்கிப் போட்டுப் பார்க்க, கரகரப்பான ஆண்குரல் "FISH" என்றது!

இண்டர்நெட் மீன் 'கடி'.

- இரா. முருகன்.

இண்டர்நெட் உதவி: SAP Computer (p) Ltd, Chennai - 17.

இருக்கிறேன்?' என்று எழுதிப் பிடித்துக் கொண்டு ஜன்னல் வழியாகக் காட்டினான். கட்டடங்களிலிருந்து எட்டிப் பார்க்கும் யாராவது பதிலை எழுதிக் காட்டுவார்களா?

அடுத்த நிமிடம் சொல்லி வைத்தாற் போல எல்லாக் கட்டடங்களிலிருந்தும் அட்டைகள் அசைந்தன- "நீங்கள் உங்கள் விமானத்தில் இருக்கிறீர்கள்!"

"இடம் தெரிஞ்சு போச்சு... சிலிக்கன் பள்ளத்தாக்கு..'' ஜான் நம்பிக்கையோடு சொன்னான்.

''எப்படிக் கண்டு பிடிச்சே?'' விமானத்தை வெற்றிகரமாகத் தரை இறக்கிய சீனியர் கேட்டார்.

''ரொம்ப சிம்பிள்... கம்ப்யூட்டர் காரங்க நிறைய இருக்கற இடம்னா, அது சிலிக்கன் பள்ளத்தாக்குதான்னு ஒரு ஊகம்தான்...''

''அதுசரி... அவங்க எல்லாருமே கம்ப்யூட்டர் ஆசாமின்னு எப்படித் தெரிஞ்சுது?''

''எங்கே இருக்கேன்னு கேட்டா விமானத்துக்குள்ளேன்னு பதில் வந்ததே... இந்த மாதிரி வெகு துல்லியமா, தப்பே கண்டுபிடிக்க முடியாத, ஆனா ஒரு பிரயோஜனமும் இல்லாத தகவலை கம்ப்யூட்டர்காரங்களாலேதான் தர முடியும்.''

குறையொன்றுமில்லை

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

28

ஒரு சமயம் மனசுக்கும் வாக்குக்கும் இடையே பெரிய சண்டை வந்தது. வாக்கு, மனசைக் கேட்டது - "சதா என்னை சச்சரவு பண்றியே... கொஞ்சம் யோசனை பண்ணிப் பாரு நீ... நான் இல்லைன்னா உனக்குப் பிரயோஜனம் உண்டா? என் உதவியினாலதானே நீ வெளியில வர முடியறது...?"

மனசிலே ஆயிரம் எண்ணங்கள் இருக்கும். அடியேன் இங்கே வந்து உட்காருகிறேன். ராத்திரி ஒன்பது மணி வரைக்கும் வாயைத் திறக்காமலே உட்கார்ந்திருந்தால்... என் மனத்திலே என்னதான் விஷயங்கள் ஓடினாலும் அது எதிரே இருப்பவர்களுக்கு ஏதாவது புரியுமோ?

வாக்தேவதை இல்லாத மனத்தினாலே பிரயோஜனமில்லை - என்று வேதமே சொல்கிறது. இன்னொரு இடத்தில், 'மனிதர்கள் ஒருத்தரோடு ஒருத்தர் தொடர்புகொண்டு எதனாலே மேன்மையுறுகிறார்கள் என்றால், வாக்கினாலேதான் அவ்வாறு மேன்மையுறுகிறார்கள் என்கிறது வேதம்!

உலகிலே மனிதர்கள் வாக்கினால் பரிமாறிக் கொண்டுதான் உறவு முறையை வளர்த்துக் கொள்கிறார்கள்.

வாக்கு கேட்ட கேள்விக்கு வருவோம்... அதற்கு மனசு பதில் சொன்னது : "நான் மட்டும் இல்லாவிட்டால் நீ தனியாப் பேசிட முடியுமா? நான் விஷய தானம் பண்ணினால்தானே நீ பேச முடியும்?"

'வாக்கு'வாதம் தொடர்ந்தது. ஏகமாய் சண்டை..! கடைசியில், இரண்டுமே 'பிரும்மாவிடம் போய்க் கேட்போம்' என்று நியாயம் கேட்கக் கிளம்பிப் போயின.

வாதி - பிரதிவாதி இரண்டுமே பிரும்மாவிடம் போய் நின்றன. 'எங்களுள் யார் பெரியவன்' என்று கேட்டன. இந்த பிரும்மா பாவம்! லௌகிகமே தெரியாதவர். உலகம் முழுவதையும் படைக்கிறவர் என்றாலும் அவருக்கு லௌகிகம் தெரியவில்லை!


"என்னுடைய படைப்பைச் சொல்கிறேன். எப்படி படைத்தேன் என்று சொல்கிறேன் - நீங்கள் சண்டை போடக் கூடாது!" என்றார்.

"மனசை முன்பு சிருஷ்டி பண்ணினேன் வாக்கை பின்பு சிருஷ்டி பண்ணினேன். பிராணனை முன்பு சிருஷ்டி பண்ணினேன். அபானனை பின்பு சிருஷ்டி பண்ணினேன்... ஆகவே மனசுதான் பெரிது. வாக்கு சிறியது! ஏ வாக்கே, மனசுடன் சண்டை போடாதே..." என்று சொல்லி விட்டார்.

வாக்குக்கு ஏகமாய்க் கோபம். "என்னையும் படைத்து, மனசையும் படைத்து... இப்படி நாங்கள் மத்யஸ்தம் கேட்க வந்த நேரத்தில் என்னை மட்டம் என்று சொல்லி விட்டீரே! அதுவும் அந்த மனஸ்ஸைப் பக்கத்தில் வைத்துக் கொண்டே சொல்லி விட்டீரே... என்னால் உமக்குப் பிரயோஜனமே இல்லாமல் போகக் கடவது!" என்று சாபமே கொடுத்து விட்டது வாக்கு!

இந்தச் சாபம் காரணமாகத்தான் பிரும்மாவுக்கு என்ன மந்திரம் சொன்னாலும் உரக்க சொல்லக்கூடாது என்று வழக்கம் ஏற்பட்டுள்ளது. உரக்கச் சொல்லப்படும் மந்திரம் பிரும்மாவுக்குப் போய்ச் சேரவே சேராது!

சபித்துவிட்டுப் போன வாக்தேவதை அதோடு விட்டுவிடவில்லை. கோபத்துடன் ஒரு மூலையிலே போய் உட்கார்ந்து அழுதது. இந்த மனசு சும்மா இருக்கலாமல்லவா! அதான் இல்லை! அங்கேயிருந்து வந்து வாக்தேவதையை முதுகிலே ஒரு தட்டு தட்டியது. "பெரிசா பேசினியே... பிரும்மா என்ன சொன்னார் பார்த்தியா...? அதுக்கப்புறமும் உனக்குத் தெளிவு வரலை... இப்படி விசாரப்பட்டுக் கொண்டு அழுதுகொண்டு உட்கார்ந்திருக்கியே...? என்னைப் பெரியவன் என்று ஒப்புக்



கொன்வதில் உனக்கென்ன கஷ்டம்?" என்று கிண்ட ஆரம்பித்தது.

"சரி, பிரும்மா சொன்னதை விட்டுடு; இப்போ உனக்கும் எனக்கும் போட்டி. நான் பரப்ரும்மத்தைப் பார்க்கப் போறேன். உனக்கு சக்தி இருந்தால் ஓடி வா பார்ப்போம்..." என்று மேலும் சொல்லிவிட்டு மனசு 'குடுகுடு'வென்று ஓட ஆரம்பித்து விட்டது.

வாக்குக்கு அந்தக் கணத்தில் ரொம்ப பௌருஷம் வந்து விட்டது. அப்படியா சங்கதி! நானும் வருகிறேன் என்று மனஸோடு சேர்ந்து ஓடியது. மனசு ரொம்ப ரொம்ப வேகமாகப் போயிற்று. அந்த வேகத்தில் போக முடியாமல் வாக்கு ஏதோ தன் வேகத்திலே ஓடிப் போனது. ஆனால் இரண்டும் எத்தனை வேகமாய்ப் போய்த் தேடியும் அந்த பரப்ரும்மத்தைக் காண முடியவில்லை!

வேகமாய் வந்து கொண்டிருந்த வாக்கு, திரும்பி ஓடி வந்து கொண்டிருந்த மனஸைப் பார்த்துக் கேட்டது :

ஜாலி போட்டி – 13 முடிவு

ஒரு கிரிக்கெட் மைதானக் காட்சியைக் கொடுத்துவிட்டு, அதில் வேண்டுமென்றே செய்யப்பட்ட எட்டு தவறுகளைக் கண்டுபிடிக்கச் சொல்லிக் கேட்டிருந்தோம். பலர் சரியாகக் கண்டுபிடித்து விட்டார்கள். குலுக்கல் முறையில் ரூ. 5000 பரிசு பெறுபவர் :

சோ. ல. இளஞ்சேரன்,
93-ஏ, சங்ககிரி சாலை,
சீத்தாராம்பாளையம்,
ராஜாஜி மாவட்டம் – 637 209.

வாழ்த்துக்கள்.

சரியான விடைகள் :

1. பகலில் எரியும் விளக்கு
2. பேட்ஸ்மேன் கையில் ஹாக்கி மட்டை
3. கிரிக்கெட்டில் ஷட்டில் கார்க் பந்து?
4. ரன்னர் இல்லையே?
5. டிரிங்ஸ் வண்டியை இழுக்கும் மாடு.
6. மைதானமா? மலர் வனமா?
7. ஐயே, லுங்கி கட்டிய ஃபீல்டர்!
8. பார்வையாளர்களுள் ஒருவர் பைனாகுலருக்கு பதிலாக பூதக்கண்ணாடி அல்லவா வைத்திருக்கிறார்?

"ஏ மனசே! என்னைக் காட்டிலும் அதி வேகமாய் ஓடினாயே... அந்த பரபிரும்மத்தைக் கண்டாயா...?"

'இல்லை' என்று கையை விரித்து விட்டது மனசு! வாக்குக்கு ஒரே சந்தோஷம்! ஒரு எகிறு எகிறி மனசினுடைய தோள் மேல் ஏறி உட்கார்ந்துகொண்டு, "நீயும் நானும் கூட்டாளி தான்; நீயும் நானும் ஒண்ணுதான்.... வா!" என்றதாம்.

இப்படி ஒப்புவமை சொல்லிக்கறதுல சிலர் சமர்த்தர்கள். ஒருத்தர் சொல்கிறார், "அந்த சதுர்முக பிரும்மாவும் நானும் ஒண்ணுதான்..." என்று!

"எப்படி?"

"ஒருவிதத்துலே சமம்."

"எந்த விதத்திலே...?"

"அந்த சதுர்முக பிரும்மாவுக்கும் பரப்ரும்மத்தைக் குறித்துப் பிரமாணமாய்த் தெரியாது... எனக்கும் தெரியாது!" என்றார்!

அந்த மாதிரிதான்! மனம் ஓடியதையும் வாக்கு ஓடியதையும் அட்டவணை போட்டுப் பார்த்தால், மனம் ஓடிய தூரம் ரொம்ப அதிகம். ஆனால் வாக்கு, மனம் இரண்டுக்கும் வாய்த்த பலன் ஒன்றுதான்! ஓடிய தூரம்தான் வேறுபட்டது.

இப்படி மனசும் வாக்கும் தேடி ஓடிய திருவடி, அவை தேடியும் காண மாட்டாத திருவடி, தம்மை நாடி வந்ததே என்று பிரும்மாவுக்கு ஒரே சந்தோஷம். சத்யலோகத்தில், அவர் பக்கத்தில் பகவானின் திருவடி தெரிய, பிரும்மா அதைத் தம் கமண்டல தீர்த்தத்தால் அலம்புகிறார். அந்தத் திருவடி தீர்த்தம், பகவானின் பாதம் துளைத்துக் கிழித்த ஆவரண தீர்த்தம், பலிசக்ரவர்த்தி பகவானின் கையிலே விடுகிற தீர்த்தம் என இந்த மூன்றும் ஏக தாரையாக – ஒரே நேர்க்கோடாக விழுந்ததாம்.

அவ்வாறு விழுந்ததென்றால், பகவான் எத்தனை வேகத்தில் உலகளந்தான் என்பதை நாம் யோசனை செய்து பார்க்க வேண்டும்! கற்பனைக்கெட்டாத வேகம் அது.

உலகளந்த சேவடியை உயர்த்திய நிலையில் பகவானை சீர்காழியிலே பார்க்கலாம். அந்தக் காட்சியை ஞானசம்பந்தப் பெருமானின் முன்னிலையில் பாடியிருக்கிறார் திருமங்கையாழ்வார் :

சின்னக்குறளுருவாய் வந்தான். இந்த இரு நிலத்திலே மூன்றடி கேட்டான். இரண்டாவது அடியால் அளந்து முடித்துவிட்டு, மூன்றாவது அடியை 'எங்கே வைக்க?' என்றான்!

ஆழ்வார் இதைப் பாடிய உடனே ஞான சம்பந்தர் தம் கையிலிருந்த வேலை அவரிடம் கொடுத்து விட்டாராம்.

ஒரு வித்வானுக்குத்தானே இன்னொரு வித்வானின் சிரமம் தெரியும்!

இந்தச் சீர்காழி பெருமான் ஒரு காலை உயர்த்தியிருப்பதுடன் ஒரு விரலையும் உயர்த்தி, 'மூன்றாவது அடியை எந்த இடத்தில் வைக்க...?' என்று கேட்கிறான்! அந்த மூன்றாவது அடிக்குத்தான் மஹாபலி தன் தலையைக் காட்டி விட்டானே... பிறகு ஏன் விரல் இன்னும் உயர்ந்த நிலையிலேயே இருக்க வேண்டும்?

நாமும் பலிச்சக்ரவர்த்தியைப் போல அவனுக்குத் தலைதாழ்த்த வேண்டும் என்பதை ஞாபகப்படுத்தத்தான்!

ஆளவந்தார் அப்படித்தான் பகவானிடம் போய் வேண்டிக் கொண்டார் :

"ஹே பிரபு! நாராயணா! திரிவிக்கிரமா! மறுபடி உன் திருவடியை என் சிரஸில் வையேன்..."

'மறுபடி' என்ற சொல் கவனிக்கத்தக்கது.

'முதலில் நீ திரிவிக்கிரமனாய் இந்த உலகை அளந்த போது நான் என்ன வஸ்துவாக இருந்தேனோ, தெரியாது... அப்போது என்னையும் சேர்த்துத்தானே அளந்திருப்பாய்... எனவே இப்போது இரண்டாவது முறையாக...' என்று ஆளவந்தார் உட்பொருள் வைத்து வேண்டுகிறார்.

ஆசையினாலே, பகவான் எல்லா இடத்தையும் சமமாக அளந்து எடுத்துக் கொண்ட அவதாரம் வாமன அவதாரம். விச்வமாகிற பரமாத்மா, தன்னையே தான் கேட்டுப் பெற்றுக் கொண்டான்! கேட்டால் பலிச்சக்ரவர்த்தி கொடுக்கிறானா இல்லையா? என்று பரீட்சித்துப் பார்த்தான். அதே போல்தான் நமது ஆத்மாவும் அவனுடையது. அதை நாம் அவனிடம் கொடுக்கிறோமோ என்றுதான் அவன் சோதித்துக் கொண்டிருக்கிறான். நமது ஆத்மா அவன் சொத்து... அதைப் பெற வேண்டுமென்கிற முயற்சியிலேயே அவன் இருப்பான். – அதைத்தான் இந்த விச்வம் என்கிற சப்தத்தினால் உணர்த்தப்படும் வாமன அவதாரமும் காட்டிக் கொடுக்கிறது.

ஒருவர் கையிலே ஒரு சவரன் மோதிரம் போட்டுக் கொண்டிருக்கிறார். மோதிரம் காணாமல் போய் விடுகிறது. தொலைத்தவருக்கு ரொம்ப விசாரம். ஆனால், விரலைப் பிரிந்தோமே என்று மோதிரம் விசனப்படுகிறதா என்ன...!


அந்த மோதிரத்தின் நிலைமைதான் நம்முடையது! பகவான் நமக்காக விசனப்படுகிறார். எப்போது நாம் நற்கதி அடைவோம் என்பது அவருக்குக் கவலை. நாமோ, கீழே விழுந்த மோதிரம் மாதிரி எதையும் லட்சியம் பண்ணாமல் உட்கார்ந்திருக்கிறோம். ஆனால் நம்மை விட்டு விடுவானா பரமாத்மா...? நம்மைக் கரை சேர்ப்பதே காரியமாய் இருப்பான்.


(தொடரும்)

எறும்பார் கடிக்கிறார்!

சசிகலாவும் அவர் குடும்பத்தாரும் பல சொந்தத் தொழில்கள் மூலமாகச் சம்பாதித்த சொத்து விவரத்தை, வருமான வரித் துறைக்குக் கணக்குக் காண்பிக்கத்தான் போகிறார்கள்.

– ஜெயலலிதா





கல்கி – அனுபவ் குருப் இணைந்து நடத்திய கவிதைப் போட்டியில்
மூன்றாம் பரிசு ரூ. 3000 பெறும் கவிதை.

புவி... குப்பைத் தொட்டியா...?

பொதிகையில் பிறந்தவள்
வருகிற வழியிலே
பூவுடல் நஞ்சுபட்டாள்

புதுப்புது ஆலைகள்
ஆலயம்! ஆயினும்
பூமியோ மாசுபட்டாள்

ஜதிபொங்கும் நதியிலே
சதங்கையாய் நுரைகளும்
சங்கீதம் பாடிப்போகும்
சங்கீத நதியிலே
யாரிட்ட சாபமோ?
சவங்களாய் மிதந்து போகும்

விதியென்ற பேரிலே
விளையாடும் மானுடன்
ஒளிராத தீபமானான்

வரந்தந்த பூமிக்கு
வளமான தேவிக்கு
மாபெரும் சாபமானான்

மண்புழு தான்வந்த
மண்ணுக்கு நன்றியாய்
மண்ணில்ஏர் ஓட்டிவாழும்

மரங்களும் இடந்தந்த
மண்ணுக்கு நன்றியாய்
மலர் இலை நிழலுமாகும்

விண்வரும் மேகமும்
வீதியில் மழைதந்து
மண்ணுக்கு நன்றிகூறும்

வீதிநாய் ஒருவேளைச்
சோற்றுக்காய் அல்லவோ
வாழ்வெலாம் குரைத்துவாழும்?

மண்வந்த மானுடன்
மட்டுமே காலனோ...?
மண்ணையே
கொலைசெய்கிறான்
மரம்வெட்டி விற்பவன்
மானுடம் வீழ்ந்திட
மாபெரும் வலைசெய்கிறான்
ஓவியன் தான்செய்த
ஓவியப் பெண்ணினை
ஒருநாளும் கெடுத்ததுண்டா?

உயிர்களைக் காக்கிற
மருத்துவன் என்றேனும்
மரணநோய்
கொடுத்ததுண்டா?

பூவிதழ் பிய்ப்பதாய்
பூவைமேல் என்றேனும்
பொய்ப்புகார் வந்ததுண்டா?

பூங்கா நடுவிலே
எலும்புப்பூ பூத்ததாய்
புதுச்செய்தி கேட்டதுண்டா?

பாவி அட மானுடா
பரிவட்ட பூமியின்
பந்துக்குள் பொத்தலிட்டாய்

பழிகார மானுடா
புவிகுப்பைத் தொட்டியா?
பாழ் அமிலம்
கொட்டிவைத்தாய்!

ஆக்சிஜன் காற்றுக்குள்
அணுவுக்குள் நஞ்செலாம்
ஆதியில் நுழைந்ததில்லை

ஆகாய மீதிலே
அண்டபெரு வெளியிலே
அதற்குமுன் களங்கமில்லை



போக்கற்ற மானுடா
பொழுதற்ற வேளையில்
பொய்ச்சாவு கொண்டுவந்தாய்

போர்வை ஒ சோனிலே
பொத்தலை இட்டதால்
பூமிக்கு நஞ்சு தந்தாய்

காக்கின்ற பூமியைக்
கண்மணி போலநீ
காப்பதும் எந்தநாளோ?

கரையிலே மீனென
தரைமகள் தவித்திட
காண்பதுன் கண்கள்தானோ?

- ந. வே. அருள்

அக்பர் முதல் அகாதா கிறிஸ்டி வரை!

தாமஸ் ஆல்வா எடிசன் எத்தனையோ அற்புத விஷயங்களைக் கண்டுபிடித்தார். ஆனால் மனிதருக்கு நாலுவரி ஆங்கிலத்தில் தப்பில்லாமல் எழுத வராது. கோர்வை இருக்காது. எழுத்தையோ, எண்களையோ மனப்பாடம் செய்ய முடியாது. எதிர்ப்பக்கம் பாருங்கள். எடிசன் தம் பத்தொன்பதாவது வயதில் தன் தாயாருக்கு எழுதிய கடிதத்தில் சில வரிகள். ஏதாவது புரிகிறதா? விஞ்ஞானி எடிசன் எழுதியது என்றால் யாராவது நம்புவார்களா?

லியார்னாடோ டாவின்ஸி. எழுத்துக்கள் தலைகீழாகத்தான் அவர் மனதில் பதிந்திருக்கும். எழுதினாலும் அப்படித்தான் எழுதுவார். 'மிர்ரர் இமேஜ்' என்று இதைக் குறிப்பிடுவார்கள். ஆசிரியர் சரியாகத்தான் சொல்லிக் கொடுப்பார். ஆனால் அவர் மனதில் வாங்கிக் கொள்வது தலைகீழாகத்தான். படிப்பில்தான் இப்படியே தவிர தூரிகையில் மன்னராகத் திகழ்ந்தார்!

இவர்கள் எல்லாம் டிஸ்லெக்ஸியா என்னும் குறைபாடு உள்ளவர்கள்.

'டிஸ்லெக்ஸியா' என்ன அது?

நாம் அதிகம் கேள்விப் படாத வார்த்தை. எனினும் நம் நாட்டில் பள்ளி செல்லும் மாணவ மாணவியரில் பத்து சதவீதம் பேருக்கு இந்த வார்த்தை பொருந்தும்.

'மெட்ராஸ் டிஸ்லெக்ஸியா அஸோஸியேஷன்' என்ற அமைப்பின் ஆசிரியர் பயிற்சி மற்றும் ஒர்க்ஷாப் பிரிவின் தலைவி லட்சுமி ராதாகிருஷ்ணன் விளக்குகிறார்:

“கற்கும் திறனில் உள்ள குறைபாடுகளுக்குப் பெயர்தான் டிஸ்லெக்ஸியா. இது குழந்தைகளுக்குப் பாரம்பரிய அம்சமாகத் தொடரலாம். அல்லது கருவுற்றிருக்கையில் தாய்மார்களின் ஹைப்பர் டென்ஷன், அதீத மருந்துகளை உட்கொள்ளல் போன்ற காரணங்களாலும் தோன்றலாம்.

ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளில் யாராவது சின்னச் சின்ன வாக்கியங்களைப் பேச முடியாமல் சிரமப்பட்டால், உச்சரிப்பு சரியாக வராமல் இருந்தால், பலமுறை சொல்லிக் கொடுத்தும் நிஜார் போடும்போது இரண்டு கால்களையும் ஒரே பக்கத்தில் நுழைத்தால் (இடது வலது தடுமாற்றம்) அந்தக் குழந்தைக்கு டிஸ்லெக்ஸியா இருக்கக்கூடும். நான் சொல்லியிருப்பவை ஒரு சில அடையாளங்கள் மட்டுமே.

அதேபோல ஐந்து வயதுக்கு மேற்பட்டவர்களில் யாரேனும் கரும்பலகையில் ஆசிரியர் எழுதுவதை அப்படியே பார்த்து எழுதும்போது தப்பு பண்ணினால், கேட்கும்போது எல்லாக் கேள்விகளுக்கும் சரியாகப் பதில் சொல்லி, பரீட்சையில் கோட்டை விட்டால், படிக்கும் போது நடுவில் ஒரு வரி விட்டுவிட்டுப் படித்தால், 'Saw' என்று எழுதியிருப்பதை 'was' என்று படித்தால், 91 அல்லது 14 என்ற எண்ணை 19 அல்லது 41 என்று மாற்றி எழுதினால், ஸ்பெல்லிங்கில் குழம்பிப் போனால் டிஸ்லெக்ஸியாவாக இருக்கலாம்.

• சின்னம்


ஆனால் இது ஏதோ கொடிய வியாதி போன்று பயப்பட வேண்டிய ஒன்றல்ல. இத்தகைய சிறுவர் சிறுமியருக்கு தேவை சிறப்புக் கல்வி. அதைத்தான் நாங்கள் செய்கிறோம். தனியார் அமைப்புகள் நாடெங்கும் ஆங்காங்கே இத்தகைய சிறப்புப் பயிற்சியை அளித்துக் கொண்டிருந்தாலும் இவற்றை ஒருங்கிணைத்து ஓர் அமைப்பாக உருவாக்கியது முதலில் இங்கே சென்னையில்தான்.

அமெரிக்காவில் மேரிலாண்ட்டில் பயின்று வந்த நிர்மலா பண்டிட் என்ற நிபுணர் என்னையும் உள்ளிட்ட எட்டு பேருக்கு - டிஸ்லெக்ஸியா குறைபாடுள்ளவர்களுக்கு எப்படி போதிப்பது என்று பயிற்சியளித்திருக்கிறார்.

• லட்சுமி ராதாகிருஷ்ணன்



நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புவது இத்தகைய குழந்தைகளின் மீது பெற்றோர் எரிச்சல்படக் கூடாது. அவர்களுக்கு சிறப்புப் பயிற்சி தேவைப் படுகிறது என்ற உண



• தாமஸ் ஆல்வா எடிசன்

மையை எவ்வளவு சீக்கிரம் உணர்கிறார்களோ அவ்வளவுக்கு நல்லது.

டிஸ்லெக்ஸியா குழந்தைகள் படிப்பில் தோல்வியடையலாம். மற்ற திறமைகளில் சாதனை படைக்கக் கூடியவர்களாக இருக்கவும் வாய்ப்புள்ளது.

சில வரலாற்று நாயகர்களின் பட்டியல் இதற்கு சான்று.

உட்ரோ வில்சன் தெரியுமில்லையா? படிப்பே வராது அவருக்கு. ரொம்ப மக்காக இருந்தவர்! பாடங்களைக் கற்றுக் கொள்ள மிகவும் சிரமப்படுவார்.

அகதா கிறிஸ்டிக்கு ஏராளமாய் ஸ்பெல்லிங் தகராறு வரும். வின்ஸ்டன் சர்ச்சில் எவ்வளவு பெரிய பதவியில் இருந்தவர்! அவருக்கு ஸ்பெல்லிங் சரியாக வராது. இலக்கணம் தடுமாறும்.

சிங்கப்பூர் முன்னாள் பிரதமர் லீக்வான் யூ, 'நான் ஒரு டிஸ்லெக்ஸிக்' என்று வெளிப்படையாகவே தெரிவித்திருக்கிறார்.

இவ்வளவு ஏன்? நமது அக்பர்கூட இப்படித்தான் என்று ஒரு சந்தேகமும் உண்டு! எழுதிப் படிக்கத் தெரியாதவர். மற்றவர்கள் படித்துக் காட்டுவார்கள். ஆனால் அப்படியிருந்தும் அவரால் 'தீன் இலாஹி' என்ற புதிய மதத்தை ஸ்தாபிக்க முடிந்தது.

இப்படியெல்லாம் சொல்வதால் இந்த டிஸ்லெக்ஸியா குறைபாடு இருப்பவர்கள் எல்லாம் சாதனையாளர்களாகி விடுவார்கள் என்று எதிர்பார்த்தால் அது மாபெரும் தவறு.

இந்தக் குறைபாடு இருப்பவர்கள் மற்ற துறைகளில் வெற்றியடையத் தடையிருக்காது என்பதை வலியுறுத்தவே நான் இந்த சாதனையாளர்களை உதாரணமாகச் சொன்னேன். எங்கள் 'மெட்ராஸ் டிஸ்லெக்ஸியா அஸோஸியேஷன்' அமைப்பின் சின்னத்தை வடிவமைத்து

• எடிசனின் கடிதம்: ஏதாவது புரிகிறதா?

Dear mother - started store several weeks I have growed considerably I dont look much like a Boy now. How all the fold did you receive a Box of Books Memphis that the promised to send them languages.

Yours son,
Al

வரைந்து கொடுத்ததும் ஒரு டிஸ்லெக்ஸிக்தான்.

பள்ளிகள் இத்தகையவர்களை அடையாளம் கண்டு சிறப்புப் பயிற்சி தர வேண்டும். பள்ளியில் முடியாமல் போனால் எங்கள் அமைப்புக்கு அனுப்ப வேண்டும்.

நாங்கள் உதவக் காத்திருக்கிறோம்."

— ராணி மைந்தன்

4

பிந்துவின் மேல் காலனிப் பெண்கள் வெறுப்பை உமிழ்ந்தார்கள். ஏனாம்? அவள் ஒரு மோகினிப் பிசாசு. ஆடவர்களைக் கவர்ந்து, தன் வலைக்குள் சிக்க வைப்பவள். அவள் ஒரு தூண்டில் வைத்திருக்கிறாள். அதன் முனையில், கொக்கியில், புழுவுக்குப் பதிலாகப் புன்னகையைக் கோத்து வைத்திருக்கிறாள். ஆண்கள், அதில் சிக்கிக் கொள்கிறார்கள். குடித்தனக்காரர்கள் வாழ்கிற காலனியில் அவளைப் போல எதற்கும் துணிந்த கட்டைகள் வாழலாமோ? கூடாது. அது, கௌரவ பங்கம். மான ஈனம். லட்சுமி, ஜானு மாமியிடம் சொல்லிக் கொண்டிருந்தாள்.



அவர்கள் உட்கார்ந்த இடம், அநுமார் கோவில், குட்டிப் பிராஹாரம். காலனிக்குள்ளே இருந்த கோவில் அது. காலனி வாசிகளின் ஆன்மீகத் தேவைகளை அங்கிருந்த வரசித்தி விநாயகரும், ஆஞ்சநேயரும் கவனித்துக் கொண்டிருந்தார்கள். ஏ.ஜி. ஆபீஸ் ரங்கநாதனின் மனைவியும், காலனியின் பெண்கள் காரியதரிசியுமான மிஸஸ் ரங்கநாயகி, அநுமாருக்கு வடைமாலை சாத்துவதாகப் பிரார்த்தனை பண்ணிக் கொண்டிருந்தாள். அதற்கு அவளுக்கு இஷ்டமானவர்களை அழைத்திருந்தாள். ஜானு மாமியும், லட்சுமியும் அதில் அடக்கம்.

பிராஹாரத்திலிருந்து ஆஞ்சநேயர் தெரிந்தார். மருந்து மலையை ஏந்திக் கொண்டு பறந்தபடி வருகிற புடைப்புச் சிற்பம். சுற்றி வடைமாலை தொங்கிக் கொண்டிருந்தது.

"என்னடி சொன்னே, லட்சுமி?"

"பிந்துன்னு ஒரு அனாசாரம், காலனி ஆம்பிளைகளைப் பிடிச்சு ஆட்டுதே... இதுக்கு ஒரு வழி பண்ணப்படாதா, மாமி? நாங்களெல்லாம், வயிற்றுல நெருப்பைக் கட்டிக்கிட்டு இருக்கோம். தெரியாத மாதிரி பேசறீங்களே?"

"தெரியும். எனக்கு எல்லாம் தெரியும். அந்தக் குட்டி, தொங்கத் தொங்க தாலி கட்டிண்டு இஞ்ச வந்தாளே, அந்த நிமிஷத்திலேந்து எனக்கு அவளைத் தெரியும். உன் ஆம்படையானை அவ கையைப் பிடிச்சு இழுத்தாளா, என்ன?"

லட்சுமிக்குக் கோபம். அவள் கண்களில் கண்ணீர் ததும்பியது.

பிரபஞ்சன்

"கையைப் பிடிச்சு வேறே இழுக்கணுமா? அவ, இந்தக் குலுக்கு, தளுக்குப் பண்றாளே, இது போதாதா? எங்கே எங்கேன்னு இருக்கிற ஆம்பிளைகளுக்கு, இடி இடிக்கணுமா மாமி. வெறும் வளையல் சத்தம் போதாதா?"

"நான் சொல்றேன்னு தப்பா நினைச்சுக்காதே. நாராயணனை என்னத்துக்கு நீ அலைய விடறே? எங்க அம்மா சொல்லுவா. புருஷனை முந்தானையிலே முடிச்சு வச்சுக்கிடணும்னு.

என்னத்துக்கு அவிழ்த்து விடறே? நமக்கெல்லாம், ஒன்று ரெண்டு பிறந்த உடனே, நமக்கு நம்மேலேயே அசிரத்தை வந்துடறது. உடம்பைக் கவனிக்கிறதில்லை. அது தொள தொளத்துப் போயிடறது. அலங்காரம்தான் வேணாம்னா, அசங்கியம் பண்ணிக்கணுமோடி? சாயங்காலம் ஆனா, குளிச்சு, சுத்தமா, மணமா, லட்சணமா இருந்தா என்ன? தலைப் பரட்டையா, எண்ணெய் வழிஞ்சுண்டு, சாம்பார் வாசனை புடைவையோட முன்னாலே போய் நின்னா, நல்லாவா இருக்கும். புருஷனோடே தாம்பத்யம் பண்ற சின்னப் பொண்களுக்கு இதெல்லாம் ஏன் தெரி



பூக்கள் நாளையும் மலரும்

யறது இல்லை? அசட்டு ஆமணக்கா இருந்தா எப்படி? ரெண்டாயிரம் வருஷமா, புருஷனை மாதவி வீட்டுக்கு விரட்டுற கண்ணகிகளா இருந்தா எப்படி? உன்னை நீயே திருத்திக்கணும், லட்சுமி."

சற்று நேரம் அமைதியாக இருந்தாள் லட்சுமி. அப்புறம் சொன்னாள்.

"என்னதான் வாய்க்கு ருசியாக சமைச்சுப் போட்டாலும், ஆம்பிளைக்கு, ஹோட்டல் பண்டங்கள் மேலே ருசி, அலாதிதான் மாமி."

"அப்படி உன்னைத் திருப்தி பண்ணிக்காதே. எதிலேயும் தோத்துடக் கூடாது. நான் தோத்துட்டேன்னு நினைக்கிறது, நான் செத்துட்டேன்னு நினைக்கிறதுக்குச் சமம். பிந்து, யார் வம்புக்கும் போறது இல்லை. ஏதோ வேலைன்னு போறா. சம்பாதிக்கிறா. சாப்பிடறா. நமக்கென்ன போச்சு? அவ தலையை வெட்டி, 'பாப்' பண்ணிண்டா. ஸ்லீவ்லெஸ் ஜாக்கெட் போடறா. சூடிதார் போட்டுக்கிறா. அவ சுதந்தரத்தை அவ அனுபவிக்கிறா. நமக்கு முடியல்லை. வெறுப்பும் கோபமும் வர்றது. அதானேடி பிரச்னை."

கர்ப்பூர ஹாரத்தி ஆனது. குருக்கள் நீட்டிய தட்டைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டாள், லட்சுமி. பிரசாதம் பெற்று, அங்கேயே அமர்ந்து கொஞ்சம் போலத் தின்றார்கள்.

"புறப்படலாமா, மாமி?"

'ஈஸ்வரா' என்றபடி எழுந்தாள், மாமி. நடந்தார்கள். விளையாட்டுத் திடல் இருட்டில் ஆழ்ந்து கிடந்தது.

"பிந்து, ரொம்பவும் கஷ்டப்பட்டவடி. அவ, இப்படி இருக்கிறதுக்கு அவ காரணம் இல்லை. சேட்டுக் கடை காசு மாதிரிதான் இருந்தவ அவ. அவளைச் சூடாக்கி, தட்டி தனக்கு இஷ்டமான 'சைஸில்' ஆக்கிப் பார்த்தான், அவ புருஷன். காசா இருந்தா பிரச்னை இல்லை. மனுஷியாச்சேடி. மனசுன்னு ஒண்ணு இருக்கே. எனக்குத் தெரியும். ஏதோ சண்டியா, கட்டுக்கு அடங்காதவளா, இஷ்டப்பட்டவன் கூடப் போறவளா, வெளிப் பார்வைக்குத் தெரியுது. ஆனா, அது அவளோட

நிஜமான படம் இல்லை."

மாமி, தன் வீடு வந்ததும் விடைபெற்றுக் கொண்டாள். லட்சுமிக்கு மனக்குறை. தன் பிரச்னையை மாமி சாதாரணமாக எடுத்துக் கொண்டாளே, என்று. இரவு உணவுக்கு முட்டை வாங்கிக் கொண்டு திரும்பிய மோகனா, லட்சுமியை எதிர்பட்டாள்.

"எங்கே கோயிலில் இருந்தா?" என்றாள் மோகனா. பதிலை எதிர்பார்க்காதவளாகத் தொடர்ந்து சொன்னாள்.

"எனக்கும் வரணும்னுதான். எங்கே ஒழியுது? இருட்டியதோ இல்லையோ, இந்த மனுஷன், பாட்டிலைத் திறந்துட்டார். அப்பளம் பொறிச்சுக் கொடுத்துட்டு, முட்டை வாங்கிட்டு வர்றேன்..."

மோட்டார் சைக்கிளின் வெளிச்சம், லட்சுமியின் மேல் பட்டுத் தெறித்து, அவர்களைக் கடந்து சென்றது. யாரோ ஒருவன் ஓட்ட, பின்னால் அவன் தோளைப் பற்றிக் கொண்டு பிந்து அமர்ந்திருந்தாள். தலை கலைந்து, மை கூட, கரையை மீறிய குளத்து நீர் மாதிரி, கண்ணுக்கும் கீழே ததும்பி இருந்த தாகப் பட்டது லட்சுமிக்கு.

"நடு வீட்டுல பாம்பைக் குடியேத்துன மாதிரி, இந்த ஓடுகாலி வேறே, நமக்குப் பயம் காட்ட ஏற்பட்டிருக்கா..." என்றாள் மோகனா, தன் குடிகாரக் கணவன் பற்றிய பயத்தில்.

"இவ ரொம்ப ஒழுங்கானவளாம். நாம்தான் மோசமாம்."

"யார் சொன்னா?"

"ஜானு மாமி"

"ஓட்டலுக்குள்ளேயே உடற்பயிற்சி நிலையமும் வைச்சிருக்காங்களே!"

"அட நீ ஒண்ணு, காசில்லாமல் மாவட்டற இடத்தைத்தான் அப்படி எழுதிவச்சிருக்காங்க!"

—கருப்பம்புலம் சித்திரவேலு



"அந்தக் கிழத்தோட கதை உனக்குத் தெரியாது. நான் சொல்றேன்."

லட்சுமிக்குச் சுவாரஸ்யம் தட்டியது.

போலீஸ் அதிகாரிக்கு முன், தடுமாறிக் கொண்டு நின்ற ஆல்பர்ட் பக்கத்தில் வந்து நின்றாள், ஜனனி.

"சார். நான் சொல்றேன். என் பேர் ஜனனி. இவர் ஆல்பர்ட். நான் ஏகராஜ் காலேஜ்ல, படிக்கிறேன். இவர் ஒரு டெக்னீஷியன். நாங்க கல்யாணம் பண்ணிக்கப் போறோம்..."

அந்த நடுவயது மனிதர், ஜனனியை நோக்கினார். இறுக்கமான முகம். ஒட்ட வெட்டிய கிராப்புத் தலை. அந்த இலாகாவுக்கே உரிய பெரிய மீசையை ஏன் அவர் விரும்பவில்லை? அவர் மெல்லிசாகக் கேட்டார்.

"கல்யாணம் பண்ணிக்கப் போறவங்களுக்கு, மகாபலிபுரம் ஓட்டல் அறையில என்ன வேலை?"

ஆல்பர்ட் ஏதோ குற்றம் செய்தவனைப் போல தலைகவிழ்ந்து நின்று இருந்தான். ஜனனிதான் பதில் சொல்ல வேண்டி இருந்தது.

"சார். நீங்க நினைக்கிற மாதிரி இல்லை. கொஞ்சம், அந்தரங்கமா பேசணும்னு சொன்னார். வந்தோம்."

"படிச்ச பெண்தானேம்மா, நீ? சும்மா பேசறதுக்காகவா அறை 'புக்' பண்ணுவாங்க? உங்க இரண்டு பேரையும் அறைக்குள்ளே பார்த்ததே போதும். உங்களைக் கோர்ட்டுல நிறுத்த..."

ஜனனிக்குத் தொண்டை அடைத்தது. இருந்தாலும், தைரியத்தை விடாதவளாகத் தொடர்ந்தாள்.

"உங்க பேச்சு என்னை அவமானப்படுத்துது. சார்... நீங்க நினைக்கிற காரியத்தை இங்க வந்து செய்ய வேண்டிய அவசியம் இல்லையே... தனியா, ஒரு ஆணும் பெண்ணும் காணப்பட்டாலே, அது அந்த மாதிரி வேலைக்குத்தானா சார்... நாங்க சேர்ந்து வாழ முடிவெடுத்திருக்கோம். நிறைய 'டிஸ்கஸ்' பண்ண வேண்டி இருக்கு. தொந்தரவு இல்லாத இடமா இருக்கணும்னு சொன்னேன், இவர், இங்க கூட்டி வந்தார்."

மானேஜராக இருந்த இளைஞன் தலையிட்டான்.

"சார். ஆல்பர்ட் என் நண்பர். பேசணும்னு சொன்னார். காலியா இருந்த அறையைக் கொடுத்தேன். இந்தப் பெண்ணும் அந்த மாதிரி பெண் இல்லை சார்"

"அது எனக்குத் தெரியும்பா. எனக்கும் இந்த மாதிரி மக ஒருத்தி உண்டு. அவளும் காலேஜ்ல படிக்கிறவதான். பார்த்தா, நல்ல குடும்பத்துப் பெண்ணா தெரியுது. இது முதல் முறைன்னு

தெரியுது. போலீஸ்காரன்கிட்டே மாட்டினா, உன் வாழ்க்கையே அஸ்தமனம் ஆகிடும்மா. விளையாட்டு வேணாம். உன் தாய் தந்தையோட கனவுகளை அழிச்சிடாதே..."

"சார்... எங்க சித்தப்பா கூட போலீஸ்ல தான் இருக்கார்."

"யார்?"

''அண்ணா நகர் ஏ.சி. மூர்த்தின்னு இருக்காரே. அவர் என் சித்தப்பா சார்... சமீபத்தில் கூட, ஒரு ரௌடியைச் சுட்டுக் கொன்னாரே... பேப்பர்ல கூட வந்துதே... அவர்தான் சார். எங்க அப்பாவோட கூடப் பிறந்த தம்பி சார் அவர்"

அந்த அதிகாரி சிரித்தார்.

"புறப்படுங்க. இனி, இந்த மாதிரி முட்டாள்தனம் பண்ணாதே. இப்போ தெரியாது, இந்த மாதிரி சங்கதிகளோட விபரீதம். உனக்கும் குழந்தை பிறந்து, நீ தாயானா, உனக்கு நான் சொல்றது விளங்கும். போ... உம்"

மறு வார்த்தை பேசாமல், ஜனனியும் ஆல்பர்ட்டும் புறப்பட்டார்கள்.

"இதுங்க வயசு அப்படி! அவன் அறை கேட்டா உடனே கொடுத்துடறதா? இந்தக் குற்றத்துக்கு, முதல் காரணமே நீதான். ஒழுங்கா இரு... இன்னொரு வாட்டி மாட்டினா, தொலைச்சுடுவேன். ஜாக்கிரதை."

"சார்"

"என்ன தைரியம் இருந்தா, மூர்த்தி, அவ சித்தப்பான்னு சொல்லுவா... எனக்கே தெரியாம, எனக்கு ஒரு அண்ணன் மக இருக்கா, பாரு... அப்பப்பா... இந்தக் காலத்துப் பொண்ணுங்களுக்குத்தான் என்ன தைரியம்?"

ஏ.சி. மூர்த்தி, ஜீப்பை நோக்கி நடந்தார்.

ஜன்னல் வழியாக உலகத்தைப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தாள், அனு. முனியம்மா, தரையை மெழுகிக் கொண்டிருந்தாள். 'சரட் சரட்' என்று அவள் தரையை மெழுகிய சப்தம் அன்றி, டி.வி.யில் ஒரு குழந்தை பாடிக் கொண்டிருந்த சப்தமும் ஒரு கலவையாக அவள் காதுகளுக்குச் சென்றடைந்தன. டீ.வி. பார்க்கிற மனோநிலையில் அவள் இல்லை.

'எப்போ வருவாரோ' என்கிற ஜோன்புரி பாடலை, இயன்றவரையில் துவைத்துப் பிழிந்து கொடியில் உலர்த்திக் கொண்டிருந்தாள் குழந்தை. அனுவுக்கு அந்தப் பாட்டு, பாடமாகி இருந்தது. உருக்கத்திலும், தாபத்திலும் நனைந்து சொத சொதத்த 'பாவத்'துடன் பாட வேண்டிய பாட்டு அது. பட்டாளத்துக்குப் போன மகனை வயதான தாய் எதிர்பார்ப்பது போன்ற பாவத்துடன், கண்ணீர் அரும்பப் பாட வேணும் என்று வாத்தியார் அவளுக்குச் சொல்லியது தான். தில்லைநாதரை எதிர்கொண்டு, சேரத்



''என்னங்க...! சாம்பார் சாதம் சாப்பிட்டு முடிச்சிட்டீங்களா?''

''ஏன் பதற்றமா கேக்கறே?''

''துவரம்பருப்பு டப்பாவுல கழட்டி வச்சிருந்த என்னோட வைரத்தோடு காணுங்க!''

– சீர்காழி வி. ரேவதி

துடிக்கிற பெண்ணின் விரக தாபம், கசிய வேணும். விரகத் தீ பற்றிச் சுவாலையாக எரிந்து, பாடுகிறவளையே எரிக்க வேணாமோ? அந்த நெருப்பு, கேட்பவரின் காதுகளைச் சுட வேணாமோ?

''ப்ச்... முனியம்மா, அந்த டீ.வி.யை நிறுத்தேன்...''

முனியம்மா நிறுத்தினாள். ஆனால் தொடர்ந்தாள்.

"எதிர் வீட்டுல புச்சா கலர் டீ.வி. வந்திருக்குதே, பார்த்தீங்களாம்மா?"

"அப்படியா?" என்றாள், அசுவாரஸ்யமாக.

"இல்லாடிம்மா, அந்த மனுசன். சம்பாதிக்க ரெண்டு கை பத்தலைங்கறாரு. காண்டிராக்ட்டுக்காரங்க, வீட்டுக்கு வந்து பணம், நகைன்னு படி அளக்கறாங்க. நம் வீட்டு அய்யாவும் இருக்காரே. என்னத்துக்கு ஆவும்?"

அனு, வெளியில் பறந்து கொண்டிருந்த தும்பிகளையே பார்த்துக் கொண்டிருந்தாள். பள்ளிக்கூடம் விட்டு, வீட்டுக்கு விரையும் குழந்தைகளைப் போல, திடுமென எத்தனை தும்பிகள் அந்தரத்தில்? வெங்காயச் சருகு மாதிரி, இறக்கைகள். தேய்ந்த புழுக்கைப் பென்சில் மாதிரி, சின்ன உடம்பு. இந்த உடம்புகளுக்குள்தான் எத்தனை உற்சாகம்? எத்தனைக் களிப்பு? மேலும் கீழும், பக்கங்கள் எல்லாம் பறந்து, என்ன எழுதுகின்றன இவை? கரும் பலகையில் எழுதுகிற ஆசிரியர் மாதிரி, இந்தத் தும்பிகள்தான் வெள்ளை வெளியில் என்னத்தை எழுதுகின்றனவாம்?

முனியம்மா, அவள் கேள்விகளை நிறுத்தியபாடில்லை.

"ஏம்மா. இந்த ஹைதர் காலத்து டிவி.யைத்

- ஒரு குணத்தை அடைய வேண்டுமென்று நீங்கள் விரும்பினால் ஏற்கெனவே அது உங்களிடம் இருப்பது போல் கற்பனை செய்து கொண்டு நடியுங்கள். விரைவில் அதை உள்ளபடிக்கே அடைந்து விடுவீர்கள்!

— வில்லியம்ஸ் ஜேம்ஸ்

தகவல்: வயலூர் ஆர். பார்த்திபன்

- "ஒருமனிதன் எவ்வளவு உயர்ந்த நிலையில் புகழுடன் இருந்தாலும் காலம் ஒரு தடவை 'பூ' என்று ஊதும் போது தரைமட்டமாகிவிடுவான்."

—காண்டேகர்

தகவல்: ரமா ராமநாதன்

தூக்கிப் போட்டுட்டு, புச்சா, ஒரு கலர் டி.வி. வாங்கினா என்னம்மா?"

"எங்க அப்பா, வாங்கித் தரதாதான் இருந்தாங்க. இவர், வேணாம், கறுப்பு வெள்ளையில தெரியறதுதான் கலரிலேயும் தெரியுது. என்கிட்டே இருக்கிறதே போதும்னுட்டார்."

"நல்லா இருக்கு ஞாயம். கறுப்பும் கலரும் ஒண்ணாமா?"

ஒன்று இல்லைதான். வாழ்க்கை, பல வண்ணங்களால் ஆனது என்று அவனுக்கு மட்டும் ஏன் விளங்கவில்லை? வெள்ளை அப்பம் போல், பிட்டுத் தின்னலாம் எனும்படி மலரும் வெண்தாமரையும், கிளி மூக்கும், கோவைப்பழமும் கலந்து பண்ணியது மாதிரியான செவ்வல்லியும், டிசம்பர் பூக்களும், அரளியும், கத்தரிப் பூவும், ஆவுடையார் பூவும், மஞ்சள் தும்பையும், செம்பருத்தியும், மனோரஞ்சிதமும் என்று எத்தனை பூக்கள்? வாழ்க்கையில் இருக்கிற வர்ணங்களின் விசித்திரத்தைக் காட்டுவதற்கல்லவா மலர்கின்றன. காணக் கண்கள் இரண்டிருந்தும் இவர் ஏன் கண்களை மூடிக் கொள்கிறார்?

மாலை ஏழு மணிக்கு அவன் திரும்பினான். பால்கனியில் அமர்ந்துகொண்டு, எங்கோ தொலை தூரத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டு அமர்ந்திருக்கும் மனைவியைக் கண்டான், சபேசன். அவன் பக்கம் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை, அனு.

"அனு, உடம்பு சரியில்லையா? தலை வலிக்கிறதா?" என்றபடி, சாப்பாட்டுப் பாத்திரத்தைக் கொண்டு போய் சமையல் அறைக்குள் வைத்தான். உடை மாற்றிக் கொண்டு, முகம் கழுவிக் கொண்டு திரும்பினான். அவள் முன் அமர்ந்து, டீபாயின் மேலிருந்த ஒரு புத்தகத்தை எடுத்துப் புரட்டினான். அனுவிடம் இருந்து பதில் இல்லாததைக் கண்டு, "என்ன அனு... என்னாச்சு?" என்றான்.

"அர்த்தநாரி, கலர் டி.வி. வாங்கி இருக்காராமே?"

கேள்வி புரிய, சபேசனுக்குப் பல நிமிடங்கள் ஆயின.

"ஓ... அதுவா? அது ஒரு பெரிய விஷயமா? ஒரு பார்ட்டிக்கு ஒரு சின்ன உதவி பண்ணிக் கொடுத்தார், அர்த்தநாரி. பார்ட்டி, முதலில், என்கிட்டேதான் வந்தது. அதுக்கு வேற ஆளைப் பாருன்னு அனுப்பிட்டேன்."

"ஏன்?"

"சட்டத்துக்கு விரோதமா காரியம் பண்ணச் சொன்னா? நான் முடியாதுன்னு சொல்லிட்டேன்."

"அதனால என்ன லாபம்?"

"நிம்மதி. என் மரியாதையை நான் காப்பாத்திக்கிட்டேனே, அதுதான்."

"அவர் மட்டும் எப்படி அதை செய்தார்?"

"தப்பு செய்யிறவனுக்கும் ஏதோ சமாதானம் இருக்கும். அவன் என்ன சொல்வான்னு எனக்குத் தெரியலை. என்னால அது முடியாது."

"அனு, பேசாமல் இருந்தாள். வளையல்களைக் கழற்றி, கழற்றிப் பிறகு அதை அணிவதுமாக இருந்தாள்.

"உனக்கு கலர் டி.வி. வேணுமா? அடுத்த மாசம் 'லோன்' போட்டு வாங்கிடலாம். உனக்காகத்தான். எனக்கு அது அவசியம் இல்லை."

அனுவுக்கு அழுகை வந்தது. ஏன் அழுகிறோம் என்று அவளுக்கே தெரியுமோ, தெரியாதோ, அழ வேண்டும் போல் இருக்கவே, அழுதாள்.

"எதுக்கு அழறே?"

"எனக்கு இங்க இருக்கப் பிடிக்கலை."

"ஏன்?"

"தெரியலை. என்னமோ, கூண்டுக்குள்ளே, இருக்கிற மாதிரி இருக்கு."

"உங்க வீட்டிலேர்ந்து யாரையாவது வரச் சொல்லி, கூட வச்சுக்கயேன்."

"இல்லை. நாளைக்கே எங்க வீட்டுக்கு நான் போகணும்."

அவன் அவள் கண்களைப் பார்த்தான்

"அனுவுக்கு என்னைப் பிடிக்கலையா?

"ஆமாம்."

அவன் மௌனமாக இருந்துவிட்டுச் சொன்னான்.

"சரி. உன் இஷ்டம்."

(தொடரும்)

HMV யின் பிரபல திரைப்பட / பக்திபாடல் மெட்டுக்கள்

- **குன்னகுடி வைத்தியநாதன்**
  (என்றும் இனிய சினிமா ராகங்கள்)



- **கத்ரி கோபால்நாத்**
  இனிய தெய்வீக இசை மழை



- **காயத்திரியின்**
  ராக அலைகள்



Century - 96

பிரபலமான சினிமா மற்றும் பக்திப் பாடல்களின் ட்யூன்கள் அடங்கிய கேசட்டுகள்.

அனைத்து கேசட் வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

RPG HMV

பஸ் இன்னும் வரவில்லை. சரஸ்வதிக்கு இடுப்பு நொந்தது. பக்கத்தில் நின்றவர்கள் இவளையும் இவள் வயிற்றையும் மாறி மாறிப் பார்த்தார்கள். பூ விற்கும் கிழவி கூட நாள்தோறும் கேட்கிறாள். "நிற மாச வயிறும் வாயுமா எத்தனை நாள் வேலைக்கு வருவே?"

வேறுவழியில்லை என்று அவளுக்குத் தெரியாது. விஸ்வமே வேலைக்குப் போவது நல்லது என்று சமாதானமாகி விட்டான்.

லீவ் போட்டு என்ன செய்ய முடியும் வீட்டில்? பக்பக் என்று நெஞ்சடிக்க, வயிற்று அசைவோடு விஸ்வம் வருவதற்குக் காத்திருக்க வேண்டும். இரண்டு அறை ஒட்டுக்குடித்தனம். கவருக்கு அந்தப் பக்கம் தாள் கிழிப்பது கூட இங்கு கேட்கும். அமைதியாய் சமைத்து, நிச்சலனமாய் பாத்திரம் பூசி, கிசுகிசுப்பாய்க் காதலித்து...

காதலித்தது தப்போ என்று கூட இப்போதெல்லாம் தோன்றுகிறது. இப்போது என் றால் வயிற்றில் சுமை ஏறின பிறகு. ஆதரவாய் கைகொடுக்க யாருமில்லாது போன பிறகு. யாருமில்லையா? விஸ்வம் இல்லையா? தாய்க்குத் தாய், தந்தைக்குத் தந்தையாய், கணவனுக்கு கணவனாய்... ஆனாலும் ஏனோ மனசுக்குள் ஒரு வெறுமை. வயிற்றில் கனம் ஏற ஏற, ஏறி உட்கார்ந்தது.

ப்ரக்னன்டா இருக்குறப்போ என்னு சாப்பிடலாமா?

சாப்பிட வேண்டும் போல் தோன்றியது. யாரிடம் கேட்பது, சாப்பிடலாமா, கூடாதா என்று?

"என்னு, பப்பாளி எதுவும் கூடாதும்மா. பலாப்பழம் சாப்பிட்டுறாதே."

செக்-அப்புக்குப் போன போது டாக்டர் சொன்னார்.

"நார்மலா பிறந்துடுமா டாக்டர்?"

"ம். தொன்னுத்தொன்பது சதவீதம் நார்மல் டெலிவரி தான். சந்தோஷம்தானே?" டாக்டர் சிரித்தார்.

சந்தோஷம்தான். சின்னக் குழந்தைகளின் படம் பார்க்கும்போது மனசு துள்ளுகிறதென்னவோ நிஜம்தான். கடையில் தொங்கும் குட்டி உடுப்புகள், ஸாக்ஸ்... பிறகு விஸ்வத்தின் ஆசைகள்...

"பொண் குழந்தை பிறந்தா நல்லாருக்கும் சரஸ்."

"ம்.ம்"

"ஏன் சுரத்தில்ல... உனக்கு ஆசையில்ல?"

"இல்ல. பயமாருக்கு."

"ஏன்?"

சரஸ்வதி நிமிர்ந்து மோட்டுவளையைப் பார்த்தாள். கண்ணில் நீர் கோத்து நின்றது.

"அழுறியா?"

"இல்லையே."

"என்ன பயம் சரசு?" விஸ்வம் தோளைப் பற்ற, அழுகை வெடித்தது.

"சரசு... ஏய்...?"

வேகமாய் கண்களைத் துடைத்துக் கொண்டாள். சன்னமாய் தொண்டைக்குள் கனம் இறங்கிற்று.

"யாருமில்லை விஸ்வம் நமக்கு."

"ஏன் இல்லை? உன் குழந்தை இல்லையா உனக்கு? நானில்லையா?"

விஸ்வம் கைகளை அழுத்திக் கொண்டான். "நம்பிக்கை வேணும் சரசு."

"மனசுல ஒரு பயம் பட்டபட்னு இருக்கு. இது சுகமா பிறக்குமானு தோணுது. ஆபீஸ்ல நுழையறப்ப லேசா குறுக்கு வலிக்கிறாப்புல இருக்கு. இப்பவே பிறந்துருமோன்னு பயமாருக்கு. மனசு பதைபதைக்க ஆஸ்பத்திரிக்கு ஓட வேண்டியிருக்கு."

விஸ்வம் கையிலிருந்த பாக்கெட்டைத் திறந்தான். சின்ன உடுப்புகள், ஜான்சன் சோப், பவுடர்...

"எல்லாம் வாங்கியாச்சா?"

"ரொம்ப எதிர்பார்க்கிறேன் சரசு. மனசெல்லாம் இதுதான்."

"எனக்கு பயமாருக்கு விஸ்வம்."

விஸ்வம் கைகோத்துக் கொண்டான். சரஸ்வதியை முதலில் சந்தித்த போது தெரிந்த கண்களை நினைத்துக் கொண்டான். பிரசவ காலக் குழப்பங்கள். இதெல்லாம் யாருமில்லாததால் கூடுகிறது. ஆசையாய் நாலுவிதமாய் சமைத்துப் போட ஆள் இல்லாததினால், பிரசவம் இப்படி இருக்கும்.

என்று வக்கணையாய் பேச யாருமில்லாததால். ஆனால் என்ன செய்ய முடியும்? நிஜத்தை எதிர்நோக்கு. அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று பார்.

"உங்கம்மாப்பாவுக்கு எழுதிப் போடட்டா?"

"வேணாம். வேணாம் விஸ்வம். நீயிருக்கியே."

"உனக்குப் போறலையே சரசு."

சரஸ்வதி அவனை இறுக கட்டிக் கொண்டாள். மன செல்லாம் கங்கை ஆறாய் பொங்கிற்று. "போறும் விஸ்வம் போறும்."

பஸ் வந்து ஏறியதும் உட்கார்ந்திருந்த யாரோ இடம் கொடுத்தார்கள். "உட்காரு தாயி."

விண்ணென்று கண்ணுக்குள் தண்ணீர் கட்டிற்று. இப் படித்தான் விஸ்வம் யாருமில்லாது, தாலி கட்டியதும் அழுகை வந்தது. ஆனாலும் என்ன... வீம்பு. அம்மா இப் போது எலி வளையில் குடித்தனம் செய்வதைப் பார்த்தால் தலையிலடித்துக் கொள்வாள். வசதி என்று பெரிசாய் ஏதுமில்லாவிட்டாலும் ஏழைமை இல்லாத குடும்பம். இப்போது அப்படியில்லை. சில சமயம் திணறுகிறது. குழந்தை பிறந்தால் இன்னும் செலவிழுக்கும்.

வீட்டில் விஸ்வம் வந்திருக்கவில்லை. உள்ளே நுழைந்து விளக்கைப் போட்டாள். கதவிடுக்கில் நீலநிற இன் லாண்டு கசங்கி சொருகப்பட்டிருந்தது. அடுப்பை ஏற்றி விட்டு அதை எடுத்தாள். கேஸ் கிடைத் தால் நலம். மண்ணெண்ணெய் புகை குமட்டுகிறது. கடித உறை யைக் கிழித்தாள்.

"அன்புள்ள சரஸ்வதிக்கு, அம்மா எழுதுவது. நீ உண்டா யிருப்பதாக மாப்பிள்ளை எழுதி யிருந்தார். சந்தோஷம். ஆனாலும் தம்பி சங்கரன் படிப்புக்காக அவனை விட்டு விட்டு என் னால் வர முடியாது. குழந்தை பிறந்ததும் எழுது. வருகிறேன்" யாரோ யாருக்கோ எழுதுகிற த்வனியில் கடிதம். யார் வரச் சொன்னார்கள்? விஸ்வம் ஏன் எழுதினான்? என் புலம்பலாலா? மறுபடியும் அழுகை வந்தது.

பால் பொங்கி அடுப்பில் வழிந்து நுரைத்து நின்றது. சரஸ் வதி எழும்பினாள். மத்தூளைப் போட்டதும் வாசல் பக்கம்



தமயந்தி

போனாள். எதிர் வீட்டில் கணேசன் நின்றிருந்தான்.

"தம்பி இங்க வா."

"என்னக்கா?"

"ஒரு உதவி செய்ய முடியுமா?"

அவன் என்னது என்பது போல் பார்த்தான். சரஸ்வதி உள்ளே போய் பர்ஸிலிருந்து ரூபாயை எடுத்தாள்.

"இந்த முக்கு கடைல சூடா பஜ்ஜி வாங்கிட்டு வா."

"எத்தனைக்கா?"

பாழ்வயிறு பேயாய் பசிக்கிறது. காரத்துக்கும் உப்புக்கும் ஆலாய்ப் பறக்கிறது. "பத்து வாங்கிட்டு வா."

டீயில் சீனியைப் போட்டு கலக்கினாள். இடுப்பில் லேசாய் சுருக்கென்றது. டீயை இறுத்து வாசலில் வந்து உட்கார்ந்தாள். விஸ்வம் சைக்கிளில் வருவது தெரிந்தது.

"என்ன சரஸ்... எப்ப வந்தே?"

"இப்பத்தான். டீ குடிக்கறீங்களா?"

எழுந்தாள். மறுபடியும் நடு இடுப்பில் வலித்தது. சூடாயிருக்கும் டீயை ஊற்றி வாசலில் வந்து உட்கார்ந்தாள். விஸ்வத்துக்கு இப்படி பேசினபடி டீ குடிப்பது பிடிக்கும்.

மறுபடியும் உறிஞ்சும் போது வலித்தது.

"வலிக்கிறாப்பல இருக்கு விஸ்வம்."

விஸ்வம் பதறினான். நொடியில் பெட்டியில் சகலமும் அடுக்கினான். சரஸ்வதிக்கு துணிகள், குழந்தைக்கு சட்டை, சோப்...

"ரூவா இருக்கா விஸ்வம்?"

"இருக்கு. பாத்துக்கலாம். கவலைப்படாதே சரஸ்." பக்கத்தில் வந்து முத்தமிட்டான்.

"அம்மாவுக்கு எழுதிப் போட்டியா?"

"லெட்டர் வந்திருக்கா?"


"ம். இப்ப வர முடியாதாம்."

"நல்லாருக்காங்களா?"

"விஸ்வம். ஏன் இப்படி செஞ்சே? ஏன் எழுதினே?"

"உனக்காக சரஸ்... உனக்காக."

இடுப்பில் இழுத்தது. டாக்ஸி கூட்டி வந்தான்.



''நம்ம ராமசாமியைப் போல ஒரு மட்டமான ஆளைப் பார்க்க முடியாது.''

''ஏன்?''

''டைப்பிஸ்ட் கல்யாணத்துக்கு வர முடியலே. என் பேர்ல மொய்ப் பணம் போட்டுடு'ன்னு கொடுத்தான். போட்டுட்டு வந்தா, 'ஏன்டா எனக்கு செருப்பு எடுத்து வரலியா?'ன்னு கோவிச்சுக்கிறான்.''

''அப்புறம் எப்படி சமாதானம் பண்ணினே?''

''எனக்குன்னு மாட்டிக்கிட்டு வந்த புத்தம் புதுச் செருப்பை பெருந்தன்மையா அவனுக்கு தாரை வார்த்துக் கொடுத்துத்தான்!''

– ஆவத்தம்பாடி ராஜகோபால்

ஆஸ்பத்திரிக்குப் போனதுமே லேபர்-வார்டுக்கு கொண்டு போனார்கள். டிரிப் ஏற்றி வலியை அதிகப்படுத்தினார்கள். டாக்டர் கொஞ்ச நேரத்தில் வந்தார்.

"என்ன சரஸ்வதி... தைரியமா இருக்கியா?"

"ம்ம்..." பயத்தில் வார்த்தை வர மறுத்தது.

"தைரியமா இருக்கணும் சரஸ்வதி. ஏதாவது குடிச்சுக்கோ. பயப்படாதே."

"ம்ம்..."

"இன்னும் நாலு மணி நேரத்துல எப்படியும் பிறந்திடும். அமைதியா இரு."

மனசுக்குள் விஸ்வத்தை காதலித்ததிலிருந்து படம் ஓடியது. இந்த அளவுக்கு விஸ்வத்துக்கு என் மேல் காதலா? அப்பா தூக்கியெறிந்து பேசியதை மறந்து லெட்டர் போட்ட அளவுக்கு... உடனே ஆஸ்பத்திரிக்கு ஓடி வரும் அளவுக்கு... டாக்டர் சீதாலெக்ஷ்மிக்கு இந்த அளவுக்கு என் மேல் கரிசனமா... கடவுளே! நான் தனியில்லை. எனக்கு பலம் கொடு. சுகப்பிரசவம் கொடு. மனசுக்குள் கண்மூடி வேண்டினாள்.

பதினொரு மணிக்கு குழந்தை பிறந்தது. சுகப்பிரசவம். ஆண் குழந்தை. டாக்டர் குழந்தையைக் காட்டினார்.

"யூ ஆர் லக்கி சரஸ்வதி, எ ஃப்யூட்டிபுல் கிட்."

சரஸ்வதி கையெடுத்துக் கும்பிட்டாள். "தாங்க்யூ... தாங்க்யூ டாக்டர்."

குழந்தையை பக்கத்தில் கிடத்தினார்கள். பஞ்சாய் ஒரு பொதி, மார்பில் சட்டென்று ஒரு பிரவாகம். சரஸ்வதி குழந்தையைப் பார்த்தாள். விஸ்வம் ஜாடை. சரஸ்வதி அதன் கைகளை நிமிர்த்தி விரல்களைப் பற்றிக் கொண்டாள். முகம் சுழித்து, "எனக்கு நீதான்" என்கிற தினுசில் அது –

அவளுக்குள் உறங்கிப் போனது.

படித்ததில் பிடித்தது!



ஒரு நகைச்சுவை சபதம்!

'கண்டேன் சீதையை' மாதிரி முதல் வரியிலேயே சொல்லி விடுகிறேன்: 'படியுங்கள் அவசியம்!' - இரா.முருகன் எழுதி 'ஸ்நேகா' வெளியிட்டுள்ள 'கொறிக்கக் கொஞ்சம் கம்ப்யூட்டர் சிப்ஸ்' புத்தகத்தை.

புத்தகங்களை இரண்டு வகையில் பிரிக்கலாம்.

சில - உதட்டுச் சாயம் கலையாமல், நாக்கு ருசிக்காக சும்மா கொறித்து வைக்க வேண்டியவை - பட்டாணி, பாப்கார்ன் போல.

சில - கடைசி டிஷ்யூ வரைக்கும் சக்தி அனுப்பும் நோக்கில் முற்றிலும் ஜீரணிக்கப்பட வேண்டியவை-கோதுமை, கீரை போல.

இந்த 'கொறிக்கக்...' புத்தகம் ஜீரணிக்கப்பட வேண்டிய ஒன்று.

மேஜிக் நிகழ்ச்சி பார்த்து பிரமித்து கைதட்டிப் போகும் வழியில் மாகாணிக் கிழங்கும், மல்லிகைப் பூவும் வாங்கி வீட்டுக்குப் போனதும், அந்த மேஜிக்கை என்ன ட்ரிக் செய்திருப்பான் என்று ஆராய்ச்சி மனப்பான்மையுடன் விவாதிக்கிற ஆசாமிகளுக்கு இந்தப் புத்தகம். ஒரு பள்ளிக் குழந்தைக்கும் புரிகிற வகையில் சொல்லப்பட்டிருக்கிறது.

நம் வாழ்க்கையில் ஐக்கியமாகிவிட்ட (புது வருடத்திற்கு காலண்டர் சுருட்டி கையில் கொடுப்பதுபோல, ஒரு கம்ப்யூட்டர் கொடுக்கிற காலம் வரலாம்) இந்த கம்ப்யூட்டர் உலகத்தைப் பற்றி... எளிமையாக, சுவாரசியமாக, ஏகப்பட்ட புத்தம் புதுத் தகவல்களோடு, புரிய வைக்கும் ஓர் எழுத்து முயற்சிதான் இந்தப் புத்தகம்.

முயற்சியில் முழு வெற்றி என்பது என் கருத்து. இன்றைக்கு விஞ்ஞானப் புழக்கத்தில் இருக்கும் மல்டி மீடியா, பேஜர், செல்லுலார், சாட்டிலைட் இவற்றைப் பற்றி... இவை இயங்கும் சூத்திரங்கள் பற்றி... இதைவிட விவரமாக, தெளிவாக யாரும் விளக்கிட விட முடியாதுதான்.

இரா.முருகனுக்கு எம்.ஜி.எம்.டிஸ்னி வர்ல்ட் தண்ணீர் சறுக்கல் மாதிரி வார்த்தைகள் வழுக்கிக் கொண்டு வந்து விழுகின்றன. இரவு இரண்டு மணிக்குப் படிக்கத் துவங்கினாலும், கொட்டாவியைக் கழற்றி வைத்துவிட்டு, 'அட!' என்கிற வியப்போடு படிக்க வைக்கிற சுவாரசிய நடை.

இந்த வகை எழுத்து நடை கதைகளில் சாத்தியம். விஞ்ஞானக் கட்டுரைகளில்... சற்று சிரமம். ஜெயித்திருக்கிறார். நகைச்சுவை கோட்டிங் இல்லாமல் எந்த வாக்கியமும் அமைப்பதில்லை என்று சபதமெடுத்து செயல்பட்டிருக்கிறார். உடனே புரிகிற எளிய உதாரணங்கள்! உதாரணத்திற்குச் சில:

'அண்ணாசாலையில் பக்கத்தில் பக்கத்தில் போகிற இரண்டு பல்லவன் பஸ்கள். ஒன்றில் ஜன்னலோரம் நீங்கள். மற்றதில் உங்கள் நண்பர். ஒரே வேகத்தில் இரண்டு பஸ்சும் நகரும்வரை, நிலையாக அமர்ந்து இருப்பதைப் போலத் தோன்றும். இதே போல... பூமி தன்னைத் தானே சுற்றுகிற வேகத்தில் செயற்கைக் கோளை பூமியைச் சுற்றி வரவிட்டால்... பூமியின் பார்வையில் எப்போதும் செயற்கைக் கோள் நிற்கும்!'

'ஆபீசில் புதிதாக வேலைக்குச் சேர்ந்திருக்கும் இளம்பெண் அசப்பில் நக்மா போல இருக்கிறாள்!' - 'நக்மா' என்று மூளையில் ஏற்கெனவே நீங்கள் கனகச்சிதமாகப் பதித்து வைத்திருந்த வடிவத்தோடு புது முகத்தை ஒப்பிட்டுப் பார்த்து சிலாகிப்பதே... ஒப்புமை அறிவு!'

இப்படி நிறைய...

முன்னுரையில் கல்கி. ராஜேந்திரன் சில புதிய தகவல்களைத் தந்திருக்கிறார். விஞ்ஞான கலைச் சொற்களுக்கு தமிழ் வார்த்தை வேட்டை நடத்தி, பொழுது போக்கிக் கொண்டிருக்காமல், எது புரிகிறதோ அதை அப்படியே ஏற்பது நல்லது என்கிற அவரின் கருத்துச் சுருக்கத்தில் எனக்கு முழு உடன்பாடு. 'கணிணி' என்றோ, 'தானியங்கி' என்றோ பக்குவம் தவறின சீடையைப் போல கடக், முடக்கென்று பல்லை உடைக்காமல், இரா.முருகன் இந்தக் கட்டுரைகளை எழுதியிருப்பது... வாசிக்கவும், உள்வாங்கிக் கொள்ளவும் வசதியாக இருக்கிறது.

படித்து முடித்ததும் கம்ப்யூட்டர் பற்றிய பிரமிப்பு யாருக்கும் அகலும். கடைக்குப் போய் ஓர் அழகான 'THANK YOU' கார்டு வாங்கி ஆசிரியருக்கு அனுப்பத் தோன்றும்.

— பட்டுக்கோட்டை பிரபாகர்

'கொறிக்கக் கொஞ்சம்
கம்ப்யூட்டர் சிப்ஸ்'/
இரா.முருகன்/ஸ்நேகா,
348, டி.டி.கே.சாலை,
ராயப்பேட்டை,
சென்னை-14/ ரூ. 25.00

நீங்கள் கேட்டவை — தராசு



• விபரீத அறிவுரை!



• அச்சாரப் பேச்சு!

● அஜார்,
தேனாம்பேட்டை.

? இழந்த கௌரவத்தை மீட்டு, ஜெயலலிதா மீண்டும் பதவியில் அமர வாய்ப்பு உண்டா?

! பதவியில் வேண்டுமானால் அமரலாம். ஆனால், அது இழந்த கௌரவத்தை மீட்டதாகி விடாது. அவரை மீண்டும் பதவியில் அமர்த்தும் மக்களும் சேர்ந்தே கௌரவத்தை இழந்தவர்களாவார்கள்.

● மு. இரவிச்சந்திரன்,
சேலம் – 9.

? புதிதாகத் திருமணம் செய்து கொள்வோர் ஐந்து ஆண்டுகள் குழந்தை பெற்றுக் கொள்ளக் கூடாது என்கிறாரே ஆற்காடு வீராசாமி?

! அமைச்சர்கள் யாரும் வற்புறுத்தாமலே அப்படிப்பட்ட ஒரு நிலைமை விபரீதத்தில் போய் முடிந்துள்ளது அமெரிக்காவில். குழந்தையே வேண்டாம் என முடிவு செய்து விட்டனர் பெரும்பாலான தம்பதிகள். Empty Cradle Syndrome இன்று அந்நாட்டில் பிரச்னை!

● எச். முருகேசன், கொட்டாகுளம்.

? வழக்கமாக பாதயாத்திரை சென்று தொண்டர்களைச் சந்திக்கும் குமரி அனந்தன் இப்போது மோட்டார் சைக்கிளில் 'யாத்திரை' செல்ல முடிவு எடுத்திருப்பது ஏன்?

! இன்னும் கொஞ்சம் காலம் தலைவராக நீடித்தால் (?) ஃபோர்டு எஸ்கார்ட்டில் போவாரோ என்னவோ... அதற்கு முன்னோடியாகத்தான் மோ. சைக்கிள் போலும்...

● எஸ். முஹம்மது ரம்லி, சென்னை – 17.

? டைட்டன் கோப்பை வெற்றிதான் உண்மையான டீம் ஒர்க் என்று நினைக்கிறேன். சரியா?

! கூடவே நிறைய அதிர்ஷ்டமும் கைகொடுத்துள்ளது. உச்சகட்டத்தை நெருங்கும்போது ஒரே ஓவரில் ஜோஷி பன்னிரண்டு ரன்கள் கொடுத்தபோது ரொம்ப பயந்து போனேன்.

● கே. எம். கவீட் முருகன்,
கரடிகொல்லப்பட்டி. ☐

? ஜெயலலிதாவை எதிர்ப்பவர்கள் விடுதலையாவதைப் பார்த்தால், சிறையில் வாழும் சசி கூட ஜெ.வை எதிர்ப்பதன் மூலம் விடுதலை பெற்றுவிடலாம் என்று தோன்றுகிறதே...?

! அட கடவுளே! இப்படியொரு சந்தேகம் மக்களுக்கு வர ஆரம்பித்து விட்டதா... தமிழக அரசு எச்சரிக்கை பெறட்டும்!

● எஸ். வி. பார்த்தசாரதி, திருச்சி – 20.

? தமிழகத்தில் த.மா.கா.வைத் தவிர வேறு காங்கிரஸ் இல்லை என்று வாழப்பாடி கூறியிருப்பது பற்றி...?

! குமரியினிடத்தில் தாம் நியமிக்கப்படவில்லையெனில் தாவத் தயாராக வேண்டாமா...? அதற்காகத்தான் இப்போதே அச்சாரமாக சொல்லி வைக்கிறார் போலும்.

● ஆர். முருகானந்தம், எஸ். மாரியூர்.

? இந்திய கிரிக்கெட் அணியில் தமிழக வீரர் ராபின் சிங் தொடர்ந்து நீடிக்கும் வாய்ப்பு எப்படி...?

! அடுத்து தரப்படும் ஓரிரு வாய்ப்புகளைச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொண்டு தம்மை நிரூபிப்பாரானால் அணியில் தொடரலாம்.

சசி

● கே. சஞ்சீவிபாரதி, கலிங்கியம்.

? சிதறிக் கிடக்கும் காங்கிரஸ் கட்சி ஒன்றாகச் சேருவது பற்றி நான் கவலைப்படவில்லை என்று தேவேகௌடா கூறியுள்ளாரே?

! ஆட்சியைக் கவிழ்க்க அவர்கள் முடிவு எடுக்காதவரை அவருக்குக் கவலை இல்லை தான்!

● ஆர்.கே.எஸ். சம்சுகனி, டி. மாரியூர்.

? ஒரு பெண் அதிகாரி மீது ஆசிட் ஊற்ற, பம்பாயிலிருந்து ஆட்களை அழைத்து வர வேண்டிய அவசியம் எனக்கில்லை... குவார்டர் வாங்கிக் கொடுத்தால் சென்னையிலேயே ஆட்கள் கிடைப்பார்கள் என்று மதுசூதனன் கூறியுள்ளது பற்றி...?

! இவருக்கெல்லாம் வோட்டுப் போடச் சொன்ன தலைமையை நோவதா? அதை நம்பி மோசம் போன தமிழக மக்களின் தலைவிதியை நோவதா!

● மேலை பழ. நாகப்பன், சென்னை – 41.

? 'கல்கி' பாடல்கள் எப்படி?

• மீண்டும் கௌரவம்?



• வித்தியாச யாத்திரை!



! இளந்தேவனிடம் இன்னும் அதிகமாக எதிர்பார்த்தேன்!

● வீ.ஜி. கிருஷ்ணமூர்த்தி,
சென்னை – 1.

? மகாத்மா காந்தியை இழிவுபடுத்திய கன்ஷிராமுடன் அரசியல் கூட்டு வைத்துக் கொள்ளத் தயாராயுள்ள கட்சிகள் பற்றி...?

! காந்தி தாத்தாவை காங்கிரஸ் மறந்தது இப்போது தானா...? அவர் 'ஹே ராம்' என்று சொன்னதற்கு மறுநாளே மறந்தாச்சு ஐயா!

எம். அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.

? அந்தர்பல்டி என்பதற்கு தராசின் கணிப்பில் என்ன அர்த்தம்?

! மதச் சார்புள்ள கட்சிகளை ஆதரிக்க மாட்டோம் என்று கூறி, பி.ஜே.பிக்கு மத்தியிலும் உ.பியிலும் ஆதரவு மறுத்த காங்கிரஸ், குஜராத்தில் மட்டும் பி.ஜே.பியிலிருந்து பிரிந்து வந்த வகேலா கட்சியை ஆதரிக்கிறதே... இது அந்தர்பல்டிக்கு ஓர் உதாரணம்.

● சி. மகேஷ், கர்னால்.

? பம்பாய் மாட்சில் தங்களைக் கவர்ந்தவர் யார்...?



* தமிழ்நாட்டின் தலைவலி!



* எதிர்பார்ப்பும் நடைமுறையும்



* பெருந்தன்மை



* நிரூபித்தால் நீடிக்கலாம்

விடுதலையாகி விடுவாரா...?

! 'டைட்டன்களின் டைட்டன்' என்கிற சிறப்புப் பட்டம் பெற்ற ஆலன் டொனால்ட் தான். ஏழு மாட்சுகளில் பதினேழு விக்கெட் வீழ்த்தியதால் அல்ல.. தம் குழுக்கு மட்டும் டைடன் கோப்பை கிடைக்குமானால், தமக்குத் தனிப்பட்ட முறையில் கிடைத்த அத்தனை பரிசுகளையும் விட்டுக் கொடுக்கத் தயார் என்று கூறிய பெருந்தன்மை காரணமாக. தனி மனிதரை விட குழு உணர்ச்சி எவ்வளவு முக்கியம் என்பதை உணர்த்தி விட்டார்.

● என். ஜெயராமச்சந்திரன், கோவில்பட்டி.

? ஜெயசூர்யா கிரிக்கெட் மட்டையில் ஸ்ப்ரிங் வைத்து விளையாடியதாக ஒரு வதந்தி நிலவுகிறதே...?

! அவர் 'ஸ்ப்ரிங்' வைத்திருப்பது மட்டையில் அல்ல... உற்சாகமான உள்ளத்தில்; நேர்த்தியான ஆட்டத்தில்!

● டி. வரதன், மன்னார்குடி.

? உள்ளாட்சி அமைப்புகளின் நடவடிக்கையை அரசு கண்காணிக்க வேண்டும் என்கிறாரே மூப்பனார்...?

! அரசு மட்டும் கண்காணித்தால் போதாது; த.மா.காவும் சேர்ந்து கண்காணித்து, தூய்மையான ஆட்சி நடக்க உதவ வேண்டும்.

● வெ. நீலா, மன்னார்குடி.

? தமது வங்கிக் கணக்கு விவரத்தை யாருக்கும் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை எனப் பேசிய ஜெயலலிதா, இப்போது கடைசி பைசா வரை கணக்கு கொடுத்துள்ளாரே (ரூ. 50,11,859.94).... கலைஞர் கணக்கு காட்டத் தயாரா?

! யாராயிருந்தால் என்ன... பொய்க் கணக்கு காட்டி என்ன பயன்!

● ஆர்.எஸ். நாதன், கும்பகோணம்.

? கல்கி தீபாவளி மலர் வெற்றிக்குப் பின்னால்...?

! சந்தேகமென்ன! வாசகர்களாகிய நீங்கள்தான்!

> ☐ ரூ. 25 பரிசு பெறுபவர் :
> கே. எம். கவீட் முருகன்,
> கரடிகொல்லப்பட்டி,
> தருமபுரி மாவட்டம்,
> 635 203.



ராம் காஷ்யப் குருப் நிறுவனங்கள் ஆதரவில்

அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர்கள் சங்கம் (பதிவு) சென்னை

நடத்தும்

மகாகவி பாரதியார்
115–வது பிறந்தநாள் விழா

டிசம்பர் 6, 1996

தமிழுணர்வை – பேச்சுத் திறனை வளர்க்க...
மாணவ – மாணவிகளுக்குப் பேச்சுப் போட்டி.
மொத்த பரிசுத் தொகை ரூ.30,000க்கும் மேல்

பகுதி 1 (வகுப்பு 6 முதல் 8 வரை)	பகுதி 2 (வகுப்பு 9 முதல் 12 வரை)	பகுதி 3 (பட்டப்படிப்பு மற்றும் தொழிற்கல்வி)
தலைப்பு நீங்கள் விரும்பும் பாரதியின் தேசியப் பாடல்களில் ஒன்று (40 வரிகள் மனப்பாடம் செய்து பொருள் அறிந்து ஒப்பித்தல்) **போட்டி நேரம்** காலை 9 மணிமுதல் 12 மணி வரை	**தலைப்பு** ஒன்று பரம் பொருள் (அல்லது) நேர் கொண்ட பார்வை (அல்லது) ஒரு சொல் கேளீர் **போட்டி நேரம்** பகல் 12 மணி முதல் பகல் 2 மணி வரை	**தலைப்பு** என்று தணியும்... (அல்லது) சொல் புதிது, பொருள் புதிது (அல்லது) நல்லதோர் வீணை செய்தே... **போட்டி நேரம்** மாலை 3 மணி முதல் 5 மணி வரை

பேச்சுப் போட்டி நடைபெறும் இடங்கள் :

திருச்சி	: 23.11.96, காலை 9 மணி, E.R. மேல்நிலைப் பள்ளி, (அண்ணா சிலை அருகில்), திருச்சி.
கும்பகோணம்	: 24.11.96, காலை 9 மணி, டவுன் ஹையர் செகண்டரி பள்ளி, டவுன் ஹை ஸ்கூல் ரோடு, கும்பகோணம்.
தஞ்சாவூர்	: 24.11.96, காலை 9 மணி, கல்யாணசுந்தரம் ஹையர் செகண்டரி பள்ளி, சகநாயக்கன் தெரு, தஞ்சாவூர்.
சேலம்	: 23.11.96, காலை 9 மணி, பாரதி வித்யாலயா ஹையர் செகண்டரி பள்ளி, மரவனேரி, சேலம்.
ஈரோடு	: 24.11.96, காலை 9 மணி, பாரதி வித்யா பவன், பெருந்துறை ரோடு, திண்டல் போஸ்ட், ஈரோடு.
மதுரை	: 24.11.96, காலை 9 மணி, தூய பிரிட்டோ ஹையர் செகண்டரி பள்ளி, ஞான ஒளிபுரம், அரசரடி, மதுரை.
கோவை	: 24.11.96, காலை 9 மணி, மணி மேல்நிலைப் பள்ளி, பாப்பநாயக்கன் பாளையம், கோவை.
சென்னை	: 30.11.96, காலை 9 மணி, சாரதா வித்யாலயா மகளிர் மேல்நிலைப் பள்ளி, பனகல் பார்க் எதிரில், தி.நகர், சென்னை.

போட்டியில் பங்கு கொள்பவர்கள் கவனத்திற்கு :

போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் மாணவ/மாணவிகள் தங்கள் பள்ளி/கல்லூரியிலிருந்து சான்றுக் கடிதத்துடன் சென்னை, மதுரை, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், கோவை, சேலம், ஈரோடு நகரத்திலுள்ள ராம் காஷ்யப் அலுவலகங்களில் போட்டி நடக்கும் முதல் நாளுக்குள் பெயரை பதிவு செய்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு நகரத்திலிருந்து ஒவ்வொரு பகுதியிலிருந்தும் (பிரிவிலிருந்து) இருவர் தேர்ந்தெடுக்கப்படுவர். அவர்கள் சென்னையில் 1.12.96 அன்று நடக்கும் இறுதிப் போட்டியில் கலந்து கொள்ள வேண்டும். அங்கு முதல், இரண்டாவது, மூன்றாவது பரிசுகளுக்கான மாணவ/மாணவிகள் தேர்ந்தெடுக்கப்படுவர். சென்னையில் பாரதிய வித்யா பவனில் 6.12.96 அன்று நடைபெறும் மகாகவி பாரதியின் 115ஆவது பிறந்த நாள் விழாவில் பரிசுகள் வழங்கப்படும். இறுதிப் போட்டிக்கு தேர்ந்தெடுக்கப்படுவர்களுக்கு போக்குவரத்து மற்றும் தங்குவதற்காக ரூ.300 (ரூபாய் முன்னூறு மட்டும்) அளிக்கப்படும்.

பதிவு செய்து கொள்ள வேண்டிய கிளைகளின் முகவரி :

• **திருச்சி** : 44–45 அன்னை சிவகாமி காம்ப்ளெக்ஸ், சிங்காரத் தோப்பு (சூப்பர் பஜார்), திருச்சி 620 008 • **தஞ்சாவூர்** : டி.எஸ். நம்பர். 2547, சவுத் மெயின் தெரு, தஞ்சாவூர் 613 001 • **கும்பகோணம்** : வி.எ.ஒ.காம்ப்ளெக்ஸ், 198 முதல் மாடி, பெரிய கடை வீதி, கும்பகோணம் 612 001 • **பாண்டி** : திரு. பஞ்ச ராமலிங்கம், தலைவர், அனைத்து இந்திய தமிழ் எழுத்தாளர்கள் சங்கம், புதுச்சேரி, 53, செய்குத்தர் தெரு, முத்தியால்பேட்டை, புதுச்சேரி – 5 • **சேலம்** : 61, செர்ரி ரோடு, சேலம் 636 007 • **ஈரோடு** : ஆலூர் அம்மன் காம்ப்ளெக்ஸ், 58 சத்தி ரோடு, ஈரோடு 638 003 • **கோவை** : 2வது மாடி, ஏசியாடிக் பில்டிங், 378, Dr. நஞ்சப்பா ரோடு, கோவை 641 018 • **மதுரை** : N.C.S. பில்டிங், 113-B, மேற்கு பெருமாள் மேஸ்திரி தெரு, மதுரை 624 001 • **சென்னை** : 14/3 தண்டபாணி தெரு, தி.நகர், சென்னை 600 017.

ஒவ்வொரு பகுதிக்கும் 3 பரிசுகள்

முதல் பரிசு	– ரூ.3,000/–
இரண்டாம் பரிசு	– ரூ.2,000/–
மூன்றாம் பரிசு	– ரூ.1,000/–

Ram Kaashyap
Group Companies



"சிரித்துக் கொண்டே இருப்பேன்!"

ஒன்பது வயதுப் பெண் குழந்தை உடலில் ஒரு பொட்டுத் துணியில்லாமல் அலறி அழுதபடி ஓடுகிறது. கைகளைத் தலைக்கு மேல் உயர்த்தி ஓடுகிறது. முகத்தில் தெரியும் வலியும் வேதனையும் உச்சகட்ட பயத்துடன் போட்டி போடுகின்றன. அவள் சின்ன உடலை தீய்த்துக் கருக்கும் நாபாம் தாக்குதலின் கொடூரத்தை அப்படியே உறையவைக்கிறது ஒரு காமெரா.

அந்தப் புகைப்படம்- மனிதன் மனிதனுக்கு இழைக்கக் கூடிய கொடுமையின் உச்சத்தைச் சித்திரிக்கிறது. வியட்நாம் யுத்தத்தின் மூர்க்கத்தை அப்படியே படம் பிடிக்கிறது.

படத்தில் இருந்த பெண்மணி பான் தி. கிம் புக். (கிம் என்று தமிழில் வசதியாய் அழைப்போம்.)

வடக்கு- தெற்கு வியட்நாம்கள் மோதிக் கொண்டபோது அமெரிக்கா வட வியட்நாமுக்கு உதவ துருப்புகள் அனுப்பியது. அந்த யுத்தத்தின் ஒரு கட்டத்தில் அமெரிக்க கமாண்டர்கள் ஆணையிட, தெற்கு வியட்நாம் மீது நாபாம் வீசப்பட்டது. அந்த குண்டு வீச்சில் கிம்மின் தம்பிகள் தலத்திலேயே இறந்து விட்டனர். அவள் மட்டும் உயிர் தப்பினாள். தப்பி ஓடும்போது அவளைப் படம் பிடித்த அசோசியேட் பிரெஸ் காமெராக்காரர் நிக் யூட் ஒரு மனிதாபிமானி. மருத்துவமனைக்கு அவளைத் தூக்கிக் கொண்டு ஓடினார். வெந்து புண்ணாகிப் போன உடலைத் தொட்டு மருந்து போட்ட போது வலி தாளாமல் பிரக்ஞை இழந்து விடுவாள் கிம். ஒவ்வொரு முறை தொட்ட போதும் பிரக்ஞை இழந்தாள்! அமெரிக்க பிளாஸ்டிக் சர்ஜன்கள் பிரும்ம பிரயத்தனப்பட்டு அவளைக் காப்பாற்றிக் கொடுக்க பதினான்கு மாதங்களாயின.

நிக் யூட்டின் புகைப்படம் புலிட்ஜர் பரிசு பெற்றது. சில ஆண்டுகளுக்கு அரசாங்கத்தின் பிரசார கருவியாகப் பயன்பட்டது அந்தப் புகைப்படம். 1984 இல், ஹாலந்து நாட்டு சினிமா குழு ஒன்று கிம்மைக் கண்டுபிடித்தது. முடிவில்லாத பேட்டிகளும் புகைப்படக்காரர்களின் தொல்லையும் தொடங்க, கிம் அவற்றிலிருந்து தப்பவே கியூபாவுக்குப் படிக்கப் போனாள்.

ஆஸ்துமாவும் நீரிழிவு நோயும் ஆட்டி வைக்க, முதலில் மருத்துவப் படிப்பையும் பிறகு பார்மஸி படிப்பையும் பாதியில் நிறுத்த வேண்டியதாகி விட்டது. ஹீய்தோன் என்ற



''சார், இன்னிக்கு அக்காவால வர முடியாதாம். அதனால, கண்டலை மட்டும் வாங்கிக்கிட்டு வரச் சொன்னாங்க...''

- ஆர். வசந்தகுமார்

சக மாணவனை திருமணம் செய்து கொண்டார் கிம். தேனிலவுக்கு மாஸ்கோ சென்று, கியூபா திரும்பும் வழியில்... விமானம் நியூஃபவுண்ட்லாண்டில் பெட்ரோலுக்காக நின்றது. இருவருமே அங்கே இறங்கி அகதிகளாகத் தங்கிவிட்டனர். சமூக சேவை நிறுவனங்களின் உதவியினால் கானடா அரசாங்கத்தின் அடைக்கலம் கிடைத்தது. கம்ப்யூட்டர் ஸ்பெஷலிஸ்டான கணவனுக்கு வேலையும் இப்போது கிடைத்திருக்கிறது.

இன்று கிம்மின் வயது 33. டொரண்டோவில் சராசரியான சந்தோஷ வாழ்க்கை வாழ்கிறார். இரண்டு வயதில் ஓர் ஆண் குழந்தை.

சமீபத்தில் ஒரு மிகப் பெரிய காரியம் செய்திருக்கிறார் கிம். எந்த அமெரிக்க வீரர்கள் அவர் மீது வெறித்தாக்குதல் நடத்தினார்களோ; அவரைச் சொல்ல முடியாத சித்திரவதைக்கு உள்ளாக்கினார்களோ- அந்த வீரர்களுக்கென எழுப்பப்பட்டுள்ள வாஷிங்டன் நினைவுச் சின்னத்துக்குப் போய் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியிருக்கிறார்.

கால் நூற்றாண்டுக்கு முன் நிகழ்ந்த கொடுமைகளை எல்லாம் பழங்கனவாக பாவித்து அவர் செய்த அந்தக் காரியத்தை ஆயிரக்கணக்கான மக்கள் உணர்ச்சிப் பெருக்குடன் கண்டு, நிறுத்தாமல் கை தட்டினார்கள்.

''உடலாலும் மனத்தாலும் ஏராளமாய்த் துன்பம் அனுபவித்து விட்டேன்...'' என்று பேசினார் கிம். 'சில சமயங்களில் மூச்சு விடக் கூட முடியாமல் திணறினேன். ஆனால் இறைவன் என் உயிரைக் காப்பாற்றி நம்பிக்கை யூட்டியிருக்கிறான். என் மீது குண்டு போட்ட அந்த விமானியை இப்போது சந்தித்தால்கூட நான் இதைத்தான் சொல்லுவேன். நடந்து முடிந்த சரித்திரத்தை நம்மால் மாற்ற முடியாது. ஆனால் நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் நாம் நன்மைகளையே செய்வோம். அமைதியை வளர்ப்போம்.'

கிம்மை வாஷிங்டனுக்கு வரவழைத்தது vietnam veterans of America என்கிற அமைப்பு.

''என் அனுபவங்களைப் பிறருடன் பகிர்ந்து கொள்வதற்காகவே அந்த அழைப்பை ஏற்றேன்'' என்கிறார், கிம். ''என் புகைப்படம் சரித்திரமாகியிருக்கிறது. ஆனால் புகைப்படத்தில் சிறைப்படாத எத்தனை உயிர்கள் துடி துடித்து இறந்து போயிருக்கும்? எத்தனை மனிதர்கள் உடலுறுப்புகளை இழந்து தவித்திருப்பார்கள்... வாழ்க்கையையே இழந்துவிட்ட அவர்களின் புகைப்படங்களை யாரும் எடுக்கவில்லை!''

வியட்நாம் வீரர்களின் நினைவுச் சின்னமான நீண்ட சுவரில், உயிரிழந்த ஆயிரமாயிரம் வீரர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டிருக்கும். அதைப் பார்த்துவிட்டு ஆடிப் போய்விட்டார் கிம். ''ஒரு முட்டாள்தனமான யுத்தத்துக்காக எத்தனை பேர் செத்து மடிந்திருக்கிறார்கள்..?'' என்று வருத்தத்தில் ஆழ்ந்தார். சீருடை அணிந்து வந்த மாஜி வியட்நாம் போர் வீரர்களைக் கண்ட போது அவருக்குக் குலை நடுக்கமே வந்துவிட்டது. மிகவும் பிரயத்தனப்பட்டுத் தம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டார்.

இன்று கிம்மைப் பார்ப்பவர் எவரும் சந்தேகிக்க மாட்டார்கள். மழமழவென்ற அந்த உருண்டை முகம் கஷ்டப்பட்டு ஒட்டுப் போட்டு காப்பாற்றப்பட்டது என்று!

ஆனால் உடல் உபாதைகள் அவரைத் தொடர்ந்து வாட்டுகின்றன. நீரிழிவு, ஆஸ்துமா, மைக்ரெய்ன் தலைவலி தவிர... தோலின் பல பகுதிகள் நிரந்தரமாய்த் தீய்த்துபோய் எண்ணெய் சுரப்பிகளையும் வியர்வை சுரப்பிகளையும் இழந்துவிட்டன. இதனால் அவ்வப்போது எழும் எரிச்சலும் வலியும் சொல்லி மாளாது.

''பருவ நிலை மாற்றங்கள் நிகழும்போது வெட்டிப் போட்டது போல் உடல் வலிக்கும். யோசிப்பதன் மூலம் வலியைத் தணித்துக் கொள்ள முயற்சி செய்வேன். 'ஏதாவது கேளுங்கள், பதில் சொல்கிறேன், வலி மறக்கும்' என்று கணவருடன் உரையாடுவேன். அல்லது வேடிக்கை கதைகள் சொல்லும்படி அவரை வற்புறுத்துவேன். இப்படி இருப்பதால்தான் என்னால் தினம் தினம் வாழ முடிகிறது. சோகத்தை சுமக்கப் பிடிவாதமாய் மறுக்கிறேன் நான். என் சுபாவமே சோகமான சுபாவமில்லை... என் வீட்டில் எப்போதும் சிரித்துக் கொண்டே இருப்பேன்..'' என்கிறார் கிம் புக்.

'கிம் புக்' என்கிற வியட்னாமிய பெயருக்குப் பொருள்: 'பொன்னான மகிழ்ச்சி!'

- ஹிந்துவில் வெளியான நியூயார்க் டைம்ஸ் கட்டுரையின் தமிழ் வடிவம்.



தகிடுதத்தாவின் 'தப்பித்தல்' யோசனைகள்!

நம்மவர்கள் கஷ்டப்பட்டு சேர்க்கிற சொத்தையெல்லாம் திடீரென்று 'ரெய்டு' வந்து சுருட்டிக் கொண்டு போய் விடுகிறார்கள்! இது என்ன நியாயம்? சேர்க்கிற சொத்தையெல்லாம் பாதுகாத்து பத்திரப்படுத்த, டாக்டர் தகிடுதத்தா (பணநல வல்லுனர்) ஓர் அருமையான நூல் எழுதிக் கொண்டிருக்கிறார்.



முன்னோட்டமாக நூலிலிருந்து சில பகுதிகள் :

லாக்கர் விஷயங்கள் : வங்கி லாக்கர்களில் எப்போதும் பன்னிரெண்டு ரூபாயும் நூற்றிருபது காசுகளும் மட்டும் விட்டு வைத்தால் போதும். குறைவாக இருந்தாலும் பாதகமில்லை. லாக்கர் சோதனையிட வருகிறவர்கள் திறந்து பார்த்து, 'கண்டுபிடித்து' விட்டால் இப்படி பதில் சொல்லலாம்: "இது என்னுடைய ஓர் ஆண்டுச் சம்பளம். சில்லறையாக இருப்பது போன ஆண்டுச் சம்பளத்தில் மாதம் பத்து காசு வீதம் 'வயிற்றைக் கட்டி வாயைக் கட்டி'ச் சேமித்து வைத்தது. இதுவும் தேச நலன் கருதியும் சேமிப்பின் அவசியம் கருதியும் செய்யப்பட்டதுதான்." — பதிலை வாய் மொழியாகக் கேட்டால் தருந்த ஏற்ற இறக்கங்களோடு உருக்கமாகச் சொல்லலாம். தூர்தர்ஷன் நாடகங்களில் வருகிற மாதிரி பேசினால் அகப்பட்டுக் கொள்ள நேரிடும் என்பது முக்கியமான குறிப்பு.

மூலிகை ஆராய்ச்சி : வீட்டுத் தோட்டத்தில் தங்கக் கட்டிகள், நகைகள் மட்டுமின்றி ரூபாய் நோட்டுக் கட்டுகளையும் பூச்சி அரிக்க முடியாத பாலிதீன் கவர்களில் போட்டுப் புதைத்து விடலாம். பணம், தங்கம், வெள்ளி வைரம் எல்லாவற்றையும் தனித்தனிக் குழிகளிலேயே புதைக்க வேண்டும். மேலே ஏதாவது ஒரு செடியை, (ஓரளவு கருகிப் போயிருந்தால் நல்லது) நட்டு வைத்து, அவ்வப்போது கொஞ்சம் தண்ணீர் விட்டு வரவேண்டும். விவரம் கெட்டத்தனமாக யாராவது அதிரடிச் சோதனைக்குத் தோட்டத்துக்கு வந்து தோண்டி எடுத்தால் கூட, பயம் வேண்டாம். அதற்குத் தயாராக பதில் இருக்கிறது.

'இமயமலைத் தொடரில் ஆசிரமம் கட்டியிருக்கிற பரதன் பிள்ளையின் ஆராய்ச்சியின்படி சில மூலிகைகளை ஒட்டுச் சேர்த்து நட்டு வைத்தால், வேருக்குக் கீழே தங்கம், வெள்ளி, ரூபாய் எல்லாம் விளைகிறது. பொன்னாங்கண்ணியையும் முந்திரிச் செடியையும்

ஜாலி போட்டி - 17

பரிசு ரூ. 5000/-

கீழே கொடுக்கப்பட்டுள்ள சில குறிப்புகளுக்குள் சில பிரபல பத்திரிகையாளர்கள் ஒளிந்து கொண்டிருக்கிறார்கள். குறிப்புகளை வைத்துக் கொண்டு, அவர்கள் யாரென சரியாகக் கண்டுபிடித்தால் பரிசு ரூ. 5000. பலர் சரியாக எழுதி விட்டால் குலுக்கலில் ஒருவர். **கடைசி தேதி *2.12.96.*** ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

1. மழை பெய்வதை, இப்படிப் பெய்வதாகத்தான் பொதுவாக சொல்வார்கள்.
2. துவாரங்களின் நண்பன்
3. பாணம் விடுவதற்குப் பெயர் போனவர்
4. இப்போது இல்லை; முன்பு சூப்பர்ஹிட் ஆன ஐந்தெழுத்து ரஜினி படம்.
5. இன்னொரு முன்னாள் ரஜினி படத்தின் 'தந்தை'.
6. சாகும்போது காந்தி இவரைத்தான் கூப்பிட்டார்.

ஜாலி போட்டி - 17

அந்த 6 பத்திரிகையாளர்கள் :

1.

2.

3.

4.

5.

6.

பெயர் : ....

முகவரி : ....

....

....

ஒட்டுவைத்து, அடியில் ஒரு சின்னத் தங்கத் துண்டைப் புதைத்தால் போதும். ஆறே மாதங்களில் எக்கச்சக்கமாகத் தங்கம் விளைகிறது. விதம் விதமான நகை போட்ட பெண்கள் செடியைத் தொட்டுக் கும்பிட்டால் அப்படியே அந்த நகை வேரில் காய்க்கிறது. அதே மாதிரி நிலக்கடலைச் செடியையும் ஆடாதொடைச் செடியையும் ஒட்டுப் போட்டால் காந்தி படம் போட்ட நோட்டுக்களே கட்டுக் கட்டாய்க் 'கிழங்கு' வைக்கிறது. ஆனால் ஒட்டுப் போடுகிற ரகசியம் யாருக்கும் சொல்ல மாட்டேன்.'

— இப்படிச் சொன்னால் நம்புவார்களா என்று சந்தேகம் வேண்டாம். இப்படிச் சொன்னால்தான் நம்புவார்கள். (தவிர உங்களுக்கு ஆராய்ச்சிக்காகப் பலகோடி ரூபாய் அரசாங்க மானியம் கிடைக்கவும் சான்ஸ் இருக்கிறது).

சுற்றுப்புறச் சூழல் : உங்கள் பங்களாவைச் சுற்றிலும் சாக்கடை தேங்கியிருந்தால் நல்ல வசதி. அதைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்தலாம். முடியுமானால் அந்தச் சாக்கடைக் குழிகளைக் கொஞ்சம் அதிகமாக ஆழப்படுத்துங்கள். செலவைப் பார்க்க வேண்டாம். ஒரு கனமான பாலிதீன் பைக்குள் உங்கள் சேமிப்புக்களைப் போட்டு உள்ளே தள்ளி விடுங்கள். யாரும் கண்டு பிடிக்க முடியாது. இது போன்ற சாக்கடைக் குழிகளை மாநகராட்சியோ முனிசிபாலிடியோ கண்டு கொள்வதில்லை. கொசு வளர்ப்புக்காகச் சில பிரத்யேக மருந்துகள் உண்டு. அவற்றை உங்கள் செலவில் வாங்கித் தேங்கிய நீரில் ஸ்பிரே பண்ணலாம். இதனால் கொசுக்களும் வளரும். செத்தாலும் யாரும் கிட்டே வரமாட்டார்கள்.

அதிகாரிகளுக்கு முக்கியக்குறிப்பு : நீங்கள் தப்புவதற்காக 'இன்னாருக்காகத்தான் இப்படிக் கையெழுத்துப் போட்டேன். எனக்குத் தெரியாமல் நடந்து விட்டது' என்று சொல்லி அகப்பட்டுக் கொள்ள வேண்டாம்; ஒரேயடியாக 'இது என் கையெழுத்தே இல்லை' என்று சொல்லி விடலாம். கையெழுத்துப் பரிசோதனைக்காகக் கல்கத்தாவுக்கும் சைபீரியாவுக்கும் அனுப்பி நிரூபணமாவதற்குள் ஆட்சி மாற்றம் வந்துவிடும். அப்போது நீங்கள் மட்டுமின்றி உங்கள் தலைவர்களும் தப்பிவிட முடியும். 'வசதியான' ஆட்சி வந்தால் மான நஷ்ட வழக்குக் கூடப் போட முடியும்.

கற்பனை : **யெஸ்பால்**

"உலக அழகிப் போட்டிக்கு முதல் வரிசை டிக்கெட் வாங்கியிருக்கறவங்க விலாசத்தைத் தேடிப் புடிச்சுருக்கேன்.... ரெய்டு நடத்தினா எக்கச்சக்கமா கறுப்புப் பணம் கண்டுபிடிக்கலாம்...."





"எங்க மிரட்டல்லாம் எங்க வாக்குறுதி மாதிரிதான். அதுக்கு அர்த்தமே கிடையாது..."

ஆஹாஹா....

"ஏகமனதா தீர்மானம் நிறைவேத்தலை போலிருக்கு...."



"உங்க ரிஜிஸ்டர்ட் லெட்டர் வர இன்னும் கொஞ்சம் நாளாகும்... ஊழியர்களெல்லாம் கோஷம் எழுப்பியும் கொடி புடிச்சும் சோர்ந்து போய் ஒரு வாரம் லீவுல போயிருக்காங்க..."



- இந்தியன் பீச்சர்ஸ் ஸிண்டிகேட்

ஓடிப் போனவன்

யோகி

கையில் இருந்த எல்லா பணமும் செலவழிந்தபின்தான், சேகருக்கு வீட்டு ஞாபகம் வந்தது. அம்மாவின் முகம் மனத் திரையில் தோன்றியது. பிறகு அப்பா, அக்கா, தங்கை என்று எல்லோரின் முகமும் வரிசையாய் தோன்றி மறைந்தன.

வயிறு பசித்தது. நேற்று இரவு சாப்பிட்டு விட்டு பீச்சில் படுத்துத் தூங்கியது. பையில் இருந்த பத்து ரூபாய் - எங்கேயோ விழுந்து விட்டது. பசி வயிற்றைக் கிள்ளியது. என்ன செய்வது? வீட்டிற்குப் போவோமா? போவதற்கு முதலில் பணம் இல்லையே.

வீட்டிற்குப் போனால் முதலில் அப்பா பெல்ட்டைக் கழட்டி விளாசு விளாசு என்று விளாசி விட்டுத்தான் மறுவேலை பார்ப்பார். ஒரு ரூபாயா... இரண்டு ரூபாயா.. இரண்டாயிரம் ரூபாயை எடுத்துக் கொண்டு ஓடிய கோபம் அவருக்கு இருக்காதா? கண்ட துண்டமாய் வெட்டி விட வேண்டும் என்று எண்ணி இருப்பார்.

அக்காவின் வளைகாப்புக்காக அப்பா தவணைக்காரனிடம் இரண்டாயிரம் ரூபாய் வாங்கி வைத்து இருந்தார். அதை அல்லவா தூக்கி வந்து விட்டான்? கையில் இருந்த எல்லா காசும் செலவழிந்தபின் தான் உண்மை உறைக்கிறது. அப்பா பாவம் என்கிற எண்ணம் வருகிறது.

அப்பாவின் பெல்ட் அடியை நினைத்தால் வீட்டிற்குப் போகும் ஆசையே முற்றுப் பெற்று விடுகிறது. அப்பாவின் பெல்ட் அடிக்கு பயந்துதானே வீட்டை விட்டு ஓடி வந்தது?

சேகர் மூணு முறை எழுதியும் ப்ளஸ்டுவில் தேற முடியவில்லை. வயசும் இருபதாயிற்று. வேலைக்கு போகச் சொன்னாலும் போவதில்லை. உரக்கடையில் வலுக்கட்டாயமாய் கொண்டு போய்விட்டார் சேகரை. அந்த மருந்து நெடி சேகருக்குப் பிடிக்கவில்லை. சில சமயம் வாந்தி வருவது போல் இருக்கும். அப்பாவிடம் 'வேலைக்குப் போகப் பிடிக்கவில்லை' என்று சொன்னால் அடி பின்னி விடுவார்.

அதனால் தினசரி வேலைக்குப் போவதாய் சொல்லிவிட்டு காலையில் கிளம்பிச் சென்று விடுவான். ஊர் சுற்றுவான். மதியம் சாப்பிட வீட்டிற்கு வந்து விட்டு, திரும்ப வேலைக்குப் போவதாய்ச் சொல்லி விட்டு, எங்காவது போய் சுற்றித் திரிந்து விட்டு இரவு வருவான்.

இருபது நாட்கள் இப்படியே ஓடி விட்டது. ஒருநாள் சேகரின் அப்பா கடைக்குப் போய் இருக்கிறார். மகனைக் காணோமே என்று விசாரித்து இருக்கிறார்.

'உங்க பையன் ரெண்டு, மூணு நாள்தான் வேலைக்கே வந்தான். அப்புறம் வரலை'' என்று சொல்ல, அப்பாவிற்குக் கோபம் தலைக்கேறியது. வீட்டிற்கு வந்து அம்மாவிடம் "அந்த ராஸ்கல் வந்தா இருக்கச் சொல்" என்று வெளியே போய் விட்டார். மதியம் சாப்பிடப் போன சேகரிடம் அம்மா விசாரிக்க, சேகர் பயந்து போனான் பெல்ட் அடிக்கு.

பெட்டியில் அப்பா முந்தின நாள் கந்து வட்டிக்கு வாங்கி வைத்து இருந்த இரண்டாயிரத்தை எடுத்துக் கொண்டு கிளம்பி விட்டான் - மதுரையை விட்டு. இனி வீட்டுக்கே போகக் கூடாது என்று முடிவு பண்ணினான்.

பஸ் ஏறி, சென்னைக்கு வந்தான். முதல் முதலாய் சென்னைக்கு வருகிறான். நகரைப் பார்த்து பிரமித்தான். கையில் இரண்டாயிரம் வேறு இருக்க, சொல்லவும் வேண்டுமா உல்லாசத்திற்கு? படம் பார்க்க, சாப்பிட, தூங்க, சூட்டிங் பார்க்க என்று ஒரு மாசத்தை தொலைத்து விட்டான்.

பணம் செலவாகி அம்பது ரூபாய் மட்டும் மிஞ்ச, இரண்டு நாளாய் பிளாட்பாரத்தில் படுத்துத் தூங்கினான். என்ன செய்வது என்று யோசித்தான். திடீர் என்று அம்மாவின் ஞாபகம் வந்தது. அப்பா அம்மாவை துவைத்துப் போட்டு இருப்பார். "உனக்குத் தெரியாமயா அவன் எடுத்துட்டு போய் இருக்கான்? வீட்டில் நீ எதுக்கு இருக்கே?'' என்று கெட்ட வார்த்தை சொல்லிக் கொண்டு உதைத்து இருப்பார்.

தனக்குத் தர வேண்டிய பெல்ட் அடியை அம்மாவுக்குத் தந்து இருப்பார். அம்மாவை நினைத்தால்தான் பரிதாபமாய் இருந்தது. அம்மாவைப் பார்க்க வேண்டும் போல் இருந்

தது. போனால் - அப்பா அடி, கொன்று விடுவாரே. அந்த இரண்டாயிரத்திற்கு பதில் சொல்ல வேண்டுமே. இரண்டாயிரம் ரூபாய் செலவு பண்ணியபோது அறிவு எங்கே போனது?

இப்போது ஊருக்குப் போகக் கூட காசு இல்லையே.... என்ன செய்வது? சொந்தக்காரர்கள் எவரிடமாவது கேட்கலாமா. இங்கு நிறைய உறவினர்கள் இருக்கிறார்கள். ஆனால் விலாசம் தெரியாது. எது எப்படியோ– ஊருக்குப் போக ஆசையாகவும் உள்ளது. அதே சமயம் அச்சமாகவும் இருந்தது.

அப்பா ஏழெட்டு பேர்களிடம் தவணைக்கு வாங்கி இருக்கிறார். ஒருநாள் தவணை ரூபாய் தரவில்லையாயினும் அவர்கள் அசிங்க அசிங்கமாய்ப் பேசுவார்கள். எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டுதான் இருப்பான். இருந்தும் அறிவு இல்லாமல் போயிற்று. அந்த இரண்டாயிரத்தை எடுக்கும் போது. அப்பா, அக்காவின் வளைகாப்புக்கு என்ன செய்யப் போகிறாரோ?



வளைகாப்பு தேதி முடிந்து பத்து நாள் ஆயிற்று. வளைகாப்பு நடந்ததோ இல்லையோ.. தெரியவில்லை. அக்காவுக்கு என் மேல் ரொம்பப் பிரியம். அவளுக்காக வைத்து இருந்த பணத்தை எடுத்துக் கொண்டு வந்து அழித்து விட்டேனே. இனி என்னிடம் பேசவாவது செய்வாளா...

என்னதான் செய்வது? ஊருக்குப் போய் எல்லோரிடமும் மன்னிப்பு கேட்க வேண்டும். இல்லை இங்கேயே எங்காவது வேலைக்கு சேர்ந்து கொண்டு லெட்டர் போடுவோமா? எங்கு வேலைக்குச் சேர்வது? ஹோட்டலில் தான் வேலைக்குச் சேர்ப்பார்கள்...

சேகர் கடற்கரை மணலில் உட்கார்ந்து அலைகளை வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தான். பசி அவனை நடக்க விடாமல் செய்தது. பேசாமல் ஓடிப் போய் கடலில் விழுந்து விடலாமா? அம்மாவின் நினைவு வந்து அதையும் செய்ய விடாமல் தடுத்தது.

அந்த வழியே போன ஒருவர் - திரும்பித் திரும்பி இவனையே பார்த்துக் கொண்டு இருந் தார். சேகரும் அவரைப் பார்த்தான். அவர் டிப்டாப்பாக இருந்தார். சேகரை நோக்கி வந் தார். அவர் அருகே வரவர சேகருக்கு பயமாய் இருந்தது. போலீஸாய் இருக்குமோ... ஆனா அவர் சினேகமாய் சிரித்தார். "வெளியூரா..." என்று கேட்டார்.

இவன் எழுந்தான் - 'ஆமா.'

"ஊரை விட்டு ஓடி வந்துட்டியா?"

இவன் பேசாமல் இருந்தான். "பதில் சொல் லுங்க தம்பி" என்றதும் "ஆமா..." என்றும் இரண்டு நாளாய் பட்டினி கிடப்பதாயும் அழுதவாறு சொன்னான்.

"சரி என் கூட வா..." என்றவரை பின் தொடர்ந்தான். "நீ உண்மையைத்தானே சொல்றே. பொய் இல்லையே."

"இல்ல."

"சரி.. நான் உன்னை பஸ் ஏத்தி விடுறேன். ஊருக்குப் போறியா?" என்று கேட்டார். இவன் தலையசைத்தான். ஒரு ஹோட்டலுக்கு அழைத்துப் போய் சாப்பிடச் சொன்னார். அவர் தன்னைப் பற்றி சேகரிடம் சொன்னார். அவர் ஒரு சமூக சேவகர்... உடல் ஊனமுற் றோர்க்கான இல்லம் ஒன்றும் நடத்துகிறார். ஊரை விட்டு ஓடிவந்த பெண்கள், பையன்கள் கண்ணில் பட்டால் புத்தி சொல்லி மீண்டும் ஊருக்கே அனுப்பி வைக்கிறார். சமூக விரோதிகளின் கையில் சிக்கி, சின்னாபின்ன மாகாமல் தடுக்கும் முயற்சியில் இருக்கிறார்.

சாப்பிட்டு முடித்ததும் பஸ் ஸ்டாண்டிற்கு அழைத்து வந்தார். டிக்கெட் எடுத்து பஸ்ஸில் உட்கார வைத்தார். "தம்பி.. தப்பு உன் மேல தான். இத்தனை வயசாகியும் வேலைக்குப் போகலைன்னா எந்த தகப்பனும் கோபிக் கத்தான் செய்வாங்க. இப்போ கஷ்டப்பட் டேன்னா, பின்னால் உன் வாழ்க்கை நல்லா இருக்கும். இப்போ சோம்பேறியா இருந்துட் டேன்னு வை. பின்னால் நிறைய கஷ்டப் படுவே... படிச்சு இருக்கேல தம்பி... புரிஞ்சுக் கணும். பிறரை கஷ்டப்படுத்தாம வாழப் பழ கிக்கோ. ஊருக்குப் போய் லெட்டர் போடு. இந்தா என் விலாசம்" என்று விசிட்டிங் கார் டைக் கொடுத்தார்.

பஸ் கிளம்ப ஆயத்தமானது. அவர் இறங் கிக் கொண்டார். "நல்லவனா நடந்துக்கோ. வேலைக்குப் போ. யாரையும் கஷ்டப்படுத் தாதே" ஜன்னல் வழியே சொன்னார்.

யார் இவர்? என்ன உறவு தனக்கு... ஒரு ஞானத்தை போதித்து விட்டு போகிறார்? பஸ் கிளம்பியது.

விழித்த போது - மதுரையை பஸ் நெருங்கியது. இறங்கி, டவுன் பஸ் பிடித்து, வீட் டிற்கு வந்தான். வீட்டை நெருங்க நெருங்க பயமாய் இருந்தது. வீடு வந்து விட்டது. வீடு சாத்தி இருந்தது. கதவைத் தட்டினான்.

"யாரு.." தூக்கக் கலக்கத்தில் அம்மாவின் குரல்.

இவன் பதில் பேசவில்லை. பயம். அப்பா பெல்ட்டோடு வந்து ரோட்டிலேயே அடி பின்னி விடுவாரோ என்று.

அம்மா கதவைத் திறக்காமலே கேட்டாள். "சேகரா..." என்று. அம்மா சேகரைக் கட்டிக் கொண்டு அழுதாள். சப்தம் கேட்டு அக்காவும், தங்கையும் வந்தனர். அவர்களைப் பார்க்க வெட்கமாய் இருந்தது. அப்பாவும் வந்தார். பயமாய் இருந்தது.

அம்மா திடீரென்று ஆக்ரோஷம் வந்தவள் போல், "நாயே... பணத்தை எடுத்துட்டு எங் கேடா போனே... உனக்கு அறிவு இல்லையா?" என்று முதுகில் பளார் பளார் என்று அறைய ஆரம்பித்தாள்.

"காசு போனா போயிட்டு போகுது கமலா... ஒழுங்கா வந்து சேர்ந்தான்ல.. அது போதும். இனிமேலாவது ஒழுங்கா இருந்தா சரிதான்."

சொல்வது அப்பாவா? அவன் நம்பிக்கை இல்லாமல் சுவரைப் பார்த்தான். ஆணியில் மாட்டப்பட்ட பெல்ட் அங்கேயேதான் இருந்தது.



"ஜெயில் பயத்துலே நம்ம தலைவருக்கு என்ன பேசறோம்னே தெரியாமப் போயிடுச்சு..."

"என்ன பேசிட்டாரு...?"

"நீதிபதிகிட்ட, 'இதுவரைக்கும் வாங்கியிருக்கிற எல்லா லஞ்சப் பணத்துக் கும் வருமான வரி கட்டிடுறேன்... என்னை விட்டுடுறீங்களா'ன்னு கேட்டாராம்..."

—ஜா.ரவி

நெற்றியில் ஏன் மூன்று பொட்டுகள்?

சில வாரங்கள் முன்பு ஜெர்மனியில் இரண்டு திரைப்பட விழாக்கள் நடைபெற்றன. பெர்லினுக்கு அருகே காட்புஸ் என்ற நகரில் ஆறாவது கிழக்கு ஐரோப்பிய திரைப்பட விழா. லெப்ஸிக் நகரில் 39-வது சர்வதேச டாக்குமெண்டரி மற்றும் கார்ட்டூன் திரைப்பட விழா. இரண்டிலும் சிறந்த படங்களைத் தேர்ந்தெடுக்கும் நடுவர் குழுவில் சென்னையைச் சேர்ந்த ஏ.தங்கராஜ் இடம் பெற்றிருந்தார். ஃபிலிம் சொஸைட்டிகளின் சர்வதேச கூட்டமைப்பின் சார்பாக இந்தியாவிலிருந்து ஜூரிகளில் ஒருவராக தங்கராஜ் நியமிக்கப்பட்டிருந்தார். ஆசியப் பிரதிநிதியாக இவர் ஒருவர் மட்டுமே! தங்கராஜின் அனுபவங்கள்:



“காட்புஸ் விழாவில் கலந்து கொண்டவை எல்லாமே கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் தயாரான படங்கள்தாம். எனவே அதை சர்வதேச திரைப்பட விழா என்று குறிப்பிட முடியாது. இருந்தாலும் 75 படங்கள் வந்தன. அவற்றில் பன்னிரண்டு மட்டுமே போட்டியில் கலந்து கொண்டன. ஃபிலிம் சொஸைட்டி கூட்டமைப்பின் சார்பாக மூன்று பேர் ஜூரிகள். நான், டென்மார்க்கிலிருந்து ஒருவர். ஜெர்மனியிலிருந்து ஒருவர்.

“ஒரு நாளைக்கு ஐந்து படங்கள் பார்த்தோம். ரசிகர்களுடன் சேர்ந்தே பார்த்தோம். படம் பார்க்கும்போதே சிறப்பு அம்சங்களைத் தனித்தனியே நாங்கள் குறித்துக் கொண்டு மறுநாள் காலை தியேட்டருக்குக் கிளம்பு முன் கலந்து பேசி முந்தைய நாள் பார்த்ததில் சிறந்த படம் எது என்று முடிவு செய்து விடுவோம். இப்படி தினமும் தேறும் படங்களை இறுதியில் விவாதித்து பரிசுக்குரியதை முடிவு செய்தோம்.

“பரிசளிப்பு விழாவில் நாங்களே பரிசளித்தோம். மேடையில் யாருக்கும் நாற்காலி இல்லை. நாங்கள் (ஜூரிகள்) மட்டுமே நின்று கொண்டிருந்தோம். பரிசுக்குரிய இயக்குநரை மேடைக்கு அழைத்து பரிசளித்தோம். நகர மேயர்கூட வந்திருந்தார். ஆனால் அவரும் மேடைக்கு அழைக்கப்பட வில்லை. நடுவர்களுக்கு அங்கே தரப் பட்ட மதிப்பும் மரியாதையும் எனக்கு வியப்பளித்தன.

“லெப்ஸிக் விழா சர்வதேச விழா. அடேயப்பா! எப்படியெல்லாம் டாக்குமெண்ட்ரி படங்களை எடுக் கிறார்கள்.

“கல்கத்தா இயக்குநர் ஒருவரின் ‘அஜித்’ என்ற செய்திப்படமும் போட்டியில் கலந்து கொண்டது. இந்தியா சார்பில் இந்த ஒரு படம்தான்

குழந்தைத் தொழிலாளர்கள் பற்றிய அருமையான படம். இரண்டாம் பரிசு கிடைத்தது. இந்தியா, ஜெர்மனி, போலந்து, பிரான்ஸ் சார்பாக ஒவ்வொரு நடுவர். மொத்தம் நான்கு பேர். இந்தியாவுக்கு நான்.

"படத்தை மதிப்பீடு செய்தது எல்லாம் காட்புஸ் நகர விழாவில் செய்தது மாதிரிதான். நல்ல படங்கள் பார்த்தது தவிர வேறு சில அனுபவங்களும் எனக்குக் கிடைத்தன.

● ஃபிராங்க்ஃபர்ட் உள்ளூர் விமான நிலையத்தில் காபி, டீ, பிஸ்கெட், குளிர்பானங்கள், பழங்கள் என்று அடுக்கி வைத்திருக்கிறார்கள். பயணிகள், எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு எடுத்து இலவசமாகச் சாப்பிடலாம்! பழங்களை எடுத்து பையில் போட்டுக் கொள்ளலாம். ஆனால் விமானத்தில் எதுவும் சாப்பிடக் கொடுப்பதில்லை.

● காலை 4.50க்கு டாக்ஸி வேண்டும் என்று கேட்டிருந்தேன். 4.49க்கு வந்து 'ஹலோ' என்றார் டிரைவர். போய் இறங்கிய பின் ஐந்து டி.யூஷ் டிப்ஸ் தந்தேன். 'நோ... தேங்க்ஸ்' என்று கைகுலுக்கி விட்டுப் போய்விட்டார்!

● காட்புஸ்ஸில் பாகிஸ்தானியர் ஒருவர் ஹோட்டல் நடத்துகிறார். இந்திய உணவு கிடைக்கிறது. பாஸ்மதி அரிசி, சப்பாத்தி, தால், சிக்கன், மட்டன் எல்லாம் நம் ருசிக்கு ஏற்ப. குடிக்க தண்ணீர் வைப்பதில்லை. ஒயின் அல்லது பீர்தான்! மினரல் வாட்டர் என்று சோடாவுக்குப் பெயர். பணம் கொடுத்தால்தான் அந்த வாட்டர் கிடைக்கும். எனக்கு மட்டும் தினமும் ஃப்ரீயாகக் கொடுத்தார். அந்த பாகிஸ்தானிய நண்பர் ஒரு தீவிர சபதம் மேற்கொண்டிருக்கிறார்: "எந்த நாளும் என் ஹோட்டலில் பன்றி இறைச்சியும், மாட்டிறைச்சியும் சமைக்க மாட்டேன்."

● லெய்ப்ஸிக்கில் ஒரு வேடிக்கை. பகலுணவின் விலை 10 மார்க்குகள். இரவில் 15 மார்க்குகள். மெனு என்னவோ இரண்டுக்கும் ஒன்றுதான். ஏன் இந்த வித்தியாசம் என்று கேட்டதற்குக் கிடைத்த பதில்: "அது லஞ்ச். இது டின்னர்!"

● என்னைப் பார்த்த அனைவரும் தவறாமல் கேட்ட ஒரு கேள்வி. அது என்ன நெற்றியில் மூன்று கலரில் பொட்டுகள்? (விபூதி, சந்தனம், குங்குமம்) விபூதி சிவா, குங்குமம் அம்மன், சந்தனம் சிவனின் மகன் ஐயப்பன் என்று விளக்கினேன். ஒரு தியேட்டரில் என்னைப் பார்த்ததும் ஒரு பள்ளி மாணவன் உரக்க ஏதோ காமெண்ட் அடித்தான், ஜெர்மன் மொழியில். உடனே எல்லோரும் சிரித்தார்கள். 'பையன் என்ன சொன்னான்' என்று நண்பரைக் கேட்டேன். 'உங்களைக் காட்டி 'இண்டியன் எக்ஸார்ஸிஸ்ட்' என்கிறான்' என்றார். நானும் சேர்ந்து சிரித்தேன். (நான் நல்ல கறுப்பு)

— ராணிமைந்தன்

படம்: யோகா

"சார், எனக்கு முதலில் கற்றுக் கொடுத்தது, வரும் அனைவரையும் இன் முகம் காட்டி வரவேற்க வேண்டும் என்பதுதான். எந்தக் காரணம் கொண்டும் எரிச்சல் அடையவே கூடாது. அடுத்ததாக, சார் மிகவும் குறியாக இருப்பது, சூழ்நிலை எப்படி இருந்தாலும் நிகழ்ச்சிகள் ஒப்புக் கொண்டபடி நடக்க வேண்டும் என்பதில்தான்.

"ஒருமுறை கண்ணனூரில் ஒரு கச்சேரி. விரலில் நகச்சுத்தி. வயலின் எப்படி வாசிக்க முடியும்? ஆனால், ஸார் அந்த வலியையும் பொறுத்துக் கொண்டு கச்சேரியை நடத்தி முடித்தார்!

"கல்யாணக் கச்சேரி என்றால் கூடுதல் கவனமாக இருப்பார். வேறெதாவது நிகழ்ச்சிகள் என்றால் கூட மற்றொரு நாள் வைத்துக் கொள்ளலாம்; ஆனால் நமக்காக இன்னொரு நாள் திருமண நிகழ்ச்சியை வைத்துக் கொள்ள முடியுமா? என்று கேட்பார்!"

— குன்னக்குடி பற்றி இப்படி நமக்குச் சொன்னவர், குன்னக்குடியின் உதவியாளராக மட்டுமல்ல; குடும்பத்தில் ஒருவராகவே இருக்கும் பழநியாண்டி என்கிற பழநி. கடந்த பதினேழு ஆண்டுகளாகத்தான் குன்னக்குடிக்கு உதவியாளர்.

நாகர்கோயிலை அடுத்த வடசேரியைச் சேர்ந்த பழநி, பி.ஏ. முடித்துவிட்டு, வேலை தேடி சென்னைக்கு வந்தவர். போலீஸ் இன்ஸ்பெக்டராக விருப்பம். ஆனால் ஒன்றும் கிடைப்பதாகக் காணோம். உறவினர் ஒருவர் குன்னக்குடிக்கு மிகவும் வேண்டியவர். வேலைக்கான சிபாரிசு வேண்டி

குன்னக்குடிக்குப் பக்கத்திலிருக்கும் பழநி!





• பழநி

சென்றவரை, குன்னக்குடி தன்னுடனேயே உதவியாளராக வைத்துக் கொண்டு விட்டாராம்!

"சார், குடும்பம் ஆசாரமான குடும்பம். மாமி கொஞ்சம் கூடுதலாகவே ஆசாரம் என்று சொல்லலாம். இருந்தும் எங்களை (உதவியாளர்கள், பக்கவாத்யக்காரர்கள்) எந்தவித பாகுபாடும் இல்லாமல் நடத்துவார்கள். வீட்டிற்குள் சமையல் அறை வரை இயல்பாகச் சென்று வருவோம் நாங்கள். சார் டூர் போகும் போது, அவருடைய அறையிலேயே என்னை தங்கிக் கொள்ளச் சொல்வார்! சாப்பிடும்போது ஒன்றாகவே சாப்பிடுவோம்.

"முன்பெல்லாம் அதிகமாக காரில்தான் பயணம் இருக்கும். இப்போது அதைக் குறைத்துக் கொண்டு விட்டார். அவசியமான சமயங்களில் எந்தவித பந்தாவும் இல்லாமல், என் வீட்டுக்கே வந்து கூட என்னை அழைத்துச் சென்றிருக்கிறார்" என்று சொன்னார் பழநி.

குன்னக்குடி திருவையாறு தியாகப் பிரம்ம மஹோத்ஸவ கமிட்டியின் செயலாளராக இருப்பதால், வருடா வருடம் நடைபெறும் விழாவின்போது பழநி ரொம்ப பிஸியாகிவிடுவார். ஐந்து நாட்கள், காலையிலிருந்து மாலை வரை நடக்கும் கச்சேரிகளுக்கு வித்வான்களை 'ஃபிக்ஸ்' செய்வது, அவர்கள் தங்குவதற்கு, போக்குவரத்து என்று ஏகப்பட்ட ஏற்பாடுகள். பழநி இதற்குப் பலமுறை திருவையாறு போய் வர வேண்டியிருக்கும்.

"கன்னியாகுமரி மாவட்டத்தில் திருப்பதிசாரம் என்ற ஊர் இருக்கிறது. அந்த ஊரில் உள்ள அருணாசலம் பிள்ளைதான் முதலில் எனக்கு ஸோலோ கச்சேரி கொடுத்தார். அவரது உறவினர்தான் பழநி. சிபாரிசு வேண்டி என்னிடம் வந்தவர், சின்னச் சின்ன உதவிகள் செய்து மிகவும் கவர்ந்து விட்டார். ரொம்பவும் புத்திசாலி. அது மட்டுமல்லாமல், உண்மை, நேர்மை, திறமை இருக்கு. எனது நம்பிக்கைக்கு உரித்தானவர்" என்று வாய் நிறைய பழநியைப் புகழ்ந்தார் குன்னக்குடி.

சந்திப்பு : ப்ரியன்

படம் : பேஜர் கே. மூர்த்தி

எதிர் நீச்சல் :

“இந்தச் சினிமாவுக்குப் போய்ப் பார்த்துட்டு வா.” என்று தரை டிக்கெட்டுக்கான காசும் தந்து இரண்டாவது ஆட்டத்துக்கு அனுப்பி வைக்கிறார் அப்பா.

மகனுக்கு ஒன்றும் புரியவில்லை. எதற்காக வலுவில் அனுப்புகிறார் என்று குழப்பம். இருந்தாலும் படம் பார்த்துவிட்டு வருகிறான். வாசலிலேயே பீடியைப் புகைத்துக் கொண்டு நள்ளிரவைத் தாண்டிய அந்த நேரத்தில் மகனுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார் அப்பா.

பார்த்த படம் ‘மூன்று தெய்வம்’. அப்பா கதையைக் கேட்கிறார். கள்ளச் சாவி போட்டுத் திருடுகிற சிவாஜி, கொலைக் குற்றத்துக்காக முத்துராமன், பொய்க் கையெழுத்து மோசடிக்காக நாகேஷ்.... என்று ஜெயிலுக்குப் போகிற கதையைச் சொல்கிறான் மகன். மூன்றாவது குற்றவாளியைப் பற்றிச் சொல்கிற போதுதான் உண்மை என்ன என்று புரிகிறது அந்தச் சிறுவனுக்கு. அப்போதுதான் அப்பா கையில் இருக்கும் பிரம்பும் கண்ணில் படுகிறது. அப்புறம் என்ன? ஒரே விளாரல். உடம்பு புண்ணாகிற அளவு....

“பொய்க் கையெழுத்து போட்டா இதுதான் கதி. நல்லாத் தெரிஞ்சுக்க” என்று அடித்து ஓய்ந்த அந்தத் தந்தை அதிகம் படிக்காதவர்தான். நெடுஞ்சாலைத் துறையில் கடைநிலை ஊழியராகப் பணியாற்றியவர். மகன் பெரிதாகப் படித்துவிட்டு வங்கியில் பெரிய உத்தியோகம் பார்க்க வேண்டும் என்கிற ஆசையில் சிரமப்பட்டு முழுச் சம்பளமும் கட்டிப் பள்ளியில் விளையாடும் ‘ஹாக்கி’ வீரராகப் பெயர் வாங்கிப் பள்ளிக்கு ‘கௌரவம்’ சேர்த்தது. கால்பந்து விளையாட்டிலும் திறமை உண்டு. இப்படி விளையாட்டுத் திறமை இருந்து விட்டால், படிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டால் கூட ஆசிரியர்கள் விட மாட்டார்கள். அவர்களின் தேவையெல்லாம் பள்ளிக்குக் கிடைக்கும் பெயர்தான்.

ஒரு வழியாய் பி.காம் தேர்வு எழுதியாகி விட்டது. ‘அருப்புக்கோட்டை ஹாக்கி அசோசியேஷன்’ சார்பாக வெளியூரில் விளையாட

‘பட்டாம்பூச்சி’ கற்றுத்தந்த பாடம்!

• கோபால்



சேர்த்துக் கனவு கண்டு கொண்டிருப்பவர்.

மகன் செய்த குற்றம் என்ன? ‘ராங்க்’ எதுவும் இல்லாத ‘முன்னேற்ற’ அட்டையை அப்பாவிடம் காட்டுவானேன், என்று அவரே அப்பாவின் கையெழுத்தைப் போட்டுக் கொடுத்த குற்றம்தான்.

“அடிபட்டு ஒரு பாடம் கற்றேன்” என்று சொல்கிறவர் யார் தெரியுமா? பரபரப்பூட்டும் நக்கீரன் பத்திரிகையின் ஆசிரியரும் வெளியீட்டாளருமான கோபால்தான்! இந்த ராஜகோபாலின் தந்தை இராமனாதன், அருப்புக்கோட்டையில் கடைசி வரை கடை நிலை ஊழியராகவே இருந்து இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஓய்வு பெற்றார்.

கோபாலுக்குப் படிப்பு வராததற்கு இரண்டு காரணங்கள். ஒன்று ஓவியத்தில் நாட்டம். இன்னொன்று மாநில அளவில் என்று புறப்பட்டார் கோபால்.

“காரணம் தேர்வு முடிவு வரும்போது அப்பா கண்ணில் பட வேண்டாமே என்பது தான். ஆனால் ஆச்சரியப்படும் விதமாகத் தேர்ச்சி பெற்றுவிட்டேன்” என்கிறார் கோபால்.

பி.காம் ரிசல்ட் வந்த மறு நாளே உள்ளூர் அரிசி மண்டி ஒன்றில் தொண்ணூறு ரூபாய் சம்பளத்தில் வேலைக்குப் போனார். அரிசி மண்டி, அறவை ஆலை, சில்லறை வியாபாரம் என்று நடைபெற்ற

‘நக்கீரன்’ கோபால்

கடை அது. தினமும் காலை நாலரை மணிக்கே வேலைக்கு வந்தால் இரவு பதினோரு மணிக்குத்தான் வீட்டுக்குப் போகலாம்.

முதல் நாள் வேலைக்குப் போய் வந்த உடனேயே அப்பாவுக்குக் கடுமையான கோபம், ஏமாற்றம் எல்லாம்தான். "இப்படி ஏன்டா வேலைக்குப் போவனும்?" என்று கேட்ட அவருக்குக் கிடைத்த பதில் "சும்மா வெட்டிப் ... ஊது போக்காம இதிலேயாச்சும் சம்பாரிக்கிறேனே" என்பதுதான். கோபாலுக்குப் பிரமாதமான கனவுகள், எதிர்பார்ப்புக்கள் எதுவும் இருக்கவில்லை. இப்படியே அரிசி மண்டி ஆலையில் தொழில் கற்றுக் கொண்டு சின்ன வியாபாரி ஆனால் போதும் என்றே எண்ணினார்.

சென்னையிலிருந்து கடைக்கு வந்து போகும் ஒருவர், பி.காம் படிப்பின் மகத்துவம் உணர்ந்தவராக, "சென்னைக்குப் புறப்பட்டு வா தம்பி.



பாங்க்லே வேலை வாங்கிடலாம்" என்று ஆசை காட்டியிருந்தும் அதை ஒரு பொருட்டாய்க் கருதவில்லை. ஆனாலும் அரிசி மண்டியில் ஏற்பட்ட ஒரு சின்ன கசப்பு கோபாலை சென்னைக்கு அனுப்பி வைத்தது. மலேசிய நண்பர் ஒருவரை வழியனுப்புவதற்காக என்று புறப்பட்டு அப்படியே சென்னையில் தங்கியாகிவிட்டது.

பாங்கில் வேலை வாங்கலாம் என்று சொன்ன நண்பரைப் பிடித்துக் கொண்டார் கோபால். அவரும் வங்கி வேலை என்று முயலா விட்டாலும் தமக்குத் தெரிந்த பல சிறிய தொழிற்கூடங்களுக்கு அழைத்துப் போனார். பிளாஸ்டிக் பொருள்கள் செய்யுமிடம், லேத் பட்டறை என்று எதிலும் வேலை கிட்டவில்லை. ஆனாலும் முயற்சியைக் கைவிடாத விக்கிரமன் மாதிரி முன்பு நண்பர் அழைத்துப் போன தொழிற் கூடங்களுக்கு மறுபடியும் படையெடுத்ததில், பலன் கிடைத்தது.

'பட்டர்ஃப்ளை' நிறுவனத்தின் கொருக்குப்பேட்டை கிளையில் 'அக்கவுண்டண்ட்' என்று வேலை போட்டு விட்டு, ஸ்டீல் தம்ளர்கள் செய்யும் பகுதியில் துடைப்பது, எண்ணெய் பூசுவது என்று வேலை செய்யச் சொன்னபோது வெறுத்துப் போனது. பி.காம். பட்டத்துக்கும் வேலைக்கும் சம்பந்தமே இல்லை என்பது அப்போது நன்றாகப் புரிந்தது.

"கூடவே ஒருவர் வெறும் பனியன் டிராயரோடு எண்ணெய் வழிய வேலை செய்து கொண்டிருந்தார். சாயங்காலம் அதே மனிதர் உடையை மாற்றிக் கொண்டு 'பென்ஸ்' காரில் ஏறி வெளியே போனார். எனக்கு அது முதல் நாளே கிடைத்த அதிர்ச்சி. அவர் அந்த நிறுவனத்தின் முதலாளிகளில் ஒருவர் என்பதும், மற்ற நான்கைந்து முதலாளிகளும் கூட அப்படித்தான் தொழிற்கூடத்தில் வித்தியாசமில்லாமல் உழைக்கிறவர்கள் என்பதும் தெரிந்தபோது எனக்கு வியப்பை விட, என் மீதே அதிக நம்பிக்கையும் ஏற்பட்டது" என்று அந்தப் பழைய நாட்களை அசை போடுகிறார் கோபால்.

உழைப்புக்கு மரியாதை, வயிறார உணவு என்று கிடைத்த அந்த நிறுவனத்தில் மேலதிகாரிகளின் நம்பிக்கைக்கும் பாத்திரமாகி, ஓராண்டிலேயே ஏரியா மானேஜர் அளவுக்கு உயரவும் முடிந்தது.

அப்புறம் சொந்தத் தொழில் ஆசையில் ரப்பர் உதிரிகள் தயாரிப்பில் ஒரு நண்பருடன் கூட்டாய் இறங்கியதில் கை சுட்டது. கூடவே வெப்பம் தாங்காமல் மூலநோய், குடல் அழற்சி எல்லாம் வந்து விட்டன. உடனே அருப்புக் கோட்டை திரும்பி, அறுவைச் சிகிச்சை செய்து கொண்டார். கண்டிப்பாக மூன்று மாதம் ஓய்வில் இருக்க வேண்டியதாயிற்று. சும்மா எப்படி இருப்பது? பழைய ஓவியக்கலை நினைவு. காகி

தங்களில் படங்கள். பத்திரிகைக்குப் படம் போடேன் என்று அக்கம் பக்கத்தாரின் ஆசைத் தூண்டல்.

படுக்கையிலிருந்தவாறே வரைந்த பத்துப் பதினைந்து படங்களோடு சென்னை வந்தார் கோபால். பழைய நண்பர் ஒருவருடன் தங்கி, ஒரு பத்திரிகை அலுவலகத்தில் படியேறினால் அங்கு சரியான வரவேற்பில்லை. அப்போது 'தாய்' வார இதழில் வேலை பார்த்த ஓவியர்கள் விலகியிருந்த நேரம். வரைந்த படங்களைப் பார்த்துவிட்டு 'நீதான் ஆர்ட்டிஸ்ட்' என்று உடனே வேலை தந்தார் வலம்புரி ஜான். பத்திரிகைக்கான லே-அவுட் செய்வதைக் கற்றுக் கொண்டார்.

கொஞ்ச காலம்தான் அது. பிறகு நண்பர் சியாம் என்பவரோடு சேர்ந்து, திரைச் சுவை என்கிற இதழில் இருபத்து நாலு மணி நேரமும் ஓய்வில்லாமல் வேலை. லே-அவுட் அத்துபடியாகி, மாதம் இரண்டாயிரம் வரை சம்பாதிக்க முடிந்தது.

சியாம் பின்னால் தராசு தொடங்கிய போது, இரண்டாவது இதழ் முதல், அட்டை லே-அவுட் கோபால் கையெழுத்தோடுதான் வந்தது. அட்டையே கதை சொல்லும். பிறகு அங்கிருந்தும் விலகினார். இனிமேல் இந்தப் பத்திரிகை வேலையே வேண்டாம் என்று மறுபடியும் அருப்புக்கோட்டை திரும்பினார் கோபால்.

அப்போது ஜானகி அம்மையார் முதல்வராகி இருந்தார்கள். தராசு இதழும் பரபரப்பாக விற்பனை ஆகிக் கொண்டிருந்தது. "இப்போது பார்த்து வேலையை விட்டு விட்டாயே. எதிலும் காலூன்றாமல் இப்படி இருக்கலாமா?" என்று அப்பா கோபப்பட, மறுபடியும் சென்னை வந்து, உடன் பணியாற்றிய நண்பர்களின் வற்புறுத்தலில் சொந்தமாகவே ஒரு பத்திரிகை தொடங்க முடிவு செய்தார் கோபால். தராசில் கிடைத்த இறுதித் தொகை நாலாயிரம் தான் மூலதனம். ஆனால் அங்கு கிடைத்த அனுபவம் மிகப் பெரிய லாபமாயிற்றே.

நாலு வாரத்துக்குத் தேவையான காகிதம் தர ஒருவர் இசைந்தார். அச்சிட்டுத்தர ஒருவர் முன் வந்தார். ஆனால் எல்லோரும் முக்கியமாகக் கேட்டது பத்திரிகையின் பெயர்தான். க.சுப்பு நடத்தி விடப்பட்ட பெயர் 'நக்கீரன்'. ஒரு இடை நண்பர் அறிமுகத்தில் சுப்பு பெருந்தன்மையோடு அந்தப் பெயரை இலவசமாகவே கொடுத்தார்.

பெரிய ஜாம்பவான்கள் என்று யாரும் இல்லாமல் இளைஞர்களாகவே சேர்ந்து நக்கீரனை உருவாக்கினார்கள். முதலில் முப்பது இதழ்கள் வரை விற்பனையாகாத பிரதிகள் திரும்பி வந்தது உண்டு. அவற்றை இந்த இளைஞர்கள் கண்ணில் படாமல் வேறு நண்பரின் கார் ஷெட்டில் சேர்த்து வைத்தார் கோபால்.

திரும்பி வரும் பிரதிகள் உற்சாகத்தைக் கெடுத்து விடும் என்பதால் இப்படி ஏற்பாடு. அப்புறமும் அவற்றை பழைய விலைக்குப் போடாமல், 'இந்தப் பத்திரிகைக்கு ஆதரவு தாருங்கள்' என்கிற வேண்டுகோள் அறிக்கையை ஒட்டித் தமிழ் நாடு முழுவதும் முக்கியமான நகரங்களில் தியேட்டர்கள், ரெயில், பஸ் நிலையங்கள், பொதுக் கூட்டங்கள், இன்னும் வீடு வீடாகப் போய்க் கூட விநியோகம் செய்தார்கள். இது நல்ல பலன் தந்தது. நக்கீரன் பிரபலமானது இப்படித்தான்!

நக்கீரனில் வெளியாகும் செய்திகள் பற்றி அனைவருக்கும் தெரியுமே! அதனால், 'இந்த அச்சகத்தில் நக்கீரன் இதழ் அச்சிடப்பட மாட்டாது' என்று கூடச் சில அச்சகங்களின் விளம்பரம் எழுதிப் போட்டார்கள். அந்த அளவு அடக்குமுறை. ஒரு சமயம், கோபாலின் தந்தையை அருப்புக்கோட்டையிலிருந்து ஒரு 'கும்பல்' வண்டியில் ஏற்றி மகன் கூட்டி வரச் சொன்னதாகப் பொய் சொல்லி அழைத்து வந்தார்கள். மதுரை வரும் வழியில் காரியாபட்டியில் டீ குடிக்க வண்டியை நிறுத்தியபோது "பையனைக் கண்டிச்சுவை. கன்னா பின்னான்னு எழுதறான்" என்று மிரட்டினார்கள். "எனக்கு அவன் பிள்ளையே இல்லை. அவன் எப்பவோ எங்களை வுட்டுட்டு ஓடினவன். நான் சொன்னால் அவன் கேட்கவும் மாட்டான்" என்று சமாளித்த அப்பாவை, அப்படியே இறக்கிவிட்டுப் போயிற்று அந்த ரவுடிக் கும்பல்.

இதுபோல், எத்தனையோ மிரட்டல்கள்! எதற்கும் சளைக்காமல் துணிவோடு எதிர்கொண்டதுதான் கோபால் — நண்பர்களின் மூலதனம். தொழிலாளி - முதலாளி என்கிற வேறுபாடின்றி உழைப்பது என்று பட்டர்பிளை நிறுவனத்தில் கற்ற பாடத்தைக் கடைப்பிடிக்கிறார் கோபால். அவரது வெற்றியின் அஸ்திவாரமும் இதுதான்.

— சுப்ர. பாலன்

"நீங்க எந்த மோசடியும் பண்ணலையே! அப்புறம் எதற்கு முன்ஜாமீன் கேட்கிறீங்க?"

"முன் ஜாமீன் மனு கொடுத்தால்தான் என்னை கட்சிக்காரங்க தலைவரா ஏத்துப்பாங்களாம்!"

— நாஞ்சில் க. நாகராஜன்



உங்கள் வளமான எதிர்காலத்திற்கு
எங்கள் விசேஷ சேமிப்புத் திட்டம்

சில்வர் டெபாசிட் திட்டம்



டெபாசிட்டுகள் வரவேற்கப் படுகின்றன

இன்றே எங்களிடம் ஒரு டெபாஸிட்டைத் துவக்கி,
வளமான மகிழ்ச்சியான வருங்காலத்தை எதிர்நோக்குவீர்

EXPRESS
FINANCIAL EXCHANGE LIMITED

பாங்க் ஆப் அமெரிக்காவின் சார்பு நிறுவனம்

- வாகனங்களுக்கான கடன்கள்
- பங்குகள் மீதான கடன்கள்

அங்கீகரிக்கப்பட்ட டீலர் **அமெரிக்கன் எக்ஸ்பிரஸ்** டிராவலர்ஸ் செக்குகள்

பதிவு அலுவலகம்: நெ. 9, அட்லேப் டவர், தெற்கு போக் சாலை, சென்னை-600 017.
போன்: 4340325, 4340329, 4341403, ஃபாக்ஸ்: 4341518.

• சென்னை • ஹைதராபாத் • விஜயவாடா • விசாகப்பட்டினம் • பெங்களூர் . • திருச்சி
• கும்பகோணம் • கோயம்புத்தூர் • பாண்டிச்சேரி

1996 மார்ச் 4-ந் தேதி எகனாமிக் டைம்ஸில் வெளியான எமது சட்ட பூர்வ விளம்பரத்தைத் தொடர்ந்து இந்த விளம்பரம் வெளியாகிறது.

Helios & Matheson

இப்போதெல்லாம் தஞ்சாவூர் புதுப் பேருந்து நிலையத்தில் பஸ் ஏறினால் திருச்சிராப்பள்ளிக்கு வந்து சேர ஒன்ணேகால் மணி நேரம்தான்.

அலுப்புத் தெரியாது.

ஆனால் சிவராமனின் இன்றைய பயணம் சுவாரசியமாகக் காரணம் அதுவல்ல.

அந்தக் கல்லூரிப் பெண்.

ஜோல்னா பையுடன் அவரது அருகில் 'ஸ்டாண்டிங்' வந்தாள், அவள்.

சரிதார் அணிந்து, ஊஞ்சலாடும் காதுத்தோடு மின்ன பளிச்சென்றிருந்தது முகம்.

ஆனால் அவரை உண்மையில் அசத்தியது அவளது லொட... லொட வாய்தான்.

தோளுக்குப் பின்னால் நின்ற உயரமான இளைஞனுடன் பஸ் ஏறியதிலிருந்து விடாமல் பேசிக் கொண்டே வந்தாள், அவள்.

கல்லூரி லூட்டி, பிராக்டிகல் கிளாஸ், பிரின்சிபலின் கண்டிப்பு...

'ஆங்... அப்படியா... ஓஹோ...'

அந்த இளைஞனும் அவன்



பேசியதற்கெல்லாம் ஒற்றை வார்த்தைகளில் தலையாட்டிக் கொண்டே வந்தான்.

பஸ், திருவரம்பூரில் நின்றது.

சிவராமனின் பக்கத்திலிருந்த இரண்டு பிரயாணிகளும் இறங்கினர்.

உடனே அந்தப் பெண்ணும் பையனும் அந்தக் காலி இடத்தில் உட்கார்ந்து கொண்டார்கள்.

இப்போது அவர்கள் பேசிக் கொண்டு வர மிகவும் வசதியாகி விட்டது.

சிவராமன் பெருமூச்சு விட்டார்.

பம்பாய், கோவா போன்ற ஊர்களில்தான் பஸ்களில் இப்படிப் பாகுபாடின்றி பயணம் செய்வார்கள்.

அந்த நாகரீகம் இப்போது இங்கேயும் வந்து விட்டதா என்ன... அவருக்கு அந்தக் காட்சி உறுத்திக் கொண்டே இருந்தது.

மத்திய பேருந்து நிலையம்.

இறங்கி, அவள் ஒரு திக்கிலும் இவன் ஒரு பக்கமுமாக 'குட் பை' சொல்லிப் பிரிந்தார்கள்.

வேறு வேறு உலகம்

'கலி முற்றிவிட்டதடா, கண்ணா....' என்று ஓலமிட்டது அவரது உள்ளம்.

மகன் ஜெயகோபிக்குப் பெண் தேடும் படலத்தில் இறங்கி இருந்தார், அவர்.

இப்போது அதற்காகத்தான் பழைய நண்பர் நாகராஜனைப் பார்க்கப் போகிறார்.

மின்சார வாரியம் முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு வில்லியம்ஸ் ரோடில் இயங்கிக் கொண்டிருந்தபோது அவருடன் வேலை பார்த்தவர் நாகராஜன். பதினொன்றாம் வகுப்பு முடிந்த கையோடு இருவரும் வேலைக்கு வந்தவர்கள். நல்ல பழக்கம்.

எழுபதுகளில் சிஸ்டம், மாவட்டவாரியாகப் பிரிந்ததும் சிவராமன் தஞ்சாவூருக்கு மாற்றலாகி... தொடர்பு துண்டித்து விட்டது.

சென்ற வாரம் சென்னையில் நிகழ்ந்த அலுவலகக் கூட்டம் ஒன்றில் அவர்கள் சந்தித்துக் கொண்டார்கள்.

"நாகராஜன் தானே நீங்கள்? என்னைத் தெரிகிறதா? நான்தான் சிவராமன்."

"அடடே... பார்த்து எத்தனை வருஷமாச்சு."

இருவரும் கட்டித் தழுவிக் கொள்ள, கால் நூற்றாண்டு இடைவெளி கால் நிமிஷத்தில் ஒன்றாய் இணைந்தது.

ஆபீஸ் அக்கப்போர்களைவிட குடும்ப விஷயமே அவர்களுக்குப் பிரதானமாக இருந்தது.

"எனக்கு ஒரே பெண்தான். இந்த வருஷம் இன்ஜினியரிங் முடிக்கிறாள்" என்றார் நாகராஜன்.

"எனக்கும் ஒரே பையன்தான். எம்.சி.ஏ. முடிச்சுட்டு காலேஜிலே லெக்சரராக இருக்கிறான்" என்றார், சிவராமன்.

"கல்யாணம்?"

"இனிமேல்தான். பெண் பார்த்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள்...."

"நானும் ஒரு நல்ல பையனுக்காகத்தான் அலைஞ்சுட்டிருக்கிறேன்."

இருவரும் அர்த்தத்துடன் சிரித்துக் கொண்டார்கள்.

"ஊருக்குப் போனதும் அவசியம் ஒருநாள் திருச்சிக்கு வாருங்கள்" என்று அழுத்தமாய் அவர் அழைப்பு விடுக்க, இவர் "அவசியம் வருகிறேன்" என்று தலையசைக்க --

இன்று -- விடுமுறையில் கிளம்பி விட்டார், சிவராமன்.

கடிதம் ஏதும் எழுதவில்லை.

திடுதிப்பாகப் போனால்தான் எல்லாவற்றையும் இயல்பாகப் பார்க்க முடியும் என்பது அவரது எண்ணம்.

வெறும் கையுடன் போனால் நன்றாய் இராது என்று கொஞ்சம் பழம் வாங்கிக் கொண்டார்.

பீமநகரில் இருந்தது, நாகராஜனின் வீடு.

ஹீபர் சாலையில் ஒரு டயர் கம்பெனியின் பெரிய போர்டுக்கடியில் சின்ன வாசலாகத்தான் இருந்தது.

ஆனால் உள்ளே நுழைந்த பிறகுதான் ஒரு கிரவுண்டில் கட்டப்பெற்ற மிகப் பெரிய வீடு என்பது தெரிந்தது.

"வாங்க சிவராம்... வாங்க... வாங்க... என்ன இப்படித் திடீரென்று? ஒரு கடிதம் போடக் கூடாதோ?" மகிழ்ச்சியும் ஆச்சரியமுமாக வரவேற்றார் நாகராஜன்.

"இன்றைக்கு லீவு இல்லையா. ஏதோ தோன்றியது. புறப்பட்டுட்டேன்."

"சந்தோஷம். மீனா... நான் சொன்னேனே... தஞ்சாவூர் சிவராமன். அவர் வந்திருக்கிறார்."

நாகராஜனின் மனைவி வந்து உபசரித்தாள்.

"வாங்க... வணக்கம்."

இரண்டே நிமிஷத்தில் பலகாரம், காப்பி

தமிழினியன்



"சே! இனிமே டி.வியே பார்க்கக் கூடாது."

"ஏன்?"

"கனவுக்கு இடையிலே நீங்கள் பார்ப்பது கண் மணியின் கனவு மாலைன்னு வருது."

— சுதந்திரச்செல்வன்

யாவும் வந்தன.

"எங்கே... உங்கள் மகள்?" சிவராமனின் கண்கள் அலை பாய்ந்தன.

"அவளும் இப்பத்தான் காலேஜிலே இருந்து வந்தாள். லீவுன்னு கூட இல்லாமல் கிளாஸ் வச்சிருக்காங்க. நந்தினி... நந்தினி..."

நந்தினி வந்தாள்.

நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டது சிவராமனுக்கு.

"நீ... இந்த... நீயா... இ. இந்தப் பெண்ணா!"

"என்ன.... சிவராம்... என் மகளை ஏற்கெனவே உங்களுக்குத் தெரியுமா?"

"ஓ... இன்றைக்குத்தான்... ஒரு மணி நேரத்துக்கு முன்புதான் தெரியும். நானும் உங்கள் பெண்ணும்' ஒரே பஸ்ஸில்... வந்தோம்."

"அ....ப்....ப...டியா." அதிர்ச்சியும் வியப்புமானார், நாகராஜன்.

சிவராமனின் முகத்தில் பரவிய சந்தேகச் சாயல் அவரை மேலும் கலவரப்படுத்த —

"யார் அம்மா அந்தப் பையன்?" என்று விசாரணையைத் துவக்கினார், சிவராமன்.

நந்தினி தயங்கவில்லை.

"என் கிளாஸ் மேட், அங்கிள். பெயர் கிஷோர் குமார்."

"ஐ... ஸீ...."

"நானும் உங்களைக் கவனித்தேன். அங்கிள். பஸ்ஸிலே யாரோ ஒரு பிரயாணின்னு நினைச்சுட்டு இருந்தேன்."

"நான் உன் அப்பாவோட சிநேகிதர்னு தெரிந்தால் என்னம்மா பண்ணியிருப்பே?" இடக்கான கேள்வி.

"உங்களோடவும் பேசிட்டு வந்திருப்பேன் அங்கிள்." மெலிதாகச் சிரித்தாள், அவள்.

"அவ்வளவுதானா?"

நந்தினி வெகு இயல்பாகச் சிரித்தாள்.

சிவராமனின் முகம் அசாதாரணமாய் இறுகியது.

"அப்போ... நான் வர்றேன் நாகராஜ்" எழுந்தார், சிவராமன்.

"என்னவோ முக்கியமான விஷயம் பேசறதாக...."

"பேசலாம் என்றுதான் வந்தேன். ஆனால்... நான் வர்றேன்....."

பதில் எதிர்பாராமல் விருட்டென்று வெளியேறினார், சிவராமன்.

'நல்ல வேளை, என் மகன் தப்பித்தான்' என்று நினைத்துக் கொண்டார் அவர்.

'ஜெயகோபிக்கு இவளா? அவன் எந்தப் பெண்ணையாவது ஏறெடுத்துப் பார்ப்பானா? அநாவசியமாக ஒரு வார்த்தை பேசுவானா? நல்ல வேளை....'

"திருச்சிக்குப் போன விஷயத்தைப் பற்றி ஒண்ணுமே சொல்லவில்லையே?"

நவராத்திரி கொலுவுக்கான வண்ணச் சர விளக்கைப் பொருத்திய ஈஸ்வரி கணவனை நோக்கினாள்.

"அதொண்ணும் சரிப்பட்டு வராது, ஈஸ்வரி." முகத்தைத் திருப்பிக் கொண்டார், சிவராமன்.

"ஏன்?"

பஸ்ஸில் கண்டதையும் கேட்டதையும் அவர் விவரித்ததை அவர் மகனும் கவனித்தபடியே வந்தான். 'களுக்'கென்று சிரித்தும் விட்டான்.

"எதுக்கு இப்பச் சிரிக்கிறாய்?"

"இப்படி எல்லாம் சந்தேகப்பட்டால் எங்காவது ஒரு தீவில் கடல் கன்னியோ நாக தேவதையோதான் உங்களுக்கு மருமகளா வருவாள் அப்பா!"

"அதுக்காக... ஒரு வாலிபப் பையனுடன் சகவாசம் வைத்திருக்கிற பெண்ணை உனக்கே கட்டி வைக்கச் சொல்கிறாயா?" கோபமாய்ப் பார்த்தார், சிவராமன்.

"இது சகவாசம் இல்லைப்பா. யதார்த்தம். சகவாசம் என்றால் ஓட்டல்... பார்க்... சினிமா... இப்படி திட்டம் போட்டு வரச் சொல்லி பேசுவதுதான் சகவாசம். அதைத்தான் தவிர்க்கணும்.. தப்புன்னு சொல்லணும்."

"அந்தப் பொண்ணு செஞ்சது சரிங்கறியா?"

"தப்பில்லைன்னு நினைக்கறேன் அப்பா. உலகம் மாறிட்டிருக்கு. காலமாற்றத்துக்கு ஏற்ப நாமும் மாறுவது தப்பில்லையே?"

"அதுக்காக?"

"யாரோ ஒரு பெண்ணுக்காக நான் வக்காலத்து வாங்கறதா நினைக்காதீங்க. இந்தக் காலத்துல ஆண்களோடு பேசற பெண்கள், பெண்களோடு பேசற ஆண்கள் இவங்களெல்லாம் கல்யாணம் செஞ்சுக்கத் தகுதி இல்லைன்னு நினைச்சிங்கன்னா — ஸாரி, இது பிரும்மச்சாரிகளோட உலகமா ஆயிடும். ஐமீன் ஒருத்தருக்கும் கல்யாணம் கிடையாது."

சிவராமனுக்குப் புரியவேயில்லை. அந்தப் பெண்ணை மட்டுமல்ல, தன் மகனையும்!

இரட்டைச்சுமை எதற்கு?

“குழம்பில் புளி உண்டு; உப்பு உண்டு; மிளகாய் உண்டு. இப்படிப் பல சுவைகள் இருந்தும் தனித்தன்மை கெடாமல் அவை ஒன்றுபட்டுச் சுவை கூட்டுகிற மாதிரிதான். வைஷ்ணவர், சைவர், மாத்வர் என்று தனித்தனியே இருந்தாலும் அவரவர் ஸ்வதர்மத்தை விட்டு விடாமல் லோக க்ஷேமத்திற்காக ஒன்றுபட வேண்டும்...” என்கிறார் அஹோபில மடத்தின் நாற்பத்தைந்தாவது ஜீயர், ஸ்ரீ நாராயண யதீந்த்ர மகாதேசிகர் சுவாமிகள். தற்சமயம் சென்னைக்கு வந்திருக்கிறார், ஜீயர்.

சுவாமிகள் ஆதங்கப்படுவது ஹிந்துக்களிடையே கூட ஒற்றுமையின்மை நிலவுவதைப் பற்றித்தான். நீதிமன்றங்களில் ஏராளமாகத் தேங்கியுள்ள வழக்குகள் ஹிந்து ஆலயங்கள் தொடர்பானவையாகவே உள்ளனவாம்.



“வசிஷ்டர் தபஸ் பண்ணிக் கொண்டே இருந்தார். அதன் பலனாக சூர்ய வம்சம் தழைத்தோங்கியது. அதே போல் துறவிகள் தன்னலம் இல்லாமல் ‘சஞ்சாரம்’ பண்ணிக்கொண்டு, உபதேசங்கள், நல்லுரைகள் மூலம் ஜனங்களை நல்வழியில் கொண்டு செல்வதுதான் சமுதாயப் பணி. மூச்சு விடுவதில் கூட லோக க்ஷேமார்த்தம்தான் இருக்க வேணும். ஒரு பொறுப்புள்ள கணவன் குடும்பத்தைப் பராமரிக்கிற மாதிரி, சமுதாயமாகிய பெரிய குடும்பத்துக்காக துறவிகள் ‘சஞ்சாரம்’ பண்ணுவது, உபதேசம் பண்ணுவது எல்லாம் ஏற்பட்டது” என்று சொல்கிற ஜீயர் சுவாமிகள், பெண்கள் விஷயத்தில் சொல்லும் கருத்துக்கள் பழைமைவாதம் என்று பட்டாலும், “இதுதான் யதார்த்தம்!” என்கிறார் சுவாமிகள்.

“வேதகாலத்திலேயே மைத்ரேயி, கார்க்கி என்றெல்லாம் பெண்கள் கல்வியறிவில் சிறந்து விளங்கியிருக்கிறார்கள். இந்த கார்க்கி என்கிற பெண் யாக்ஞவல்கியரையே வாதத் திறமையால் மடக்கியவர். இராமாயணத்து சீதாப்பிராட்டியும் ‘அபிக்ஞா ராஜதர்மாணாம்’ என்ற குறிப்பின்படி நன்கு கற்றறிந்தவளாகவே சொல்லப்படுகிறாள். ஆகவே பெண்களுக்குப் படிப்பு என்பது மிக மிக அவசியம். அதுவும் இந்தக் காலத்து ‘மூட்டைப் புத்தகப் படிப்புக்கு’ குழந்தைகளுக்கு எவ்வளவோ கற்றுத் தரத் தாயார் படித்திருந்தால்தான் உதவ முடியும். ஆனால் அவர்கள் உத்தியோகம் என்று தேடிப் போவானேன்? வீட்டு வேலைகளோடு கணவனின் சம்பாதிக்கிற பொறுப்பையும் சேர்த்து ஏன் சுமக்க வேண்டும்? இரட்டை வருமானம் என்று வருகிறபோது ஹோட்டல் அது இது என்று விரயமான செலவுதானே அதிகமாகிறது?” என்று கேட்கிறார்.

கூட்டுக் குடும்ப முறை சீர்குலைந்ததுதான் சகிப்புத்தன்மையை மக்கள் இழந்ததற்குக் காரணம் என்றும் குறிப்பிடுகிறார் ஜீயர். “ஒரே குடும்பமாக, விட்டுக் கொடுத்து, பெரியவர்களின் கண்காணிப்பில் வாழ்ந்தபோது குடும்பக் கலாசாரம் பிறழாமல் பேணப்பட்டு வந்தது. தவறு செய்ய முடியாத தார்மிக அச்சம் இருந்தது. பெரியவர்களை மதித்துக் கீழ்ப்படிந்து பக்தியோடு வாழ்ந்த அந்த மாதிரியான கூட்டுக் குடும்பங்களில்தான் பெரிய மகான்கள் தோன்றியிருக்கிறார்கள்” என்றும் சுட்டிக்காட்டுகிறார், ஆன்மீகப் பணிகளோடு ஏராளமான சமுதாயப் பணிகளையும் செய்துவரும் ஜீயர் சுவாமிகள்.

- கலைசைக்கிழார்





அவ்வை சண்முகி

'கதையில் புதுமை' என்கிற விஷயமெல்லாம் மலையேறி, இப்போது கேரக்டர்களில் புதுமை என்கிற புதிய தளத்துக்குத் தமிழ் சினிமாவைக் கூட்டி வந்திருக்கிறார் கமல். அந்த வகையில் இந்தியன் தாத்தாவுக்கு அப்புறம் இப்போது சண்முகி மாமி.

அந்த மடிசாரக் கட்டு கமலுக்கு நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் எத்தனை மெனக்கெட்டிருப்பினும் மாமி மேக்-அப்தான் பொருந்தவில்லை. மாமாவுக்கும் மாமிக்கும் இடையே ஒரு சோமாவாக இருக்கிறது. தவிர ஒரு முழுநீள நகைச்சுவைப் படத்துக்கு முக பாவங்கள் மிக முக்கியம். இதில், கமல் தம் முகத்துக்கு ஒரு மூடி போட்டுக் கொண்டதாலோ என்னவோ, பாவங்கள் அற்று, எத்தனைய தருணத்துக்கும் அந்த மாமி முகம் ஒரே மாதிரி கல்லூரி பிள்ளையார் எக்ஸ்பிரஷன் தான் தருகிறது. குறிப்பாக, கமல் சிரிக்க முயல்கிறபோதெல்லாம் கன்னங்களில் விழுகிற அந்த மடிப்பு என்னவோ போல் இருக்கிறது.

நிற்க. கதையைப் பார்க்கலாம். அற்ப காரணங்களுக்காக விவாகரத்து வாங்கிக் கொண்டு போய்விடுகிற மனைவி மீனாவையும் குழந்தையையும் (யார் அந்தப் பாப்பா? அசாத்தியமான நடிப்பு!) பிரிந்திருக்க முடியாமல் வேலைக்காரி வேஷத்தில் அவர்கள் வீட்டுக்குப் போகிறார் கமல். அங்கே நடக்கிற கூத்தெல்லாம்தான் கதை.

தரமான நகைச்சுவைக்கு எத்தனையோ வாய்ப்பிருந்தும் பயன்படுத்திக் கொள்ளாமல் மிகவும் கண்ணியக் குறைவான காட்சிகள், வசனங்களால் இட்டு நிரப்பியிருப்பது- கமலுக்குத் தேவையில்லை என்று சொல்லித்தான் ஆக வேண்டும்.

ஆணாயிருக்கும் கமலை ஹீரா துரத்திக் காதலிப்பது ஒரு பக்கம்; பெண் வேஷ மாமி கமலை ஜெமினிகணேசனும் மணிவண்ணனும் வேறு போட்டி போட்டுக் காதலிக்கிறார்கள்!

ஹீராவின் காதல் துரத்தலைக் கவர்ச்சிக்காக என்று சமாதானம் கொண்டாலும் ஜெமினி கேரக்டர்தான் ஜீரணிக்கும்படி இல்லை. சிற்சில இடங்கள் அருவருப்பின் உச்சத்தைத் தொடுகிறது. உதாரணத்துக்கு அந்த எண்ணெயைக் கொட்டி வழுக்கி விழ வைக்க முயல்கிற காட்சி.

இன்னொரு விஷயம். ஒரு குறிப்பிட்ட சமூகத்தவரை இழிவு படுத்தும் விதமாகக் காட்சிகள் அமைப்பதில் சமீபகாலமாக நம் சினிமாக்காரர்கள் மிகத் தீவிரமாக இயங்கி வருவது தெரிகிறது. இந்தப் படமும் விலக்கல்ல. தீவிர வைதிக குடும்பமாகக் காட்டப்படும் மீனாவின் வீட்டில், முதலாளி ஜெமினி முதல் தொழிலாளி டெல்லிகணேஷ் வரை வீட்டிலேயே குடிப்பதும் பெண்பித்தர்களாக அலைவதுமாகக் காட்டுவது என்னவோ போல் இருக்கிறது. இதையெல்லாம் கூட சென்ஸாரில் கவனித்துக் கேட்டால் தேவலை. ஆனால், தேவையே இல்லாத பாத்ரூம் காட்சிகள், இரட்டை அர்த்த வசனங்களையெல்லாம் கூடப் 'பெருந்தன்மை'யாக அனுமதித்திருக்கிறவர்களிடம் இதனை எதிர்பார்ப்பதும் தவறுதான்.

வியாபார ரீதியில் இந்தப் படம் ஒரு வேளை மகத்தான வெற்றிகளைப் பெறக் கூடும். ஆனால் கமலஹாசன் போன்ற நல்ல கலைஞர்கள் கூட வணிகத் தேவைகளுக்காக எத்தனை தூரம் மலினப்பட்டுப் போக முடியும் என்பதற்கு இதை விடச் சிறந்த உதாரணம் காட்ட முடியாது.

— ஆர்.பி.ஆர்.

பாதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி, பாதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா, விளம்பரம் : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - விமானத் தபால் : ரூ. 525/-.

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / MS (S) M4392 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka

